

கல்கி
KALKI 4-4-82 ரூ.1.20


டிப்பிஸ் ட டிப்பிஸ் டோய்
வருவீர்
டிப்பிலாண்ட்
Dipy's
ORANGE SQUASH
Dipy's
ஒப்பில்லை இது டிப்பிஸ் டோய்!


மிராஜ்-2000

பொன் விழா ஆண்டினைக் கொண்டாடும் நமது விமானப் படையினருக்கு மிராஜ் போர் விமானங்களை பிரான்ஸ் நாட்டிலிருந்து வாங்கித் தர அரசு தீர்மானித்துள்ளது. மிராஜ் பற்றி :



மிராஜ் விமானம்

ஒலியின் வேகத்தை விட அதிவேகம் கொண்ட சூபர்சானிக் விமானம். இதன் அதிகபட்ச வேகம் இரண்டு மாக். (Mach) ஒரு 'மாக்' வேகம் என்றால் எவ்வளவு? ஒலியின் வேகம் எவ்வளவோ, அவ்வளவு. ஒலியின் வேகம் சூழ்நிலையின் உஷ்ணத்துக்கும் அதில் நிலவும் காற்றின் அடர்த்திக்கும் ஏற்ப வேறுபடும் என்பதால் மிராஜ் மணிக்கு சுமார் 500 முதல் 700 மைல் வேகத்தில் பறக்கும் எனலாம். ஓசையின் வேகமும் விமானத்தின் வேகமும் ஒன்றிப் போய்விடுகிற நிலையில் வருகிற சத்தத்துக்குத் தான் சூப்பர்சானிக் ஓசை என்கிறார்கள். இடியோசை போலிருக்கும். நாற்பத்தையாயிரம் முதல் அறுபதாயிரம் அடி உயரத்தில் பறக்கும் மிராஜ் சீறிப் பாய்ந்து அதி வேகத்தில் அதிகபட்ச உயரத்தைத் தொடும் சக்தி வாய்ந்தது. ஆகாயத்தில் இது செய்கிற சாகச வேலைகள் பல: உருளும், புரளும், குட்டிக்கரணமா, அதுவும் அடிக்கும்! பக்கவாட்டிலே பாய்ந்து செல்லும். சூபீரென்று டைவ் அடிக்கும். லேசானது. எதிரி விமானத்தின் மீது பொழியத் துப்பாக்கிக் குண்டுகளைத் தவிர ஏவுகணைகளும் உண்டு. எதிரி விமானம் திசை திரும்பினும் அதற்கேற்ப இந்த ஏவுகணைகளும் திசை மாறிச் சென்று தாக்கி அழிக்கும் ஆற்றலுடையவை. இவற்றை எல்லாம் இயக்குவது பைலட்டே.



பாகிஸ்தான் பெற்றுள்ள அமெரிக்க F-16 விமானம் ஏவுகணையை அனுப்புகிறது.

தாம்பரத்தில் விமான வித்தைக் காட்சியில் "ஹண்டர்" விமானங்கள்



மிராஜில் உள்ள திசை காட்டிக் கருவிகள் பகலிலும் இரவிலும் பைலட்டுக்குத் திசை காட்டி. அழைத்துச் செல்லும் சக்தி வாய்ந்தவை. மிக மோசமான பருவ கால நிலைகளிலும் கூட பைலட்டைக் கைவிடாது. பறக்கத் தகுதியில்லாத மோசமான பருவ கால நிலைகளில், 'போகாதே ஐயா, போகாதே' என்று முன்னெச்சரிக்கை தரும்.

விமானத்தைக் கைவிட வேண்டிய இக்கட்டான சமயம் நேர்ந்தால் ஒரு பட்டனை அழுத்தினால் போதும் பைலட் வெளியே தூக்கி எறியப்பட்டுவிடுவார். பின்னர் பாராசூட் விரிய மெல்லத் தரையில் இறங்கிவிடலாம். விமானத்தைப் பறி கொடுத்தாலும் பைலட் உயிர் பிழைக்க வாய்ப்புண்டு. எதிரியின் போர் விமானத்துடன் நடு வானில் மல்லுக்கு நிற்கவும், அதனுடன் துவந்த யுத்தம் செய்யவும் மிராஜ் எப்பவும் தயார்.

மிராஜ் விலை கிட்டத்தட்ட நாலு கோடி ரூபாய். பாகிஸ்தான் பெற்றுள்ள அமெரிக்க எப்-16 போர் விமானத்துக்கு ஈடு கொடுக்கக் கூடிய வல்லமை மிராஜுக்குத்தான் உண்டு என்கிறார்கள்.

— சாருகேசி

சோ

எனது நம்பிக்கைகள்



ஓர் இந்தியன் என்ற முறையிலும் ஜனநாயகவாதி என்ற அளவிலும் நீதி மன்ற சுதந்திரத்தை நான் மிகவும் மதிக்கிறேன். உயர்நீதிமன்ற நீதிபதிகளை அடிக்கடி வெவ்வேறு ஊர்களுக்கு மாற்றி உத்தரவுகள்போடுவதன் மூலம்தான் நீதி மன்ற சுதந்திரத்தைக் காப்பாற்ற முடியும் என்பதும் எனக்குத் தெரியும். ஒரே ஒரு குறை என்னவென்றால் சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளையும் இங்குமங்குமாக டிரான்ஸ்ஃபர் செய்து உத்தரவு பிறப்பிக்க முடியாமல் இருக்கிறதே என்பதுதான். இதைச் செய்வதும் சாத்தியமானால் நீதிமன்ற சுதந்திரம் இன்னும் சிறப்பாகப் பாதுகாக்கப்படும் அல்லவா! ஆனால் எனக்கு இதில் உள்ள சிரமம் புரியாமல் போகவில்லை. நாட்டில் இருப்பதோ ஒரே ஒரு சுப்ரீம் கோர்ட். எப்படி நீதிபதிகளை டிரான்ஸ்ஃபர் செய்ய முடியும்? எனவேதான் சட்டக் கமிஷன், அரசியல் சாசனம் தொடர்பான வழக்குகளை விசாரிக்கத் தனி சுப்ரீம் கோர்ட் வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. இந்த யோசனையை நான் மனமார வரவேற்கிறேன். அரசியல் சாசன சுப்ரீம் கோர்ட் இயங்கத் தொடங்கும்போது நீதிபதிகளை சுப்ரீம் கோர்ட்டிலிருந்து சாஸன கோர்ட்டுக்கு டிரான்ஸ்ஃபர் செய்ய வாய்ப்பிருக்கும். சாசனக் கோர்ட்டை அந்தமானிலோ அல்லது அஸ்ஸாமிலோ இயங்கச் செய்தால் டிரான்ஸ்ஃபர் உத்தரவுகள் அர்த்தமுள்ளனவாகவும், பலன் தருவனவாகவும் விளங்கும்.

நீதி மன்ற சுதந்திரத்தில் எனக்கு இருக்கிற அபரிமிதமான நம்பிக்கை காரணமாக, ஜனாதிபதி ஆட்சி முறையை அமல்படுத்தும் சாசனத் திருத்தத்தை சுப்ரீம் கோர்ட் நிச்சயம் அங்கீகரித்து விடும் என்று எதிர்பார்க்கிறேன். நாம் இன்று சந்திக்க நேரிடும் துன்பங்கள் எல்லாவற்றுக்கும் — விலைவாசி உயர்வு முதல் அத்தியாவசியப் பண்டங்கள் பற்றாக்குறை வரை அனைத்துக்கும் காரணம் இந்த நாடாளு மன்ற ஜனநாயக முறையே என்பது எனக்கு நன்றாகப் புரிகிறது. நம்மை அழிவை நோக்கி அழைத்துச் செல்லும் இந்த நாடாளு மன்ற ஜனநாயக முறையை கொஞ்சம் கூட யோசனை யின்றி நேரு, ஆஸாத், பட்டேல் போன்றவர்கள் நம் தலையில் கட்டிவிட்டுப் போய்விட்டார்கள். இன்று ரயில் தண்டவாளத்தை விட்டு இறங்குகிறது. உற்பத்தி குறைகிறது. பண வீக்கம் அதிகரிக்கிறது என்றால் எல்லாம் இந்த நாடாளு மன்ற ஜனநாயகத்தினால் வந்த வினைதான். ஜனாதிபதி ஆட்சி முறை வந்ததும் சராசரி இந்தியனின் வாழ்க்கை ஒளிமயமானதாகவும் ஆரோக்கியமானதாகவும் விளங்கும். விலைவாசிகள் குறையும். ஊதியங்கள் அதிகரிக்கும். ரயில்கள் ஒன்றோடொன்று மோதிக்கொள்ளவே செய்யாது. காலா காலத்தில் மழை பெய்யும்!

இன்று நமக்குள்ள கஷ்டங்கள் பற்றி எண்ணும்போது எல்லாவற்றையும் விட விலைவாசி உயர்வு பற்றித்தான் நான் உண்மையிலேயே ரொம்பக் கவலைப்படுகிறேன். இருந்தாலும் பாரதப் பிரதமர், 'விலைவாசிகள் இவ்வளவு உயரக்காரணம் ஜனதா ஆட்சிதான் என்று கண்டு பிடித்துக் கூறியதால் கொஞ்சம் மன நிம்மதி ஏற்பட்டிருக்கிறது. மொரார்ஜி ஆட்சியில் ஒரு திட்டமிட்ட சதி நடந்திருக்கிறது. அடுத்தாற்போல் பதவிக்கு வரும் இந்திரா ஆட்சியில் விலைவாசிகள் உயர வேண்டும் என்பதற்காகவே அவர்கள் தங்கள் ஆட்சிக் காலத்தில் விலைவாசிகளை மிகவும் குறைத்திருந்தனர்! என்ன அக்கிரமம் பாருங்கள்!

ஜனதா ஆட்சிதான் விலைவாசி உயர்வுக்குக் காரணம் என்று சொன்ன மூச்சோடு பிரதமர், 'இந்த விலைவாசி உயர்வானது உலகெங்கும் காணப்படுகிற ஓர் அம்சம்' என்றும் சொல்லியிருக்கிறார். இதிலிருந்து ஜனதாவின் திட்டமிட்ட சதி உலகளாவிய சதி என்று தெரிய வருகிறது. அவர்கள் திறமையின்மை உலகையே பாதித்திருக்கிறது! உலகமே சர்வநாசமடைய வழி வகுத்த உதவாக்கரை ஜனதா ஆட்சியிலிருந்து நம்மைக் காப்

பாற்றிய பிரதமர் நமது நன்றிக்குப் பாத்திரமாகிறார்.

உதவி, மிகப் பெரிய உதவி கிடைக்கப் போவதால் நமது கஷ்டங்களுக்கெல்லாம் விடிவு காலம் வந்து விட்டது என்று உணர்ந்து நான் சந்தோஷத்தில் திக்குமுக்காடிப் போகிறேன். சர்வ தேச நிதி நிறுவனம் 5000 கோடி ரூபாய் கடன், தவணை முறையில் தர ஒப்புக் கொண்டிருக்கிறது! நமது தாய் நாடு, உலகிலேயே மிகப் பெரிய கடனாளி என்ற பெருமையை அடையப் போகிறது என்பதை நினைத்துப் பார்க்கும்போதே மெய் சிலிர்க்கிறது! இந்தத் தாராளமான உதவியைப்பெற நாம் சில சின்னச்சின்னத் தியாகங்களைத்தான் செய்ய வேண்டியிருக்கும். வேலை நிறுத்தம் செய்யும் உரிமையைத் துறந்து விடவேண்டும். அப்புறம் இங்குள்ள சிறு தொழில்களுக்குக் கடன் வசதி கிடைக்காவிட்டால் பாதகமில்லை என்று விட்டுக் கொடுத்து, சர்வதேச பகாசுரத் தொழில் வர்த்தக நிறுவனங்களைக் கைநீட்டி வரவேற்று உபசரிக்க வேண்டும்.

5000 கோடி கடன் பெற்றுத் தருவதில் வெற்றி அடைந்துள்ள ஆர். வி.க்கு நான் நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் அவர் வேறு அமைச்சகத்துக்கு மாற்றப்பட்டிருப்பதால் எனக்குக் கொஞ்சம் குழப்பமாக இருப்பதையும் கூறித்தானாகவேண்டும். நிதி அமைச்சர் என்ற முறையில் ஆர். வி. ஒன்று, சிறப்புப் பணி ஆற்றியிருக்க வேண்டும், அல்லது மோசமாகச் செயல்பட்டிருக்க வேண்டும். அவர் திறம்படப் பணியாற்றி இருந்தாரெனில் இப்போது நிதி அமைச்சகம் ஒரு திறமைசாலியை இழந்து விட்டிருக்கிறது. அவர் மோசமாகச் செயல்பட்டாரெனில் இப்போது பாதுகாப்பு அமைச்சகம் ஆற்றலற்ற ஒருவரை அமைச்சராகப் பெற்றிருக்கிறது. ஆனால் இப்படியெல்லாம் எண்ணுவது பிற்போக்கான சிந்தனை. ரொம்பத் தப்பு. நாம் முற்போக்குச் சிந்தனை உடையவர்களாக இருத்தல் வேண்டும். ஆர். வி. இலாக்கா மாறியதன் காரணமாக நிதி அமைச்சகத்துக்கு ஒரு பெருஞ் சுமை குறைந்ததென்றும் அதே சமயம் பாதுகாப்பு அமைச்சகம் ஒரு பெருஞ் செல்வத்தைப் பெற்றதென்றும் கருத வேண்டும். இவ்விதம் சிந்திக்கப் பழகினால் இது வரவேற்கப்பட வேண்டிய இலாக்கா மாற்றம் என்பது புரியும்.

நமது பேரதிர்ஷ்டம், நமது நாட்டில் நமக்குக் கிடைக்கிற கேளிக்கைக் களியாட்டங்களுக்கு எல்லையே இல்லை. சினிமா, நாடகம், சர்க்கஸ், காபரே, போதாக் குறைக்கு எதிர்க் கட்சிகளின் இணைப்பு முயற்சி. மற்ற எல்லாவற்றையும் விடக் கடைசியாகக் குறிப்பிட்ட கேளிக்கைதான் ரொம்ப சுவாரஸ்யமானது. இதில் சஸ்பென்ஸ் அம்சத்தை பவார் கவனித்துக் கொள்கிறார்; சோகத்தை சந்திரசேகர் சித்திரிக்கிறார்; சிரிப்புக் காட்சிகளுக்கு சரண் சிங் இருக்கிறார். இதைவிட ஒரு சிறந்த மசாலாப் படத்தை எங்கே காண முடியும்? அதுவும் இலவசமாக!

ஓர் இந்தியன் என்ற முறையில் சில விஷயங்களை நான் மறந்துவிட வேண்டியது என் கடமை என்று உணர்ந்திருக்கிறேன். மாருதி, நகர்வாலா, எல். என். மிச்ரா, துருக்மான் கேட் என்று பட்டியல் நீளுகிறது. மறக்க வேண்டியவை பட்டியலில் தேர்தல் வாக்குறுதிகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஆனால் ஒன்று, இந்த வாக்குறுதிகளைப் பட்டியல் போடுவது, அசாத்தியம் என்று தோல்வியை ஒப்புக்கொண்டுவிட வேண்டியதுதான்.

நாட்டின் எதிர்காலத்தில் நான் ரொம்ப நம்பிக்கை வைத்திருக்கிறேன். சஞ்சை காந்தியின் விமானம் விழுந்து நொறுங்கிய போது இந்த நாடு நாசமாய்த்தான் போகப் போகிறது என்று எண்ணினேன். ஆனால் ராஜீவ் என் கவலையை உணர்ந்து, கருணை கூர்ந்து அரசியலில் நுழையச் சம்மதித்தார். அதனால் இப்போது எதிர்காலத்தை நம்பிக்கையோடு என்னால் சந்திக்க முடிகிறது.

என்ன செலவானாலும் சரி, எப்பாடு பட்டேனும் ராஜீவ் காந்தி ஓர் அப்பழுக்கற்ற தலைவர் என்ற பிரபையை வளர்த்தாக வேண்டும். பாரதக் குடிமகன் என்ற முறையில் நான் இதில் மிகவும் கருத்துடையவனாக இருக்கிறேன். அவர் எங்கே சென்றாலும் ஏராளமான செலவில் கோலாகலமான வரவேற்பு அளிக்கப்பட வேண்டும். அப்போது தான் அவர், 'இந்த அமர்க்களமெல்லாம் எதற்கு?' என்று கோபப்பட்டுக் கூச்சலிட முடியும். அப்போதுதான் அகில உலகமும் அவர் எவ்வளவு எளியவர் என்பதைப் புரிந்து கொள்ளவும் முடியும். முதல்வர்களின் சுய கௌரவம் என்ன ஆவது; அரசாங்க கஜானாவிலிருந்து எவ்வளவு பணம் கரைவது என்றெல்லாம் பார்க்கக் கூடாது. ராஜீவின் பிரபையை வளர்ப்பதென்பது இந்த அற்ப விஷயங்களை விட மிக முக்கியமானது. ராஜீவ் அரசியலில் புகச் சம்மதித்ததற்காகத் தேசமே அவருக்குக் கடன் பட்டிருக்கிறதல்லவா? அந்தக் கடனுக்காகத் தேசத்தையே அவரிடம் அடமானம் வைப்போம்.

அன்புள்ள வாசகரே! இவையெல்லாம் தான் என் நம்பிக்கைகள், எதிர்பார்ப்புக்கள், நோக்கங்கள். நீங்கள் என்னுடன் கருத்தொருமித்துப் போவீர்கள் என்றே நினைக்கிறேன்.

படுத்துத் தூங்குங்கள். இன்று நாட்டு நிலைமை எவ்வளவு மோசமானதாக இருந்தாலும் நாளை இதைவிட மோசமாக இராது என்று ஆறுதல் பெறுங்கள். நாளை என்ன பயங்கரங்களை எதிர்நோக்க நேர்ந்தாலும் நாளை மறுதினம் நாளையை விட மோசமானதாய் இராது என்று ஆறுதல் பெறுங்கள். நாளைக்கு மறுநாள்....

Courtesy: Sunday Midday

படம்: உத்ர



வட்டமேஜை

● புதுதில்லி "டைம்ஸ் ஆப் இந்தியா" கிரிக்கெட் விசேஷ நிருபர் ஸ்ரீமான் கிரிக்கெட்டில் வன்முறையும் சூதாட்டமும் புகுந்துவிட்டதே என்று அங்கலாய்க்கிறார்:

விளையாட்டு அரங்கில் கலாட்டா நடப்பது கல்கத்தாவின் தனிப் பெருமையாக இருந்தது. ஆனால் அது தற்பொழுது தென்னகத்தின் தவப் பெருமையாக ஆகிவிட்டது.

அருவருப்பான சம்பவங்களுக்கு மூலகாரணம் ஸ்ரீனிவாசன், வாஸுதேவன் போன்ற இளைஞர்கள் அம்பயருக்கு எதிராக வெறுப்புணர்ச்சியைத் தூண்டியதுதான்.

என் மதிப்புக்குரிய நண்பரும் விமரிசகருமான "ராஜா" சுந்தரேசன் எழுதின மாதிரி அம்பயர் தீர்ப்பைச் சந்தேகித்தால் ஆட்டத்தின் அடித்தளமே கிடுகிடுக்கும்.

இன்றைய விளையாட்டு வீரர்களின் ஒரே குறிக்கோள், மிகக் குறுகிய காலத்தில் எவ்வளவு பணம் ஈட்டுவது என்பதுதான். தென்னாட்டு ரசிகர்களில் எத்தனை பேருக்குத் தெரியும், சமீபத்தில் நடந்த கான்பூர் டெஸ்டில் வேண்டுமென்றே இந்தியக் குழு இங்கிலாந்துக் குழுவின் ரன் தொகைக்குப் பின் தங்கியதென்று? விஷயம் இதுதான்: ஒரு பெரும் பந்தயக்காரர், இந்தியக் குழு பின் தங்கிவிட்டால் ஒரு பெருந்தொகை தருவதாகச் சொன்னாராம்! இங்கிலாந்து எடுத்த 378 ரன்களுக்கு எதிராக, இந்தியா 377 ரன்கள் அடைந்தவுடன், கவாஸ்கர் இந்திய இன்னிங்ஸை "டிக்ளேர்" செய்துவிட்டார். காரணம்: ஒருவேளை, இங்கிலாந்து பௌலர் இரண்டு நோ பாலோ வைடோ (wide) போட்டுவிட்டால், இந்திய ரன் தொகை இங்கிலாந்தின் தொகையை மிஞ்சிவிடும் என்ற பயத்தினால்.

யார் சொன்னது, சூதாட்டம் கிண்டியில் மட்டும்தான் என்று?

புதுதில்லி ஸ்ரீமான்

● எதிர்க் கட்சிகளிடம் மக்கள் நம்பிக்கை இழந்து விட்டார்கள் என்று இந்திரா கூறுவது எல்லாம் மக்களைத் திசை திருப்பச் செய்யும் முயற்சியாகும். சந்திரசேகர், சரண்சிங், பவார் இணைப்புப் பற்றி பேச்சு என்றதும் அவருக்கு வயிற்றில் புளியைக் கரைக்க ஆரம்பித்து விட்டது. எதிர்க் கட்சிகள் பாராளு மன்றத்தில் ஒற்றுமையாகச் செயல்படும் விதம் ஒன்றே போதும். நாட்டைக் காப்பாற்ற ஒரே வழி, பழைய தவறுகளை யெல்லாம் மறந்து எதிர்க்கட்சியினர் மீண்டும் ஒன்று சேர்ந்து ஒரு புதிய சகாப்தத்தை உண்டாக்குவதுதான்.

ஹோசூர் ஆர். ரமேஷ்

● இன்றைய அரசியலையும் அரசியல்வாதிகளையும் சோ 'துக்ளக்'கில் திட்டுவது போதாதென்று கல்கியிலுமா? மனுஷர் இந்த விஷயத்தில் மட்டும் விட்டுக் கொடுக்கமாட்டார். திட்ட இடம் கிடைத்தால் போதும். மாட்டிக்கொள்பவர்கள் பாடு திண்டாட்டம் தான். மாதம் இரு முறைதான் துக்ளக்கில் அவரை ரசிப்போம். இனி வாரா வாரம் ரசிக்க வாய்ப்பளித்த உமக்கு நன்றியோ நன்றி.

விராலிமலை எஸ். நாகராஜன்

● நடிகர் திலகம் சிவாஜி கணேசன் எம்.பி. ஆனதும் அவரது படத்தை அட்டையில் போட்டுத் தலையங்கம் எழுதி முதலில் சிறப்பித்தது கல்கிதான். அடுத்து அவரது பிள்ளைகள் அராஜக வழியில் சென்றதைக் கண்டித்துத் தலையங்கம் தீட்டியிருந்ததும் கல்கிதான். இந்தக் கல்கியின் நடுநிலையைப் பாராட்டுகிறேன்.

மதுரை நாகுவேலன்

● வாசகர்களுக்குப் பொக்கிஷமாக சுஜாதாவின் வண்ணப் படத்தை வழங்கியதற்கு நன்றி.

கோபி இளஞ்சேரன்

● 'பொக்கிஷம்' பகுதியில் சுஜாதா யாருடைய கடிதமும் தன்னிடம் இல்லை எனக் கூறியுள்ளார். ஆனால் சுமார் ஒரு வருடம் முன்பு அவர் தயாரித்த சாவி இதழில் ஆனந்த விகடன் ஆசிரியர் க. செண்பகப்பூ பற்றி எழுதிய கடிதம் தம்மிடம் பாதுகாப்பாக வைத்திருப்பதாகக் கூறினார். ஒருவேளை ஒரு வருடத்துக்குள் தூக்கிப் போட்டு விட்டாரா? தெரிய விரும்பும்,


சென்னை-45 கணபதி சுப்பிரமணியம்

● 'உடன் பிறந்தோரின் முன்னேற்றமே எங்கள் வருங்காலத்துக்கான சேமிப்பு', 'சம்பாதிக்கிற காசைப் பெண்டாட்டியிடம் கொடுத்தால் அஞ்சு பைசாவும் அஞ்சு ரூபாயா மாறும்' — "வரிசை"யில் உழைப்பாளர்கள் உதிர்த்த பொன்மொழிகளை ரசித்துப் படித்தேன். "காலனிக் கலைஞர்" எனத் தாங்கள் அழைக்கப்பட வேண்டும் என்று பேட்டியில் கூறியிருந்த கோபாலகிருஷ்ணனைச் செருப்புத் தொழிலாளி என்று பேட்டியிலும் படத்திலும் தாங்கள் குறிப்பிட்டிருந்ததைக் கண்டு மனம் வருந்தினேன்.

மதுரை பி.எல். பரமசிவம்

ஆங்கிலத்தில்

பேசக் கற்றுக்கொள்ளுங்கள்



Big Size
384 Pages
Price 21/-
Postage
Rs. 4/-

RAPIDEX
ENGLISH SPEAKING COURSE


தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி, மராட்டி, வங்காளம், பஞ்சாபி மற்றும் குஜராத்தி மொழிகளில் தனித்தனியாகக் கிடைக்கும்.

- எளிய நடையில் பயனுற அமைந்த 'ரெபிடெக்ஸ் இங்கிலீஷ் கோர்ஸி'னைத் தாமே பயின்று ஆங்கில மொழி வட்டாரங்களில் வெற்றி நடை போடுங்கள்.
- மொழியியல் அடிப்படையில் இதன் புதுமுறை அமைப்பும், தெளிவான மொழி நடையும் படித்த மாத்திரத்திலேயே மனதிற் பதியவைக்க வல்லது.
- இதுவரை 80 லட்சம் பேர் படித்துப் பயன் பெற்றது.
- ஆசிரியர்கள், அறிஞர்கள் மற்றும் கல்வியாளர்களால் பரிந்துரைக்கப் பட்டது.
- பெயர் பெற்ற பத்திரிகைகளின் விமரிசனக் குழுவினரால் புகழாரம் சூட்டப்பட்டது.

மொழியைக் குறிப்பிட்டு ஆர்டர் அனுப்புக.

கடிதம் எழுதக் கற்றுக்கொள்ளுங்கள்

Big Size
394 Pages
Price 21/-
Postage
Rs. 4/-



கடிதங்கள் வரைவது விளையாட்டல்ல. ஆனால் உங்களுக்காக இக் கலையை விளையாட்டைப் போலச் செய்து தந்துள்ளோம். நண்பருக்குக் கடிதம் எழுதுங்கள் அல்லது நிறுவனத்துக்கு எழுதுங்கள்—எந்தச் சூழ்நிலையிலும் உங்களுக்கு உதவுவது

Rapidex
Self Letter Drafting Course

இதன் சிறப்பியல்புகள் —

- விதவிதமான வாக்கியங்கள், பல வேறு சொற்றொடர்கள்.
- ஒரே சூழலில் விதவிதமான வாக்கியங்கள், பல்வேறு சொற்றொடர்கள்.
- விரும்பும் வாக்கியங்களை நீங்களே தேர்ந்தெடுக்கலாம்.
- வேண்டியபடி கோர்வையாக அமைத்துக்கொள்ளலாம்.
- நீங்கள் விரும்பிய கடிதம் இதோ தயார்.

மன உளைச்சலின்றி முதற்தரமான கடிதங்கள் வரைய அற்புத சாதனம்.


மூன்று பகுதிகளாக அமைந்த இப் புத்தகம் சொந்த, சமூக, வணிகக் கடிதங்கள் வரையவும், வேலைக்கான விண்ணப்பங்கள் எழுதவும் நம்பகமான வழிகாட்டி.


AVAILABLE AT leading book shops, A. H. Wheeler's and Higginbotham's Railway Book Stalls throughout India.


or ask by V.P.P. from

PUSTAK MAHAL **KHARI BAOLI DELHI-6**
New Show Room : 10-B, Netaji Subhash Marg, Darya Ganj, New Delhi-2

VANDANA/PM/Tam 1


எர்ஷாத்
பங்களா தேஷ்


அஞ்சையா
ஆந்திர முதல்வர்
இ. காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் கட்சி விலகல்
• என்.டி. ராமராவின் புதுக் கட்சி
சிமெண்ட் ஊழல்
நெருப்பு.. நெருப்பு!
நெருப்பு கிடக்கட்டும்!.. நீ புகைச்சிருக்குன்னு எந்தத் துரோகி உங்க கிட்ட சொன்னது?...



கொர்.... கொர்....

அமைச்சர் கல்பனாத் ராய் ராஜ்ய சபையில் கொர்.... கொர்.... என்று குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார். இதற்காக அவரைக் கிண்டல் செய்வதில் அர்த்தமில்லை. தேசமே எத்தனையோ பல பிரச்னைகளில் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருக்கும்போது பாவம், கல்பனாத் ராய் மட்டும் ஏன் சற்றுக் கண்ணயரக் கூடாது?

ஹைதராபாத் அருகே அணு நிலையமொன்றின் கதிரியக்கமுள்ள கழிவுப் பொருளை வெட்ட வெளியில் கொட்டி விட்டுப் போய் விட்டார்கள். அவ்விடத்தில் விளையாடப் போன இரு குழந்தைகள் உயிருடன் திரும்பவில்லை. நாட்டின் பல இடங்களில் அணுமின் நிலையங்கள் உருவாகின்றன. ஆக்கப்பணிக்கு அணுகுண்டு என்றும் அரசு சொல்கிறது. அசிரத்தை, அலட்சியம் காரணமாய் நமது வானும் மண்ணும் நீரும் இன்னும் எவ்வளவெல்லாம் நச்சு மயமாகப் போகிறதோ! இன்றைய மக்களுக்கும் எதிர்கால சந்ததியினருக்கும் எத்தனை துன்பங்கள் நேரப் போகின்றனவோ! கேட்பவர் யார்? கேட்டாலும் லட்சியம் செய்வார் யார்? எல்லாம் ஒரே கொர்.... கொர்....

இந்தியா -- பாகிஸ்தான் நல்லுறவுக்கு உதவுவார் போலத் தோன்றிய ஆகாஷாகிக்கு சீட்டுக் கிழித்து விட்டார் ஜியா. ஆப்கானிஸ்தானில் ருஷ்ய ஆக்ரமிப்பைக் காரணம் காட்டி அமெரிக்காவிடமிருந்து பாகிஸ்தான் ஏராளமான யுத்த தளவாடங்களைப் பெற, நாமும் ருஷ்ய ராணுவ உயர் மட்டக் குழுவுக்கு அண்மையில் வரவேற்பளித்தோம். விரும்பியோ விரும்பாமலோ ருஷ்ய அமெரிக்கப் பனிப் போரினிடையில் படிப்படியாகச் சிக்கி வருகிறோம். ஒரு சிறு பொறி போதும், பனிப்போர் எரிமலைப் போராகி விடலாம். டென்ஷனை வளர்ப்பதற்குப் பதில் குறைக்க வல்லவா முயல வேண்டும்? இது பற்றிச் சிந்திப்பார் யார்? செயல்படுவார் யார்? குறட்டை ஒலிதான் கேட்கிறது!

இந்தியா விழாவை, பிரிட்டனில் நடத்துவதென நம் அரசு முடிவெடுத்து மூன்று ஆண்டுகளாகத் திட்டமிட்டுச் செயல்பட்டும் வருகிறார்கள். இருந்தும் கடைசி நிமிஷம் வரை ஏற்பாடுகள் முடிவடையவில்லை. யார் பொறுப்பு? இந்தியா விழாவில் நடந்த எம். எஸ். கச்சேரியை நமது டீவியில் ஒளி பரப்பினார்களே அது எம். எஸ். ஸை மட்டுமின்றி, நமது மகத்தான இசைச் செல்வத்தையே அவமானப்படுத்துவது போல் அத்தனை மோசமான ஒளி பரப்பாக அமைந்திருந்ததே தட்டிக் கேட்பவர் யார்? 'கண்மணியே உறங்கு' என்று தட்டிக் கொடுத்துக் கொண்டல்லவா இருக்கிறோம்!

தேசிய ஒருமைப்பாடு என்ற போர்வையில் இந்திய சரித்திரத்தையே பாடப் புத்தகங்களில் மாற்றி எழுத ஒரு சதி நடக்கிறதே அதைக் கண்டிப்பவர் யார்? உண்மைகளை மறைத்தும் திரித்தும் ஒருமைப்பாடு உருவாக்க முடியாது; சரித்திரத்தை மாற்ற யாருக்கும் உரிமை இல்லை என்று புத்தி சொல்பவர் யார்? கேட்டுக் கொள்கிறவர் யார்? உலகமே எள்ளி நகையாடக் கூடிய இவ்விஷயத்தில் நாம் கனவு கூடக் காணாமல் ஆழ்ந்த நித்திரையில்தானே மூழ்கிக் கிடக்கிறோம்?

''விடைத்தாள் திருத்தும் பேராசிரியர்களே ஒத்துழையுங்கள்! மதிப்பெண் தாள்களைச் சீக்கிரம் அனுப்புங்கள்'' என்று கெஞ்சாத குறையாக அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார் சென்னை பல்கலைக் கழகத் துணை வேந்தர். இதற்கிடையில் ஸெமஸ்டர் மாணவர்கள், 'அடுத்த பரீட்சை எழுதுவதா வேண்டாமா? எழுதிய பரீட்சையையே திரும்ப எழுத வேண்டியிருக்குமா? விடைத்தாள்கள் இருக்கின்றனவா? தொலைந்து விட்டனவா' என்று புரியாமல் தவிக்கிறார்கள். நாம் பெற்ற செல்வங்கள் இப்படி சொல்லொணா மனச் சித்திரவதைக்கு ஆளாகும் போதும் நாம் கல்பனாத் ராயுடன் சேர்ந்து டியட் குறட்டை ஒலிதான் எழுப்பிக் கொண்டிருக்கிறோம்!

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்



கல்கி
1982 ஏப்ரல் 4
துன்மதி பங்குனி 22
மலர்: 40 இதழ்: 36

12

மாணிக்கம் கட்டி வயிரம் இடை கட்டி
ஆணிப் பொன்னாற்செய்த வண்ணச் சிறு
தொட்டில்

பேணி உனக்குப் பிரமன் விடுதந்தான்
மாணிக் குறளனே தாலேலோ
வையமளந்தானே தாலேலோ!

பெரியாழ்வார் பாடலை வசீகரமான ஒரு பெண் குரல் பாட அந்த இசை வடிவிலேயே அவையோர் தொட்டில் ஆட்டப்படுவதையும் கொழு கொழு கண்ணன் தன் காலை உயர்த்தித் தன் கட்டை விரலைச் சப்புவதையும் பிறகு உறக்கம் மீதுற மலர்க் கண்களை மூடி மூடித் திறப்பதையும் இறுதியில் உறங்கியே போவதையும் அந்தத் தூக்கத்திலேயே புன்னகைத்து எழில் சிந்துவதையும் உணர்ந்தார்கள்.

ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபனின் அரசவை கூடியிருந்தது. அரியாசனத்தில் சக்கரவர்த்தி ஜொலிக்கின்ற ஆடை அணி மணிகளுடன், ஸ்ரீசூர்ணமிட்டு ஒளிர்கின்ற நெற்றியுடன் கம்பீரமாக அமர்ந்திருக்க, ஒரு பக்கம் மந்திரி பிரதானிகளின் வரிசை; இன்னொரு புறம் திருநீறு துலங்கும் நெற்றியும் பட்டு பீதாம்பரங்களும் முத்து மாலைகளும் புரளும் விசால மார்பும் உடைய இளவலும், இதர அரண்மனை மாந்தரும். தமிழையும் சமயத்தையும் அற நெறிகளையும் ஒருங்கே வளர்த்துப் புலவர்களாக மட்டுமின்றி ஆன்மிகத் தலைவர்களாகவும் விளங்கியோருக்கு அவையில் சிறப்பிடம். ஒருபுறத்தே ஒதுக்கமாகத்தோழி, தம்பியுடன் குவளை, கொம்மையன், சேனன் ஆகியோர் காவலர் சூழ நின்றனர்.

சற்று நேர இடைவெளி விட்டு அதே பாடல் மீண்டும் கணீரென்று ஒலித்தது. முதலடியை ஒருமுறை பாடியதும் அரசவை நர்த்தகி பாடலுக்கு ஏற்ப அபிநயிக்கத் தொடங்கினாள். யசோதையாக மாறிக் கண்ணனைத் தொட்டிலிலிட்டு ஆட்ட ஆரம்



ரவிகுலதிலகன்

செம்பியன்

பித்தாள். அந்தத் தொட்டிலின் அழகையும் அந்த அலங்காரத் தொட்டிலை அலங்கரிக்கும் பாலகனின் அழகையும் அவள் அவையோரின் கண் முன்னே கொணர்ந்தாள்.

சாமானியத் தொட்டிலா அது? மாணிக்கங்களும் இடையிடையே வைரங்களும் இழைக்கப்பெற்ற பொன்னாலான தொட்டில்! சிறு தொட்டில்தான். ஆனால் அந்தச் சின்னஞ் சிறு தொட்டிலிலே கள்ளம் கபடமறியாக் குழந்தையாகக் கால் கட்டை விரலைக் கடித்துக் கொண்டு படுத்திருப்பது யார்? வையமெல்லாம் ஓரடியில் அளந்து, விண்ணை யெல்லாம் மற்றொரு அடியால் அளந்து மூன்றாவது அடி எங்கே எனக் கேட்ட அந்தக் கற்பனைக் கெட்டாத மாபெரும் உருவத்தினன்தான் இங்கே குறளனாக, மழலை கூடப் பேச அறியாத மதலையாக, ஏதொன்றும் அறியாதவன் போல் பரம சாதுவாகப் படுத்துறங்குகிறான்!

இந்தப் பொருள் அழகாக வெளிப்படும்படி மிக நேர்த்தியாக அபிநயித்தாள் அவள்.

கண்ணனை யசோதை அள்ளி எடுத்து அணைப்பதையும் திருஷ்டி கழிப்பதையும் உச்சி மோந்து தொட்டிலில் இடுவதையும் அவன் தன் கால்களை உதைத்துக் கொள்ளச் சலங்கை சிற்றொலி எழுப்புவதையும் பிறகு மெல்ல மெல்ல அவன் உறங்கிப் போவதையும் அபிநயித்து அவையோரை மயங்கச் செய்தாள். உறக்க மயக்கமல்ல; பக்தி மயக்கம்–தமிழ்க் கவியும் கலையும் கலக்கின்ற போது பிறக்கும் அழகு மயக்கம்.

குவளையினும் தானிருந்த இடத்திலிருந்து ஆடலைச் சரியாகப் பார்க்க முடியவில்லை. ஓரளவுதான் தெரிந்தது. ஆனால் பாடலின் கருப்பொருளும் உட்பொருளும் நன்றாகப் புரிந்தன. உலகளந்த பெருமாள் குழந்தை வடிவமெடுத்தால் ஏராளமான இயற்



கைச் செல்வங்களை உள்ளடக்கிய இந்த உலகமே அவனுக்குச் சிறு தொட்டில்தான் என்று சொல்லாமல் சொல்கிற அந்த உயர்ந்த பாடலின் பல்வேறு ரசங்களையும் ஆடலரசி அற்புதமாக வெளிப்படுத்துகிறாள் என்பதைக் குவளையால் உணர முடிந்தது.

பாடலும் கூடவே ஆடலும் முடிந்த பின்னரும் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் அவை அளித்த தெய்விக இன்பத்திலேயே சற்று நேரம் திளைத்திருந்தான். அந்த வயிப்பி விருந்து சக்கரவர்த்தியின் மனத்தைத் திசை திருப்ப விரும்பாமல் அவையோரும் ஆழ்ந்த அமைதி காத்தனர். யசோதையிடமிருந்தும் கண்ணனிடமிருந்தும் பிரிய மனமில்லாமல் விடைபெற்றுக் கடமையாற்ற நிகழ்-காலத்துக்கு வந்து சேர்ந்தான், மகா பக்திமானை ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன். அரசவை நர்த்தகியைப் பார்த்து, "திருமேனி! இன்று உன் அபிநயம் பரவசத்தில் ஆழ்த்துவதாய் இருந்தது. எத்தனை உணர்ச்சிகளை உன் முகத்திலே பிரதிபலித்தாய்! பாடலுக்கு எத்தனை விதமான அர்த்தங்களை வெளிப்படுத்தினாய்! உன்னிடம் குடிகொண்டிருக்கும் இந்தத் தெய்விக ஆற்றலை நீ மேன்மேலும் வளர்த்துக் கொள்வது மட்டுமல்ல, வேறு பல இளம் பெண்களுக்கு வழங்கவும் வேண்டும். என்னிடம் உள்ள செல்வம் வழங்கக் குறையும். உனது கலைச் செல்வமோ வழங்க வழங்க வளரும். எனவே தயங்காமல் வழங்கு!" என்று கூறியபடியே தனது மார்பில் தவழ்ந்த முத்தாரங்களில் இரண்டினைக் கழற்றி எடுத்தான். திருமேனி அடக்கமுடன் அடியெடுத்து வைத்துக் கரங்களை நீட்டி அவற்றைப் பெற்றுக் கண்களில் ஒற்றிக்கொண்டு அக்கணமே அணிந்து கொள்ளவும் செய்தாள்.

முத்துக்களிடம் பாண்டிய மன்னர்களுக்கு அளப்பரிய பற்றுதல் உண்டு. குறிப்பிட்ட அளவுக்கு மேல் வளர்ந்த பெரிய முத்துக்களை அரசர் பெருமானிடம் அன்றி வேறு யாருக்கும் விற்கக் கூடாது என்ற ஆணை பாண்டி நாட்டில் பன்னெடுங்காலமாக இருந்து வந்தது. இது குவளைக்கும் தெரியும். எனவே இரு முத்து மாலைகளைக் கழற்றிப் பளபளக்கின்ற அவற்றைத் திருமேனியின் காந்தள் மலர்க் கரங்களில் மன்னன் வைத்தபோது அவள் வாயும் கண்களும் வியப்பில் விரிந்தன. கூடவே இத்தகைய ஈகை உள்ளம் கருணை காட்டவும் செய்யும், நாம் தப்பலாம் என்ற நம்பிக்கையும் பிறந்தது.

"திருமேனி! இந்தப் பரிசில் பெரிதல்ல!" என்று தொடர்ந்தான் ஸ்ரீமாறன். "இதை விடவும் சிறப்பாக உனக்குத் "தலைக்கோல்" பட்டத்தினை இந்த அவையோர் சம்மதத்துடன் வழங்க எண்ணுகிறேன். பெரியோர்கள் அங்கீகரிக்க வேண்டும்" என்றான்.

"அங்ஙனமே" ஆகுக!" என்றும், 'ஆகா' என்றும் "நன்று நன்று" என்றும் அவையினர் ஆமோதிக்க, "திருமேனி! உனது சால்பறிந்து சக்கர வர்த்தி அளிக்கும் பட்டம், விருதின் மேன்மை உணர்ந்து ஏற்றுக்கொள்" என்று உத்தர அமைச்சர் கூறினார்.

"அவனிப சேகரன், பரச்சக்கர கோலாகலன் வாழ்க வாழ்க" என்றும்,

"தலைக்கோல் பெற்ற திருமேனி வாழ்க வாழ்க" என்றும்

எழுந்த கோஷங்கள் அடங்கியதும்,

"பிரபோ! பிறவிப் பெரும் பயன் அடைந்தேன்!" என்று தழுதழுத்த குரலில் கூறிச் சக்கரவர்த்தியை வணங்கினாள் திருமேனி.

"இன்றைய அலுவல்களைக் கவனிக்கத் தொடங்கு முன்னர் நாச்சியார் திருமொழிப் பாசுரமொன்றும் பாடலாமே" என்று மாமன்னன் விருப்பம் தெரிவித்தான்.

'ஆம், ஆம்' என்று தனது ஒப்புதலையும் வெளிப்படுத்திய சக்கரவர்த்தி குமாரன் வரகுணன், "அடுத்து அப்பரடிகள் பதிகம் ஒன்றையும் பாடலாம்" என்றான் இயல்பாகத் தொனிக்கும்படி.

மகனுடைய வார்த்தைகள் தந்தையின் உள்ளத்தில் சுருக்கென்று தைத்தபோதிலும் ஆதங்கத்தை மறைத்துக் கொண்டு, "ஏன் பாடக் கூடாது! சைவமும் வைணவமும் நமது இரு கண்களாயிற்றே! நாயன்மார் பாடல் ஒன்றினையே முதலில் கேட்போம்" என்றான் ஸ்ரீமாறன்.

"கேட்கலாம் பாடலை; அதற்கேற்பத் திருமேனி ஆடப் பார்க்கவும் செய்யலாம்" என்றான் வரகுணன் சைவத்துக்குச் சம அந்தஸ்துப் பெற்றுத் தர முனைந்தவனாக.


"அங்ஙனமே ஆகட்டும்" என்ற சக்கரவர்த்தி, உத்தர அமைச்சரை நோக்கி, "அவசர அலுவல் ஏதும் இல்லையே?" என்று கேட்டு உறுதிப்படுத்திக் கொண்டான்.

"அரை நாழிகை காத்திருக்க முடியாத காரியம் ஏதும் இல்லை பிரபோ" என்றார் பிரதான அமைச்சர்.

தொட்டால் சுடும்!

டைரக்டர் ராஜ்பரத்தின் அடுத்து வெளிவர இருக்கும் படம் 'தொட்டால் சுடும்'. அந்தப் படத்தை விளம்பரப் படுத்த ஒரு புதிய யுக்தியைக் கையாண்டுள்ளனர். அது என்ன? சென்னை நகரமெங்குமுள்ள சிகரெட் விற்கும் கடைகளில் எல்லாம், சிகரெட் பற்றவைத்துக் கொள்ள வைத்திருக்கும் விளக்குகளுக்குப் பின்னுலோ, மின்சாரக் கம்பி அமைப்பாயிருந்தால் சுவிட்சிலோ 'தொட்டால் சுடும்' படத்தின் ஸ்டிக்கரை ஒட்டி விட்டார்கள். எப்படி ஐடியா?

—எஸ். சந்திரமௌலி




கல்கி
ஏப்ரல் 18உ புத்தாண்டு மலர்
அதிக பக்கங்கள் - அதே விலை
* கேள்வி பதில் பகுதி
* விஞ்ஞானப் பக்கங்கள்
* தாளிப்பு - 'கடுகு'
சவீதா எழுதும் முழுநீள நாவல்
கவர்ச்சிகள்
கிருஷ்ணமணி
எழுதும்
அற்புதத் தொடர்கதை
கல்கி
ஏப்ரல் 18உ
புத்தாண்டு மலரில்
ஆரம்பம்


'குனித்த புருவமும் கொவ்வைச் செவ் வாயிற் குமிண் சிரிப்பும்' எனத் தொடங்கித் திருநாவுக்கரசர் பாடலை நேர்த்தியான ஒரு குரல் உருக்கமாகப் பாட வரகுணன் மட்டு மின்றி தந்தை ஸ்ரீமாறனும் மெய்மறந்தே போனான்.

''ஆகா! எல்லாரும் பிறவிப் பிணி நீங்க வேண்டும் என்றுதான் சொல்வார்கள். அப்ப ரடிகளோ இக்கருத்தை அப்படியே தலை கீழாக மாற்றி மனிதப் பிறவி வேண்டும் வேண்டும் என்று அழுத்தமாகக் கேட்கும் அந்தச் சிந்தனை எத்தனை அற்புதமானது! அதற்கு அவர் கற்பிக்கும் நியாயமும் எவ்வளவு ஏற்புடையது!'' என்று வியந்தான் மன்றாடி மன்னன். தொடர்ந்து ஆண்டாள் பாசுரம் ஒன்றும் எடுப்பான குரலில் பாடப் பெற்றது. அடுத்து அரச நர்த்தகி திருமேனி மீண்டும் திருச் சபையின் மையத்தில் வந்து நின்றாள்!

சிறையாரும் மடக்கிளியே
  இங்கேவா தேனொடுபால்
முறையாலே உணத்தருவன்
  மொய் பவளத் தொடு தரளம்
துறையாருங் கடற்றோணி
  புரத் தீசன் துளங்கு மிளம்
பிறையாளன் திருநாமம்
  எனக்கொருகால் பேசாயே

என திருஞான சம்பந்தர் பாடல் ஒலிக்க அந்த இசைக்கும் கருத்துக்கும் ஏற்ப அபிநயிக்கத் தொடங்கினாள். முன்னர் பெரி யாழ்வார் பாசுரத்துக்கு அபிநயித்தபோது தாய்மை உணர்வு எத்தனைக் கெத்தனை பொங்கிப் பிரவகித்ததோ அத்தனைக்கத்தனை இப்போது காதல் உணர்வு ஊற்றெனப் பெருக்கெடுத்தது. அந்தக் கிளிக்குத்தான் எத்தனை உபசாரம்! கெஞ்சல், கொஞ்சல்! எல்லாம் ஒரே ஒரு தரம் அவன் திருநாமத்தை அது கூறக் கேட்கலாமேஎன்பதற்காகத்தான். கணவனாக வரப் போகிறவன் பெயரை இவள் வாய் விட்டுக் கூறிக் கூறி இன்புற முடியாது. ஆனால் பிறர் கூறக் கேட்டுக் கேட்டு மகிழ்ச் சியில் திளைப்பதில் தவறில்லையே. ஆனால் யார் இந்தப் பெயரை இவளுக்காகத் திரும் பத்திரும்ப உச்சரித்துக்கொண்டிருப்பார்கள். அவரவருக்கும் எவ்வளவோ வேலைகள்! இனி ஒன்றுதான் அவள் ஆசையைப் பூர்த்தி செய்ய வேண்டும். அதுவும் இப்போது முரண்டு பிடிக்கிறது! எனவேதான் கெஞ்சி கொஞ்சி,தேன் தருகிறேன், பால் தருகிறேன் என்று ஆசை காட்டி அதனைச் சரிக்கட்ட வேண்டியிருக்கிறது!

காதலியின் விரக தாபத்தையும் கிளியை அவள் முதலில் கோபிப்பதையும் பிறகு மனம் மாறி இறைஞ்சுவதையும் திருமேனி யின் கண்களும் புருவங்களும் அதரங்களும் பேசாமல் பேசி உணர்த்தின. மற்ற பற்ற அவயவங்கள் துணை நின்று சிறப்பித்தன. ஈசனின் எழிலார்ந்த பிறையணிந்த திரு வுருவத்தைத்தான் அவள் எத்தனை நுணுக்க மாகச் சித்திரித்துக் காட்டினாள்!



எட்டுமணி நேரம் எரிந்து, கொசுக்களை
எட்டாத தூரத்திற்கு விரட்டுகிறது—

டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்



தயாரிப்பாளர்:
பாம்பே கெமிகல்ஸ் ப்ரைவேட் லிமிடெட்
போர்ட், பம்பாய்-400 023. போன்: 273831

everest/82/BCL/194-tm

திருமேனியின் அழகையா, அவனிடம் குடிகொண்டிருந்த கலை அழகையா, இசை அழகையா, அந்த இசையில் பொருந்திய பாடலின் கருத்தழகையா எந்த அழகை ரசிப்பது என்றே அவையோர் திணறும்படியாகி விட்டது!

அபிநயம் முடிந்ததும் இளவல் வரகுணன் தன் மார்பை அணி செய்த முத்து மாலைகள் இரண்டினைக் கழற்றி அரச நர்த்தகியிடம் தந்தான். அவள் முன்னைக்கிப்போது சற்றும் குறையாத பயபக்தியுடன் பெற்றுக்கொள்ள, தந்தை ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் சிரமப்பட்டு முகத்தில் புன்னகையை வரவழைத்துக் கொண்டான்.

சைவனான மகன் வைணவனான தந்தையுடன் போட்டி போடுவது போலவே நடந்து கொள்வதை அனைவரும் உள்ளூற அறிந்திருந்தாலும் அதை வெளிக் காண்பித்துக் கொள்ளவில்லை. மாறுகத் தந்தையும் மகனும் சமஎடைகளைத் தராசின் இரு தட்டுக்களில் வைத்தது போல் இரு சமயங்களையும் பாவித்பதாகச் சொல்லி மகிழ்ந்தார்கள்; ஆகாகாரம் செய்தார்கள்.

ஆரவாரம் அடங்கியதும் ''இன்றைய அலுவலைக் கவனிக்கலாமே'' என்று சக்கரவர்த்தி கூறவும் குவளையும் அவளுடன் வந்த மற்றவர்களும் சபையின் மையத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

''பிரபோ! கூடல்மாநகருக்குப் புதிதாய் வந்து சேர்ந்த இவர்களைப் பற்றியும் இவர்களால் நகர்க் காவல் படையினருக்கு நேர்ந்த துன்பம் பற்றியும் ஏற்கனவே தங்களிடம் விரிவாகப் பேசியிருக்கிறேன்'' என்றான் வழக்குரை அதிகாரி.

''நினைவிருக்கிறது'' என்ற ஸ்ரீமாறன், ''பெண்ணே! நீதான் இவர்களுக்குத் தலைவி போல் செயல்படுவதாக அறிகிறேன்'' எனக் குவளையைப்பார்த்துப்பேசினான். தொடர்ந்து ''இந்த வழக்கை அறங்கூறவைக்கு அனுப்பாது நானே தர்மாசனத்தில் அமர்ந்து விசாரிப்பதற்குக் காரணம் உண்டு'' எனப் பொதுப்படையாக மன்றத்திலிருந்தோருக்கு அறிவித்தான். ''இவ்வழக்கில் என் மகன் வரகுணனும் சம்பந்தப்பட்டிருக்கிறான்'' என்று தொடங்கி, வியப்பொலிகள் சற்று அடங்கியதும், நடந்தவற்றைச் சுருக்கமாக எடுத்துரைத்தான். இறுதியில், ''குவளை! உன் சார்பிலும் உன்னுடன் வந்திருப்போர் சார்பிலும் ஏதும் கூற விரும்புகிறாயா?'' என வினவினான்.

''மன்னர் மன்னவா! நடந்ததனைத்தும் தங்களுக்குத் தெரியும். தங்களை விடவும் இங்கு வீற்றிருக்கும் இளவலுக்கு உண்மைகள் நன்கு தெரியும். பாண்டிய அரசர்கள் நீதி நெறி வழுவாதவர்கள் என்பதை அகிலமறியும். இந்நிலையில் ஏழை நான் கூற என்ன இருக்கிறது?'' என்றாள் குவளை.

புகழுரை கேட்டு வரகுணன் மெல்லச் சிரிக்கவும் ஸ்ரீமாறன் புன்னகைத்துவிட்டுப் பேசினான்:

''இவர்கள் அசட்டுத்தனமாக இடையூறு விளைவிக்காமலிருந்திருந்தால் அந்தத் திருடர்களை எளிதாகப் பிடித்திருக்கலாம் என்பதும் கூடல் மாநகருக்கும் பாண்டியப் பேரரசுக்கும் இப்படி ஓர் அவமானம் ஏற்பட்டிருக்காது என்பதும் நாம் கவனத்தில் இருத்த வேண்டிய உண்மைகளே...

''ஆயினும் இவர்கள்இந்நாட்டுக்குப் புதியவர்கள்: அதிலும் ஒருவன் கடல் கடந்து சீனத்திலிருந்து வந்தவன்; இங்கே தங்களுடைய விலையுயர்ந்த பரிகள் இரண்டினைப் பறி கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திருடர்கள் இருவரையும் நம் நகர்க் காவலர்களால் இன்னமும் கண்டு பிடிக்க முடியவில்லை. அவர்கள் நகரை விட்டே தப்பி ஓடியிருக்கலாம் என்றும் கருத இடமிருக்கிறது. இந்தச் சீனன் துர்நோக்கம் கொண்டு செயல்படவில்லை. சந்தர்ப்ப வசத்தாலும் அறியாமையாலும் நகர்க் காவல் படையினருக்கு இடையூறு விளைவித்திருக்கிறான். இவையெல்லாம் இவர்களுக்குச் சாதகமான வாதங்கள்.

''இந்தச் சூழலில் தண்டனை விதிக்கத்தான் வேண்டுமென்றாலும் அது பெருந்தண்டனையாகவும் இருக்கக் கூடாது. எனவே என்ன தண்டனை என்பதை இவர்களே நிர்ணயித்துக் கொள்ள அனுமதிக்கிறேன்'' என்ற ஸ்ரீமாறன் குவளையை நோக்கி, ''பெண்ணே! மற்றவர்களையும் கலந்தாலோசித்துவிட்டுச் சொல்லு'' என்று ஆணையிட்டான்.

அங்ஙனமே குவளை மற்றவர்களிடம் பேசினாள். சீனன் ஓரளவு தமிழ்ச் சொற்களைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் பெற்றிருந்தான். அவனுக்குச் சைகைகள் மூலமாகவும் மன்னர் பிரானின் கருத்தை உணர்த்தினாள். அவன் பதிலுக்குச் சில சமிக்ஞைகளைச் செய்ய,

இன்றைக்கென்ன ஒரே 'அபிநயமாகவே இருக்கிறதே' என்று எண்ணிக் கொண்டான் ஸ்ரீமாறன். ஆயினும் ஊனமுற்ற ஒருவனைப் பரிகசிப்பதாக ஆகிவிடக் கூடாது என்பதால் அவ்வெண்ணத்தை வெளியிடாமல் காத்தான்.

சீனன் அபிநயித்ததைப் புரிந்து கொண்டதற்கு அடையாளமாகத் தலையாட்டிவிட்டுக் குவளை பேசலானாள்:

''பிரபோ! சீனன் நடந்ததனைத்துக்கும் தானேதான் காரணம் என்றும் முழுப் பொறுப்பையும் தானே ஏற்பதால் தண்டனை தனக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்றும் சொல்கிறான்.''

''என்ன தண்டனை? தீர்மானித்து விட்டானா?''

''ஆம் மன்னவா! இவன் பசும் புல் வெளியில் குப்புறப் படுத்துக் கொள்வானாம். இவன் மீது ஒரு பலகையைப் பரப்பி அதன் மேல் ஒரு யானையை ஏறி நிற்கச் செய்யலாமாம். இவ்விதம் ஒரு யானையால் நசுக்கப்படுவதே தனக்கேற்ற தண்டனை என்கிறான்!''


குவளை கூறி முடிக்கவும் இவ்வளவு கடுமையான தண்டனையைத் தனக்குத் தானே விதித்துக் கொண்ட சீனனைக் கண்டு திகைப்பும் வியப்பும் மிக அவையோரிடம் அசாதாரண மௌனம் நிலவியது.

(தொடரும்)

விழிப்புணர்வு



⌘ உடுப்பி பெஜாவர் மடத்து அதிபதி தமிழகத்திற்கு வருகை புரிந்திருந்த போது...



⌘ திரு வேதாந்தம்

அண்மையில் சென்னை நகரெங்கும் 'இந்து விழிப்புணர்வு இயக்கத்துக்கு நிதி தாரீர்'' என்னும் விஸ்வ ஹிந்து பரிஷத்தின் விண்ணப்பம் சுவர்களில் காட்சி அளித்தது. இவ்விழிப்புணர்வு இயக்கம் பற்றி அறிய பரிஷத்தின் மாநில அமைப்புச் செயலாளர் திரு வேதாந்தத்தைச் சந்தித்த போது....

கேள்வி: எதற்காக இந்த 'இந்து விழிப்புணர்வு இயக்கம்?

பதில்: இந்து மதத்தையும் இந்த நாட்டு ஒற்றுமையையும் காப்பதற்காக.

கே: இவை இரண்டும் காப்பாற்றப் படவேண்டிய நிலையில் உள்ளனவா?

ப: ஆம். இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் மதம் மாற்றப்படுகின்றனர். இந்துக்கள் மதம் மாற்றப்படும்போது நாட்டு ஒற்றுமையும் பாதிக்கப்படுகிறது.

கே: இந்துக்கள் மதம் மாற்றப்படவில்லை. தாமாகவே மாறுகிறார்கள் என்றால்...

ப: அது உங்கள் எண்ணமாயிருக்கலாம். ஆனால் உண்மையில் வசதிகளையும் பணவாய்ப்புக்களையும் காட்டி அவர்கள் மதம் மாற்றப் படுகிறார்கள் என்கிறேன் நான்.

கே: இந்துக்களால் ஒதுக்கப்பட்ட சில இந்துக்களுக்குப் பிற மதத்தினர் கருணையும் அன்பும் காட்ட இந்துக்கள் தானாகவே மதம் மாறுகின்றனர். அத்தகைய கருணையையும் அன்பையும் நீங்கள் ஏன் காட்டவில்லை?

ப: இந்துமதத்துக்குள்ளிருந்த தீண்டாமைதான். தீண்டாமையை இராமானுஜர் முதல் மகாத்மா காந்தி வரை எதிர்த்துப் போராடி வந்தனர். மகாத்மா காந்திக்குப் பிறகு தீண்டாமைப் பிரசாரத்தில் ஏற்பட்ட தொய்வு – ஒரு வெற்றிடம்– இந்து மதத்துக்கே சிக்கலை ஏற்படுத்தத் தொடங்கி விட்டது.

கே: 1966இல் தொடங்கப்பட்ட 'பரிஷத்' இப்போதுதானே விழித்துக் கொண்டது. இதுவரை அது என்ன செய்தது?

ப: கல்வி வசதி, மருத்துவ உதவி போன்ற பணிகளை அமைதியுடன் நிறைவேற்றி வந்தது: இப்போது அமைதியாகச் செய்ய வேண்டிய பணிகளைக் கூட ஆரவாரமாகச் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவேதான் 'இந்து விழிப்புணர்வு இயக்கம்' ஏற்படுத்தப் பட்டது.

கே: ஒவ்வொரு மதமும் இத்தகைய விழிப்புணர்வு இயக்கங்கள் தொடங்கினால், வேற்றுமையில் ஒற்றுமை என்னும் இந்தியக் கோட்பாடு அழிந்து போகாதா?

ப: போகாது. மத மாற்றம் என்பது இந்து மதத்திடம் கிடையாது. இந்து மதமாம் தாய் வீட்டிலிருந்து வெளியேறியவர்களை மீண்டும் தாய் வீட்டுக்கே அழைக்கும் முயற்சி. வேற்றுமையில் ஒற்றுமை காணும் கோட்பாட்டுக்கு எதிரியல்ல.

கே: மதப் பிரச்னைகள் அண்மைக் காலங்களில் 'ஸென்ஸிடிவ் இஷ்யூ'வாக மாறி வருகின்றனவே!

ப: இந்துக்களைப் பொறுத்தவரையில் அப்படிப்பட்ட நிலை ஏற்படாது. பொறுமைக்கும் அமைதிக்கும் இலக்கணமாகத் திகழ்பவர்கள் இந்துக்களே...

கே: ஊர் ஊராகப் பிரசாரம் செய்யப் போவதாகக் கூறுகிறீர்களே அது பிற மதங்களைக் காப்பி அடிப்பது போல் அமையாதா?

ப: சுற்றுப் பயணங்கள் மூலம் மதப் பிரசாரம் செய்வது இந்து மதத்துக்குப் புதிதன்று. ஆதி சங்கரர், அப்பர், சுந்தரர், ஞான சம்பந்தர் ஊர் ஊராகச் சென்று பிரசாரம் செய்தவர்கள்தாம். நம்மிடையே வாழும் தெய்வமான காஞ்சிப் பெரியவாளும் ஊர் ஊராகப் பிரசாரம் செய்து வருகிறாரே...?

கே: இயக்கத்துக்கு நன்கொடை கேட்டுள்ளீர்களே எதற்காக?

ப: வண்டிக்குச் சக்கரமும், வாழ்வுக்குச் சுவாசமும் போல் இயக்கத்துக்குப் பணம் தேவை.

கே: பணத்தினால் மட்டுமே ஒரு மதத்தைக் காப்பாற்றி விட முடியுமா?

ப: முடியாதுதான். இந்து மத எதிர்ப்புச் சக்திகள் பண ஆயுதத்தைப் பயன்படுத்துவதால் நாமும் அந்த ஆயுதத்தை ஏந்த வேண்டியுள்ளது.

கே: இவ்வாறு பணம் வசூலித்துக்கொண்டே போனால் அதன் முடிவு?

ப: பரிஷத்தைப் பொறுத்த வரையில் இத்தகைய பண வசூலிப்பின் முடிவு 5 கோடி ரூபாய். இந்தத் தொகை கிடைத்துவிடின் நன்கொடை பெறுவது முற்றுப்புள்ளி யிடப்படும். ஏனென்றால், இந்த ஐந்து கோடி பணத்திலிருந்துவரும் வட்டியை மட்டுமே விழிப்புணர்வு இயக்கம் பயன்படுத்தப் போகிறது. எனவே நன்கொடைத் தொகை மூல தனமாக இருக்கும்.


கே: இந்த வட்டித் தொகையைக் கொண்டு வெளி நாட்டுப் பணத்துடன் போட்டி போட இயலுமா?

ப: இயலும். ஏனெனில் போட்டியிடுவது நம்முடைய நோக்கமல்ல. மதம் மாற்றுவதற்குத்தான் அதிகப் பணம் தேவைப்படும். மதம் மாறாமல் தடுப்பதற்கு அதிகப் பணம் தேவையில்லை.

கே: ஏற்கனவே மதம் மாறியவர்களை மீண்டும் இந்துவாக மாற்றும் திட்டம் உண்டா?

ப: சித்தாந்த அடிப்படையில் மதம் மாறியவனை, மீண்டும் இந்துவாக ஏற்றுக் கொள்ள மாட்டோம். ஆனால் ஒருசில வசதிகளுக்காக சமுதாய மேல் நிலைக்காக மதம் மாறியவர்களை மீண்டும் இந்து மதத்துக்கு அழைக்கும் வழி முறைகளை மேற்கொள்வோம்.

பேட்டி: எம். ஏ. எஸ்.



தோப்பில் தனிமரம்

கதை: நேர்மையான போலீஸ் அதிகாரி வெங்கட்ராமனுக்குப் பிள்ளைகள் இரண்டு, பெண்கள் இரண்டு. மூத்த பெண் வித்யா அப்பாவின் கீழ் வேலை பார்க்கும் இன்ஸ்பெக்டர் ஜேம்ஸைத் திருமணம் புரிந்து-கொண்டு வெளியேற, மூத்த பிள்ளை ரகு மனைவி—மாமனார் பேச்சைக் கேட்டுத் தனிக் குடித்தனம் போக: இரண்டாவது பிள்ளை பட்டாபி வேலை கிடைத்ததும் தனியே லாட்ஜுக்குப் போக முற்பட்டு, மனசு மாறித் தங்கிவிட; இரண்டாவது பெண்ணின் கல்யாணத்தை நிச்சயிக்கிற சமயத்தில் பிள்ளையின் தகப்பனார் வித்யாவின் கலப்பு மணத்தைக் கண்டுபிடித்து, இன்னும் பத்தாயிரம் கொடுத்தால்தான் ஆயிற்று என்று சொல்ல; மூத்த பிள்ளை பத்தாயிரம் ரூபாய் ஆபீஸ் பணத்தைக் கையாடி மாட்டிக் கொள்ள; வெங்கட்ராமனுக்குச் சரியாக அந்தச் சமயத்தில் அரசாங்கப் பரிசு பத்தாயிரம் கிடைக்க, அதைக் கொடுத்துப் பிள்ளையை மீட்க அவர் செல்லும்போது, பெண் வித்யாவே அந்த ரூபாயைக் கொடுத்து அண்ணனைக் காப்பாற்ற; கடைசியில் ஒரு வழியாய் பத்தாயிரம் ரூபாய் பரிசு கடைசிப் பெண் கல்யாணத்துக்கு உதவுகிறது...

வசனம்: இப்போதெல்லாம் மேடை நாடகங்களுக்கு வலுவுள்ள கதை வேண்டுமோ வேண்டாமோ, குறைந்தபட்சம் நறுக் நறுக்கென்று வசனம் தேவையாயிருக்கிறது. இடையிடையே நகைச்சுவை வசனங்களும் அவற்றை சேஷ்டைகளோடு வெளியிடத் துணைப் பாத்திரங்களும் இருந்து விட்டால் நாடகம் வெகு எளிதில் அல்லது வெகு சீக்கிரத்தில் சபா மேடைகளில் எல்லாம் சக்கைப் போடு போடுகிறது. (தமிழ் நாடகங்களில் எல்லாம் மாமனார் அல்லது சம்பந்தி மட்டும் ஏன்தான் இப்படி அசடு வழிகிறார்களோ!) உருக்கமான கட்டங்களிலும் சரி, நகைச்சுவைப் பகுதிகளிலும் சரி, கதை வசன கர்த்தா ரமணியின் பேனா அநாயாசமாக விளையாடியிருக்கிறது. ஆனால் போலீஸ் அதிகாரி வெங்கட்ராமன் ஏதோ கொஞ்சம் தமிழ் பேசினால் போதும் என்று நினைத்து விட்டார் போலிருக்கிறது. அத்தனை ஆங்கில வசனங்கள்!

நடிப்பு: வசனங்களைச் சொல்லுவதில் மட்டும் கவனமாக இராமல், தங்கள் பாத்திரங்களை உருவாக்கிக் காட்டுவதிலும் ஒட்டு மொத்தமாக அத்தனை அமெச்சூர்களும் அமெச்சூரார்களாயிருக்கிறார்கள். பளிச் சென்று இருப்பது ஏ. ஆர். எஸ்.ஸின் கம்பீரமான நடிப்பும், சச்சுவின் உருக்கமான நடிப்பும் மட்டுமல்ல; பாபு, வெங்கட்ராமன், சங்கரநாராயணன், கண்ணன் கோஷ்டியின் நகைச்சுவை நடிப்பும்தான்.

ஒரு கேள்வி: சினிமாவில் மட்டும் நகைச்சுவைப் பாத்திரங்களிலேயே நடிக்கும் சச்சு, மனோரமா போன்றவர்கள், நாடகங்களில் உணர்ச்சிகரமான பாத்திரங்களில் எப்படி வெற்றிகரமாக நடிக்கிறார்கள்? மேடையில் நகைச்சுவைப் பாத்திரங்களை யெல்லாம் ஆண்களே ஆக்ரமித்துக் கொள்வதாலா?

— சாருகேசி

இரண்டு மனஸ் ஒரு மனஸ்

அன்னம்


நிர்மலாவுக்கு அது தலைச்சன்.

கல்யாணமாகி இன்னும் ஒரு வருடம் தாண்டவில்லை. அதற்கே இன்னும் ஒரு மாதம் போக வேண்டும். அதற்குள் அம்மா ஆகப் போகிறாள்.

வழக்கமாக அவளைப் பரிசோதித்த லேடி டாக்டர் டிசம்பர் தாண்ட வேண்டும் என்று சொல்லியிருந்தும் கூட அவள் குழந்தை அவசரப்பட்டான். மதுரையில் — மிகவும் வேண்டிய உறவினர் வீட்டுத் திருமணத்திற்கு அவளைக் கூட்டி வந்திருந்த அவள் கணவன் சந்துரு. ''என்ன செய்வது?'' என்று திகைத்துப் போனான்.

உடன் இருந்தவர்கள் அவன் உதவிக்கு வந்தார்கள். ஊரிலேயே மிகப் பெரிய நர்ஸிங் ஹோமுக்குக் கூட்டிச் சென்றார்கள். அங்கு போன பிறகுதான் சந்துருவுக்கு நிம்மதி பிறந்தது.

அவனுக்குத் தெரிந்தவர்கள் இரண்டு பேர் அங்கே இருந்தார்கள். நர்ஸிங் ஹோமுடன் இணைக்கப்பட்டிருந்த பரிசோதனைச் சாலையில் ஒரு அதிகாரியாக இருந்த வேணு, நிர்மலா



வுகளுச் சொந்தக்காரன். இன்னும் சற்றுப் பணப் பசை மட்டும் கூடியிருந்தால் நிர்மலாவுக்குத் தாலி கட்டியிருப்பான். ஆனால் சந்துரு — எல்லா விதத்திலும் அவனை விட அதிருஷ்டசாலி. முந்திக் கொண்டுவிட்டான்.


வேணு தானே முன்வந்து எல்லா ஏற்பாடுகளையும் கவனித்தான். ஸ்பெஷல் அறை உடன் கிடைத்தது. 'யூரின் டெஸ்ட்', ரத்தப் பரிசோதனை' எல்லாம் உடனுக்குடன் செய்யப்பட்டன. நிர்மலாவைப் பற்றிய எல்லா குறிப்புகளும் அடங்கிய அட்டை — அவள் படுக்கைக்குப் பக்கத்தில் மாட்டிய பிறகு— இன்னமும் அவர்கள் அங்கே இருக்கக் கூடாது என்று லேடி டாக்டர்கள் அவசரப்படுத்திய பிறகுதான் — வேணு வெளியே வந்து சந்துருவுடன் காத்திருந்தான்.

தலைமை லேடி டாக்டருடன் வந்த நர்ஸ் இந்திராவைப் பார்த்துச் சந்துரு ஆச்சரியப் பட்டுப் போனான். கடற் கரையின் படகு மறைவிலேயும், தியேட்டர்களின் முன் வராந்தாவிலேயும் அவர்களைப் பலர் பார்த்திருக்கிறார்கள். புதிதாகக் கல்யாணமான ஜோடி என்றுகூட நினைத்திருக்கலாம். அத்தனை நெருக்கம்.

சந்துரு என்ன செய்வான்? லட்சக் கணக்கான ரூபாய்சொத்துடன் கூடிய ஒரேபெண், மாமனார் கம்பெனியில் மானேஜிங் டைரக்டர் உத்தியோகம். தனி பங்களா, தனி கார் — பாரிஸிலும் லண்டனிலும் ஹனிமூன். இந்திராவுக்காகப் பரிதாபப் பட்டால் இதெல்லாம் நினைத்துப் பார்க்க முடியுமா? தன் பெற்றோர் தலையில் பழியைப் போட்டு விட்டு நிர்மலாவின் கழுத்தில் அவன் தாலியைக் கட்டினான்.

சென்னையை விட்டு இந்திரா எங்கேயோ போய்விட்டாள் என்று கேள்விப் பட்டிருந்தான். ஆனால் அவன் அவளை மதுரையில் இந்த நர்ஸிங் ஹோமில் — இந்தச் சந்தர்ப்பத்தில் சந்திப்போம் என எதிர்பார்க்கவில்லை.

"வாயிலே என்ன இருக்குது?"
"சிவிங்கம்"
- கீதா



நிர்மலாவுக்குப் பிரசவம் சுலபத்தில் ஆக வில்லை. பதினொரு மணி நேரம் வேதனைப் பட்ட பின்னர் ஓர் ஆண் குழந்தைக்குத் தாயானாள். உதிரப் போக்கு அதிகமாகி மயங்கியே கிடந்தாள்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு இந்திராவுக்கு இரவு டியூட்டி. ஒன்பது மணி அளவில் நிர்மலாவின் நாடித் துடிப்பு திருப்திகரமாக இல்லை. இரவு நேர டியூட்டி டாக்டர் வந்து பார்த்தார். உடனே ரத்தம் ஏற்றுவதற்கு ஏற்பாடு செய்யும்படி உத்தரவிட்டார்.

நிர்மலாவின் ரத்தம் எந்தப் பிரிவைச் சேர்ந்தது என்பதை அவள் கட்டிலின் அருகே மாட்டப்பட்டிருந்தஅட்டையிலிருந்து புரிந்து கொண்டாள். ரத்தம் எடுத்து வர அவள் ரத்த சேமிப்பு நிலையத்துக்குப் போய்க் கொண்டிருந்தபோது—

அவள்மனத்தில் ஒரு திட்டம் உருவாகியது. நிர்மலா மட்டும் பிழைக்காது போனால் நிச்சயம் சந்துரு அவளுடையவன்தான். அவனைத் தட்டிக் கழிக்கக் காரணம் ஏதும் கிடையாது. அவள் கற்ற படிப்பு ஒரு யோசனையைச் சொல்லியது.எந்தஉடலும் தனக்குப் பொருந்தாத ரத்தத்தை ஏற்றுக் கொள்ளாது. அப்படி ஏற்றினால் பலவீனமான நிலையில் உயிர் பிரிவதற்கு வாய்ப்பு உண்டு.

இந்திரா — நிர்மலாவுக்குப் பொருந்தாத வகை ரத்தத்தை எடுத்துக் கொண்டாள். பாட்டிலின் மேல் ஒட்டப்பட்டிருந்த லேபிளில் திருத்தம் செய்தாள். டாக்டர் பாட்டிலைப் பார்க்கவில்லை. ரத்தம் நிர்மலாவுக்குச்செலுத்தப்பட்டது.

காலையில் டியூட்டி முடிந்து திரும்பிய இந்திராவுக்கு நிச்சயம் தெரியும். அவள் திரும்பி வரும்போது நிர்மலாவின் படுக்கை காலியாக இருக்கும். அவள் உடல் சென்னைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கும் என நினைத்தாள்.

ஆனால் நிர்மலாவின் நிலையில் பெருத்த அபிவிருத்தி தெரிந்தது. படுக்கையில் சாய்ந்தபடி அமர்ந்திருந்தாள். இந்திராவை நன்றியுடன் அழைத்த சந்துரு, தன் மனைவிக்கு அறிமுகம் செய்து வைத்தான்.

''இந்த ஸிஸ்டரா....? எனக்கு நன்றாகத் தெரியுமே....ரொம்பவும் அக்கறையாக என்னைக் கவனித்துக் கொண்டார்கள்.'' என்றாள் நிர்மலா.

இந்திரா குழம்பிப் போனாள். எப்படி மாற்று குரூப் ரத்தம் இவளுக்கு ஒத்துக் கொண்டது?

அவளுக்குத் தெரியாது. வேணு நிர்மலாவைக் காதலித்தவன். தனக்கு அவள் கிடைக்கவில்லை என்ற ஆத்திரத்தில் இன்றாவது அதன் பலனை அனுபவிக்கட்டும் என்ற ஆத்திரத்தில் ரத்தப் பரிசோதனையின்போது ரத்தத்தின் வகையை மாற்றிக் குறித்திருந்தான்.

இரண்டு பேர் திட்டமிட்டு இரண்டு தப்புச் செய்தபோதுகூட — ஒரு பிளஸ் பாயிண்ட் — நிர்மலாவின் கையில் ஆயுள் ரேகை அழுத்தமாய் விழுந்திருந்ததே!

Wake up.
The times have changed.



It's a marvel of technology and thoughtfulness. Set it on 'slumber' and drop off to sleep, and it switches off. Automatically. And it wakes you up with music, news, or a 'buzz'. Touch 'snooze', and it lets you sleep 10 minutes longer.

A powerful two-band radio. Or an accurate quartz clock that switches over automatically to 'battery' when mains fail.

Anyway you look at it, it's a winner.

From Philips, the trusted Indian household name for over fifty years.

PHILIPS

Peico Electronics & Electricals Limited

CASPR-851-203

உன் துணையல்லால் சரண் இல்லை

கீரன்

இலக்கியத்தில் இறையுணர்வு

ஆழ்வார்கள், நாராயண பரத்துவத்தில் ஆழ்வார்கள்.

குலசேகரப் பெருமான் மற்று ஆரும் பற்றிலேன் என மாலைப் பற்றி வாழ்ந்தவர். நல்ல உரப்பான பக்தி. 'வானாளும் மண்ணரசும் வேண்டேன்' எனப் பிரகடனப்படுத்தி வாழ்ந்தவர். மண்ணரசாக இருக்கும்போதே. அதனால் அவர் பாடல் வார்த்தைகள் அர்த்த கர்ப்பம் உடையவை.

கடவுள் தனக்கு அருள் புரிந்து தீரவேண்டிய கடமை உடையவர் என்ற கொள்கை குலசேகரப் பெருமான் கொள்கை. அதனால் அவர் பாடல்கள் கம்பீரமானவை. திவ்யப் பிரபந்தத்தில்வித்துவக் கோட்டம்மான்விஷயமான பெருமாள் திருமொழி பக்திக் களஞ்சியம்.

''வித்துவக் கோட்டம்மானே! என் துன்பத்தை நீ தடுக்காவிட்டால் வேறு எனக்குச் சரண் இல்லை! அம்மா அடித்தால் பிள்ளை எங்கு போகும். அம்மாளிடம் தவிர!''

கட்டிக்கொண்ட புருஷன் பலருக்கு முன்னிலையில் தன்னை இழிவாக நடத்தினாலும் ஒரு குலமகள் அவனைத் தவிர வேறு சிந்தனையற்றவளாகத்தான் இருப்பாள். வித்துவக் கோட்டம்மானே! நீ என்னைக் கொண்டவன்.''

''மீன் நோக்கும் நீள்வயல் சூழ் வித்துவக் கோட்டம்மா! நீ என்பால் நோக்க மாட்டாய்! எனக்குத் தெரியும்! ஆனாலும் நான் என்ன செய்வேன்! உன்னைத் தவிர வேறு பற்றில்லையே! அரசாங்கம் என்ன கொடுமை செய்தாலும் குடிமக்கள் அதன் கீழ்தானே வாழவேண்டி யிருக்கிறது!''

என்னதான் பக்தியோடு இருந்தாலும் ''சோதனைகள் வருகின்றனவே'' என்று அலுத்துக் கொள்வது இயற்கைதான். ஆனால் இறைவன் வாழ்க்கையில் தோல்வியைத் தரத் தர அவன்மீது பக்தி அதிகமாக வேண்டும் என்கிறார் குலசேகரப் பெருமான் ஓர் அற்புத உவமை மூலம்.

நம்மை யாராவது அடித்தால் திருப்பி அடிக்கிறோம். ஆனால் நம் கையில் ஒரு பெரிய புண் ஏற்பட்டு அதை மருத்துவர் கத்தி கொண்டு அறுத்தால்? அவருக்குப் பணம் அல்லவா கொடுக்கிறோம்? ஏன்? அவர் கத்தியால் கீறித் தற்காலிகமாகத் தரும் துன்பம், நிரந்தரம் நோயற்ற உடலுடன் வாழுவதற்கு என்று தெரிந்து கொண்டு. அது போல் இறைவன் வாழ்க்கையில் சோதனைகளைத் தரத் தர அவன்மீது பற்று அதிகமாக வேண்டும்.

துயரத்தைக் கண்டு துவளும் உள்ளமா குலசேகரப் பெருமானுக்கு? ''வித்துவக் கோட்டம்மானே! தாமரை மலர்வதற்கு வெப்பம் வேண்டும் என்பது உண்மைதான். ஆனால் அது தொலைவில் இருக்கும் சூரிய வெப்பத்துக்கு மலருமே தவிர, பக்கத்தில் வைக்கப்படும் தீப்பந்தத்துக்கு மலராது. தொலைவில் இருக்கும் உன் அருளுக்கு அகங்குழைகின்றேன். பக்கத்தில் வரும் துன்ப நெருப்பால் நான் குழைவ இல்லை!''



''வித்துவக் கோட்டம்மானே! வானம் பெய்ய மறுத்தால் பயிர்கள் என்ன செய்ய முடியும்? வானோக்கி வாழ்ந்து கொண்டிருக்க வேண்டியதுதான். உயிர்களும் உன் கருணையைத் திசை நோக்கித் தொழுவது அன்றி வேறு என்ன செய்ய முடியும்?''

''ஆறுகள் தோன்றும் இடம், ஓடும் நிலங்கள் எதுவாயினும் என்? அவை தொடு கடலைத்தொட வேண்டியவைதானே! ஜீவாத்மாக்கள் முடிவில் பரமாத்வாகிய உன்னிடம் சரண்புகுவதல்லால் வேறு என்ன செய்ய இயலும்.''

செல்வம் என்பது சிந்தையின் நிறைவு என்பது ஆன்மிக உலகத்தின் முடிவு. ஒருவன் இவ்வுலகில் பொருட் செல்வத்தையே முழுமையாகக் கருதாமல் இறைவனையே கருதினால், அவன் தானே இறைவன் ஆகிவிடுகிறான். பின்னர் சிந்தையில் நிறைவுக்குக் கேட்க வேண்டுமா? தன் உள்ளம் ஆன்ம நாயகனையே எண்ணி விடுவதால் தன்னையே தான் விரும்பும் மனிதனாகி விடுகிறான்! அவனுக்கு வேறு என்ன குறை?''


> **"துரியோதனன் சாப்பாடு!"**
>
> சாப்பிடும்பொழுது, சாப்பிடும் தட்டிலிருந்து ஒரு கவளத்தை எடுத்துச் சாப்பிட்டு விட்டால், மீதி இருப்பது எச்சில் சோறு ஆகிவிடுகிறது! ஆகவே அந்த எச்சில் சோற்றைத் தொடாமல், அடுத்த அடுத்த கவளங்களை அடுத்தடுத்த தட்டுக்களில் இருந்து எடுத்து உண்டானாம் துரியோதனன்!
>
> - எஸ். பொன்னுசாமி

''நின்னையே தான் வேண்டி
நீள்செல்வம் வேண்டாதான்
தன்னையே தான்வேண்டும்
செல்வம் போல், மாயத்தால்
மின்னையே சேர் திகிரி
வித்துவக் கோட்டம்மா!
நின்னையேதான் வேண்டி
நிற்பன் அடியேனே!''



யூ.எல்.ஐ.பி. +

பாதுகாப்புக்கு மறு பெயர்



அனைத்தும் அடங்கிய ஒரே சேமிப்புத் திட்டம்

லைஃப் இன்ஷூரன்ஸ் கார்ப்பொரேஷன், ஜெனரல் இன்ஷூரன்ஸ் கார்ப்பொரேஷன், யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா—மூவரும் இணைந்தளிக்கும் இணையற்ற திட்டம் யூ.எல்.ஐ.பி. + உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் பாதுகாப்பு அளிக்கும் சேமிப்புத் திட்டம்.

யூ.எல்.ஐ.பி. + ன் நன்மைகள்

- உயர்ந்த வருமானம். உங்கள் சேமிப்புத் தொகை ரூ. 12000 திட்ட முடிவில் (10 ஆண்டில்) ரூ. 18000 மாகவும் (15 ஆண்டில்) ரூ. 22000 மாகவும் உயர்ந்து விடுகிறது.
- வரிச்சலுகை. இத்திட்டத்தில் முதலீடு செய்யும் உங்கள் தொகைக்கு பூரண வருமான வரி விலக்கு உண்டு.
- விபத்து பாதுகாப்பு. நீங்கள் எடுக்கும் திட்டத்தின் மதிப்பு எதுவானாலும், ரூ. 15000 வரை உங்களுக்கு விபத்து பாதுகாப்பு அளிக்கப்படுகிறது.
- ஆயுள் பாதுகாப்பு. நீங்கள் சேரும் திட்டத்தின் தொகைக்கு சமமாக உங்களுக்கு ஆயுள் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. மருத்துவ பரிசோதனை தேவையில்லை.
- ரூ. 24000 வரை சேமிக்கலாம் ரூ. 12000க்கு ஒரு திட்டமும் அதிலிருந்து 3 வருடங்கள் கழித்து அதே தொகைக்கு மற்றுமொரு திட்டமும் எடுத்துக் கொள்ளலாம்.

பாதுகாப்பான வாழ்க்கைக்கு இன்றே யூ.எல்.ஐ.பி. திட்டத்தில் சேர்ந்திடுங்கள்.

இதர விபரங்களுக்கு எங்களையோ அல்லது எங்கள் ஏஜெண்டுகள் மற்றும் தலைமை பிரதிநிதிகள் அல்லது உங்களுக்கு அருகிலுள்ள பாங்க் ஆப் பரோடாவின் கிளைகளையோ அணுகுங்கள்.

எங்கள் தலைமை பிரதிநிதிகள் :

ஏ. தனபால், 10 ஜே. ஹூஸர் ரோடு, கோயம்புத்தூர் 641 018. போன் : 34776 (கோயம்புத்தூர், பெரியார் மாவட்டங்களுக்காக)

எம். ராமமூர்த்தி, 30, எல்.ஐ.சி. காலனி, மதுரை-625 002 (மதுரை மாவட்டத்துக்காக)

கே. முத்துசாமி, 52-ஏ, வ.உ.சி. நகர், தஞ்சாவூர்-613 007. போன் : 1224 (தஞ்சாவூர் மாவட்டத்துக்காக)

யூனிட் டிரஸ்ட் ஆப் இந்தியா

(ஒரு பொதுத்துறை நிதி நிறுவனம்) தலைமை செயலகம் : பம்பாய்-20

தெற்கு பிராந்திய செயலகம் :

ரெஜினா மேன்ஷன், 46, செகண்ட் லைன் பீச், சென்னை-600 001. தொலைபேசி : 27433

உங்கள் சேமிப்பின் தொடக்கம் யூனிட்டுகளாகவே இருக்கட்டும்

UTI-101-81-Tam

ஸ்கூட்டர் விரைந்தது.

புல்லட் சீறிப் பாய்ந்து துரத்தியது.

குறுக்கே ஒரு குழந்தையின் ஓட்டம்.

'கீ....ச்'

புல்லட் சக்கரித்து நின்றது.

மீண்டும் 'பிக் அப்' ஆவதற்குள் ஸ்கூட்டர் ஒரு தெரு திரும்பி, பிறகு ஒரு நாற்சந்தியைக் கடந்து மறைந்து விட்டது.

புல்லட் நாற்சந்தியில் நின்றது.

சாலை ஓரக் கடையில் புல்லட்டில் வந்தவர் விசாரித்தார்.

அவர் ஒரு சப்-இன்ஸ்பெக்டர் ஆஃப் போலீஸ்.

''நான் பார்க்கலிங்களே!''

நான்கைந்து பேர் கூடிவிட்டனர்.

''பச்சை நிற ஸ்கூட்டர்தானே?''

''ஆ...ங்! ஆமாம்... ஆமாம்...''

''இந்தப் பக்கம் போச்சு சார்....'' நான் கைந்து பேர் தெற்குப் பக்கம் கை காட்டினர்.

மோதிரம் அணிந்தவன், டயல் வாட்ச் போட்டவன், மீசைக்காரன் — இப்படி, சப் இன்ஸ்பெக்டருக்குப் போதுமான தகவல் கிடைத்து விட்டது. புல்லட் கிளம்பியது.

'பட்...பட்...பட்...பட்...'


நூனை ஜதி தவறாமல் புல்லட்டின் ஊர் வலம். எஸ். ஐ. யின் பார்வை இருபுறமும் மேய்ந்தது.

'பளிச்' என்று அவர் முகத்தில் பிரகாசம். ஒரு காம்பவுண்டில் பச்சை ஸ்கூட்டர்!

புல்லட் மெல்ல ஊர்ந்தது. காம்பௌண் டில் ஒரு மூன்றடுக்கு மாடி. நிமிர்ந்து பெயர்ப் பலகையை நோக்கினார். அது ஒரு உயர்தர பாங்கு.

விளக்கில் விழுந்த விட்டில்

ஜானகிமணாளன்



புல்லட் காம்பவுண்டில் நுழைந்தது.

பாங்கு வேலை தொடங்க இன்னும் நேரம் இருந்தது.

வராந்தாவில் சில வாடிக்கையாளர்கள். ஒரு கிழவர்... ஒரு இளைஞர்... ஒரு மூதாட்டி. இப்படிச் சில பேர்.

படி ஏறி வராந்தாவைக் கடந்து கதவை ஒட்டி நின்றார்.

உட்புறம் ஒரு நோட்டம். அலுவலர்கள் ஓரிருவர் வந்திருந்தனர்.

சாலையில் கேள்விப்பட்ட அடையாளங் களைத் துருவினார்.

அது நவீனமான ஹால். ஒரு மூலையில் கண்ணாடித் தடுப்பறை. அதற்குள் ஒருவர். எஸ். ஐ.யின் பார்வை அவர் மேல் நிலைத்தது.

மகேஷ் வழக்கமாக அலுவலகத்துக்குச் சரியான நேரத்துக்குத்தான் வருவான்.

இன்று சற்று முன்னால் வந்து விட்டான்.

வந்ததும் வராததுமாக இரண்டு லெட்ஜர் களைப் பிரித்துப் புரட்டினான். சில ஃபைல் களைப் புரட்டினான். எதை எதையோ எழுதி னான். கூட்டினான் கழித்தான். ஏதோ ஒரு முடிவோடு டெலிபோனைச் சுழற்றினான்.

எதிர்பக்கம் தொடர்பு கிடைத்தது.

'ஹலோ...' என்றவாறு நிமிர்ந்தான்.

பார்வை வாசற்படியில் நிலைத்தது.

அங்கே சப் இன்ஸ்பெக்டர்.

சட்டென்று வயிற்றை என்னவோ செய் தது. தன்னை மறந்து எழுந்து விட்டான். அவனிடம் பதற்றம். பரபரப்பு...,இமாப் பீதி! முகம் வெளுத்து விட்டது.

ஃபோன் லைனைக்கூடத் துண்டிக்க மறந் தான். ரிஸீவரை மேஜை மீது 'பொத்' தென்று போட்டான்.

அவசரம் அவசரமாகப் பார்த்துக்கொண் டிருந்த ஃபைலை மூடினான். வலதுபுறம் ரெக்கார்டு தட்டு பீரோ. அதில் லெட் ஜர்கள் குத்திட்டு நின்றன. லெட்ஜர்களை மூடி அவற்றின் மீது போட்டான். ஃபைல் களையும் அவற்றின் மீது எறிந்தான்.

அதற்குள் எஸ். ஐ. அருகில் வந்துவிட்டார்.

மகேஷின் பீதி மேலும் அதிகரித்தது.

சகஜமாக வணக்கம் கூறி வரவேற்கக்கூட முடியவில்லை. செயலற்று நின்றான்.

அவனது இந்தச் செயல்கள், சப் இன்ஸ் பெக்டரிடம் தாம் தேடி வந்த நபர் இவன் தான் என்பதை ஊர்ஜிதப்படுத்திவிட்டன. அவரிடம் ஒரு மிடுக்கான களைப்பு.

''என்ன மிஸ்டர்? ஏன் இப்படிப் பதர் றீங்க?''

மகேஷிடம் பதில் இல்லை.

''செய்யறதைச் செஞ்சுட்டீங்க... இப்படி லெட்ஜரை மூடித் தூக்கி எறிஞ்சுட்டு, தலை கவிழ்ந்து நின்னால் ஆச்சுதா?''

அவரது வலது கைத்தடி அவனையும் இடது கை லெட்ஜரையும் சுட்டிக் காட்டின.

மகேஷ் நிமிர்ந்து அவரைப் பார்த்தான். பிறகு மீண்டும் குனிந்து கொண்டான்.

''பொறுப்புள்ள பதவியில் இருக்கிறீங்க... நீங்களே இப்படிச் செஞ்சா....?''

''ஸார்... நான் ப்ளெய்னுச் சொல்றேன். இதுல என் 'ஹாண்டு' இடையவே இடையாது ஸார்.....''

''பொய்! உங்களுக்கு அதுல பங்கு உண்டு இல்லையா?''

பங்கு என்றதும் மகேஷ் நிதானித்தான். பிறகு ''எல்லோருக்கும் ஈக்வல் ஷேர் தான் ஸார்....'' என்ருன்.

எஸ். ஐ.க்கு ஏதோ புரிகிற மாதிரி இருந்தது. புரியாதது போலவும் இருந்தது. கொஞ்சம் நிதானித்துக் கொண்டு வார்த்தைகளை எண்ணி வெளியிட்டார்.

''ஈக்வல் ஷேர்ன்னு எதுல?''

''அல்டிமேட் நெட் 'ப்ராஃபிட்லதான் சார்''

எஸ். ஐ. விழித்துக் கொண்டார். அவரிடம் கொஞ்சம் குழப்பம். மேலும் பல தகவல்களை அறிய விரும்பினர். ஆனல் எதையாவது கேட்கப் போய் மகேஷ் தன்னைச் சுதாரித்து விடக் கூடாதே என்று பயம் வேறு. தாம் குழம்பினல் பரவாயில்லை. பிடிபட்ட கேஸைக் குழப்பி விட்டுவிடக் கூடாதே என்பதில் எச்சரிக்கை!

எனவே மேற்கொண்டு பேசவும் முடியாமல் பேசாமலும் இருக்க முடியாமல் தவித்தார். ஆனல் ஒன்று. மகேஷைச் சிந்திக்க விடக் கூடாது என்பதில் தனிக் கவனம்!

நல்லவேளை! அப்போது வாசலில் காரின் சத்தம் கேட்டது. பாங்கு தலைமை அதிகாரி வந்துவிட்டார். உடனே மகேஷின் பதற்றம் அதிகமாகி விட்டது. அதிகாரி மிகவும் கண்டிப்பானவர். சட்டப்படி நடப்பவர். எதற்கும் வளைந்து கொடுக்க மாட்டார்.

''ஹலோ!'' எஸ். ஐ. அவரை வரவேற்ருர்.

''ஹலோ! வாங்க! வாட் ஈஸ் த மேட்டர்....?''

''வித் அவுட் யுவர் பர்மிஷன், ஐ ஹாவ் எண்டர்டு யுவர் ப்ரமிஸஸ்....''

''தட்ஸ் ஆல் ரைட்... ரூமுக்கு வாங்க... விஷேர்வியா பேசலாம்....''

எஸ்.ஐ. அதிகாரியைப் பின்தொடர்ந்தார். போகும்போது ''நீங்களும் வாங்க மிஸ்டர் மகேஷ்....'' ஞாபகமா அவன் தூக்கி எறிந்த லெட்ஜரையும் ஃபைல்களையும் கையில் எடுத்துக்கொண்டார்.

மனைவி: கணவன் நீண்ட ஆயுளுடனும் ஆரோக்கியத்துடனும் இருக்க மனைவி என்ன விரதம் இருக்கவேண்டும்?

கணவன்: மௌன விரதம்! -ஸ்ரீராம்



தலைமை அதிகாரி தம் ஆசனத்தில். எஸ். ஐ. எதிர் ஆசனத்தில். பணியாளர் ஒருவர் மின் விசிறியைச் சுழல விட்டார். மகேஷ் ஓர் ஓரத்தில் அடக்க ஒடுக்கமாக நின்ருன்.

''என்ன சேதி? என்ன வேணும் உங்களுக்கு?''

''எனக்கு ஒன்னும் வேண்டாம்... நான் வேறொரு விஷயமாக வந்தேன்... இடையில் இந்தப் பணி... சர்க்கிள் என்னை இதற்கு டெப்யூட் பண்ணி யிருக்கிருர்....''

''என்ன விஷயம்?....''

''என்னைக் கேட்கவே வேண்டாம்.... மிஸ்டர் மகேஷையே கேளுங்கள்.... சொல்லுங்க மிஸ்டர் மகேஷ்'' என்று கூறிவிட்டு, தாம் இருக்கும் இடத்தை போனில் சர்க்கிள் இன்ஸ்பெக்டருக்கு அறிவித்து வைத்தார்.

''ஒன்னும் இல்ல ஸார்... ஒரு தப்பு நடந்து போச்சு... அஃப்கோர்ஸ் அதுக்கு நானும் உடந்தைதான்னுக் கூட.... ஐ ஆம் நாட் ஃபுல்லி ரெஸ்பான்ஸிபிள்....''

''எதுவா இருந்தாலும் ஒளிக்காம சொல்லுங்க... இட் வில் ஹெல்ப் யூ...டு ஸேவ் யுவர் ஸெல்ஃப்... கமான்....''

''வந்து ஸார்....''

மகேஷ் விஷயத்தைத் திக்கித் திணறிய வாறு சொல்லத் தொடங்கினுன்.

மகேஷ் அக்கௌண்டெண்ட். அவனுக்குக் கீழ் ரகுபதி என்று ஒரு எழுத்தர். நிரந்தர வைப்புக் கணக்குகளைப் பார்ப்பவர். பலே பேர்வழி. முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பவர். மாரிமுத்து ஆபீஸ் பியூன். ரகுபதியின் கையாள். தனது லீலைகளை அவர் நடத்துவது அந்த மாரிமுத்துவின் உதவியோடுதான்.

ஒரு வயதான கிழவி. ரூபாய் இருபதாயிரத்தை நிரந்தர வைப்பில் போட வந்திருக்கிருள். படிப்பறிவு கிடையாது. கையெழுத்து மட்டும் போடுவாள். வேறு உற்ருர் உறவினர் இல்லை. ஒரே மகன். எங்கோ வெளி நாட்டில் இருக்கிருன். அங்கிருந்து அனுப்பிய பணம் தான் அது.

மாரிமுத்துவின் பார்வை கிழவியின் மீது விழுந்து விட்டது. விடுவாஞ! ரகுபதியிடம் சிக்கவைத்துவிட்டான்.

ரகுபதி அப்பணத்தை நிரந்தர வைப்புக் கணக்கில் போடஏற்பாடுசெய்தான். மாதாந்திர வட்டி. அதைப் போட ஒரு சேவிங்ஸ் கணக்கு. மாதா மாதம் வட்டியை சேவிங்ஸ் கணக்கில் போடப் போவதால் நிரந்தர வைப்பு ரசீது பாங்கிலேயே இருக்கும் என்று கூறிவிட்டு, அதை ரகுபதியே வைத்துக் கொண்டான். சேவிங்ஸ் பாஸ் புத்தகம் மட்டும் பாட்டியிடம் போயிற்று.

கிழவியிடம் கையொப்பம் வாங்கும்போது பேப்பரோடு பேப்பராக, நிரந்தர வைப்பிலிருந்து கடன் பெறும் படிவங்கள் சிலவற்றிலும் கையொப்பம் பெற்று விட்டான். ஒரிரு மாதத்துக்குப் பிறகு, அவற்றைக் கொண்டு தானே நிரந்தர வைப்பிலிருந்து கடனைப் பெற்றுக் கொண்டான்.

இதே போலக் கிழவியிடம் மட்டும் தான் என்பதில்லை. இப்படி இன்னும் நாலைந்து

பேர். கிட்டத்தட்ட இவ்வாறு ஒரு லட்சம் வரை பெற்று விட்டான். அந்தப் பணத்தை வெளியில் துணைத் தொழிலில் முதலீடு செய்துவிட்டான். மாரிமுத்துவும் பார்ட்னர். அதிக வட்டிக்குக் கொடுக்கல் வாங்கலும் உண்டு. கிடைக்கும் லாபத்தில், நிரந்தர வைப்புக்களில் பெற்ற கடன்களுக்குத் தவறாமல் வட்டியைக் கட்டிவிட்டு, மீதியைப் பங்கு போட்டுக்கொண்டனர். மாரிமுத்துவும் ரகுபதியும் முக்கிய பங்கினர். மகேஷூம் அதற்கு உடந்தை. கணக்கு வழக்குகள் அவன் பொறுப்பில். மூவருக்கும் லாபத்தில் சம பங்கு. இதெல்லாம் வேறு ஒருவருக்கும் தெரியாது.

கடன் பெறப்பட்ட நிரந்தர வைப்புக் கணக்குகள் தவிர, கடன் பெறுவதற்குத் தயாராக ஓரிரண்டு ரசீதுகள் சதா கைவசம் இருக்கும். எவரேனும் ஒருத்தர் திடீரென்று வைப்புக் கணக்கை முடித்துவிட வந்தால் இவற்றைக் கொண்டு கடன் பெற்றுச் சமாளித்து விடுவார்கள். மாரிமுத்து அடிக்கடி சம்பந்தப்பட்ட வைப்புக் கணக்கர்களுடன் தொடர்பு வைத்துக் கொண்டு நிலைமையை அவ்வப்போது அறிந்து வந்து சொல்வான். இப்படி இரண்டு மூன்று ஆண்டுகளாக நடக்கிறது.

இது சம்பந்தப்பட்ட ஃபைல்கள் மகேஷிடம். அன்று ஒரு பாட்டி கடன் வாங்க வருவதாக இருந்தாள். மாரிமுத்து மூலம் முதல் நாளே செய்தி வந்திருந்தது. பணம் பெற்றுக் கொடுத்தாக வேண்டும். அதற்காகத்தான் சற்று முன்னதாகவே வந்து, அவன் கணக்கு வழக்குகளைப் பார்த்துக் கொண்டிருந்தான். எஸ். ஐ. வந்தது அப்போதுதான்.

மகேஷ் சொல்லிக்கொண்டிருந்தபோதே சர்க்கிள் இன்ஸ்பெக்டர் வந்துவிட்டார். கூடவே நான்கு கான்ஸ்டேபிள்கள். பாங்கு துவங்க நேரமாகி விட்டது. எனவே மாமூல் நிலைமை பாதிக்கப்படாமல் இருக்க, அனைவரும் மாடிக்குப் போனார்கள்.

மாரிமுத்துவும் ரகுபதியும் வரவழைக்கப்பட்டனர். தனித் தனியே விசாரணை. அவரவர் கூறியதை அப்படி அப்படியே எழுதி வாங்கினர்.

தலைமை அதிகாரி போலீசுக்குப் புகார் எழுதிக் கொடுத்து, அதன் அடிப்படையில் ரகுபதி, மாரிமுத்து, மற்றும் மகேஷ் ஆகியோர் மீது நடவடிக்கை. மூவரும் போலீஸ் வண்டியில் ஏற்றப்பட்டனர்.

''அடுத்தபடியாக உங்கள் ப்ரோகிராம் என்ன?'' – சர்க்கிள் எஸ்.ஐ.யைக் கேட்டார்.

''வேறொரு முக்கிய விஷயம் இருக்கு ஸார்....''

''என்ன?''

''காலையில காஞ்சிபுரத்திலேருந்து நகரத்துக்கு வந்துக்கிட்டு இருந்தேன். அப்போது வழியிலே ஒரு விபத்து... ஒரு ஸ்கூட்டர் ஒரு கிழவனைக் கீழே தள்ளி விட்டுட்டு, 'எஸ்கேப்' ஆயிட்டது....''



கணவன்: ''எங்கம்மாவைக் குரங்குனு சொன்னியாமே... என்ன திமிர் உனக்கு... உன்னை... உன்னை...''

மனைவி: ''ஏன் ஓரேடியா குதிக்கிறீங்க குட்டிக் குரங்காட்டம்!''

-உ. ராஜாஜி

''பச்சை ஸ்கூட்டர்தானே?'' – இது சர்க்கிள்.

''நீங்க பார்த்தீங்களா அதை?''

''அது அப்பவே பிடிபட்டுப் போச்சே!''

''எப்போது... எப்படி?'' எஸ். ஐ. ஆச்சரியப்பட்டுக் கேட்டார்.

''கிழவர் மேலே ஏற்றி, அவரை 'க்ளோஸ்' பண்ணின ஸ்கூட்டர் நகரத்துக்குள்ளேயும் ரெண்டு மூணு பேர் மேலே மோதி, ஒரு இடத்துலே ஸ்கூட்டரைப் போட்டுக்கிட்டுக் கீழே விழுந்துட்டான். நல்ல அடி. எந்திரிக்க முடியல்லே. தகவல் வந்துச்சு. போனேனும். கடைசிலே அவன் ஃபுல் போதையில ஸ்கூட்டர் ஓட்டிக்கிட்டு வந்திருக்கான். ஆஸ்பத்திரியில அட்மிட் பண்ணியிருக்கோம்...''

''அதே பச்சை ஸ்கூட்டரை விரட்டிக்கிட்டுத்தான் ஸார் நான் வந்தேன்.''

''அப்படியா?''

''ஆமாம் ஸார்... அந்தப் பச்சை ஸ்கூட்டர் தப்பிச்சுட்டுது.... பதிலுக்கு மகேஷோட பச்சை ஸ்கூட்டர் என் கண்ணுல பட்டுது போல இருக்குது. 'ஆக்ஸிடண்ட்' பண்ணினது மகேஷ்னு நினைச்சுக் கிட்டப் போய் விசாரிக்கத் தொடங்கினேன். மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பாங்கல்ல... அது மாதிரி பாங்குக் கணக்குல தப்புப் பண்ணியிருந்த மகேஷுக்கு என்னைக் கண்டதும் பயமாயிட்டது போல இருக்கு...உளறத் தொடங்கிட்டான். நான் ஜாஸ்தியாப் பேசக் கொடுக்காம... ஒரு விதமாச் சமாளிச்சு... மெல்ல உங்க கிட்ட ஒப்படைச்சுட்டேன்....''

''அப்படீன்னு இந்த பாங்கு கேஸ்...''

எஸ். ஐ. குறுக்கிட்டு, ''தானு வந்து நம்ப கிட்ட மாட்டிக்கிட்டது ஸார்...'' என்றார்.

''அதாவது விட்டில் பூச்சி தானு வந்து விளக்குல விழுந்துட்டுதுன்னு சொல்லுங்க.''

உரக்கச் சிரித்து மகிழ்ந்து இருவரும் புல் லட்டில் ஏறிச் சீறிப் பாய்ந்தனர்.

உ

நாளைய நாளினை அறிகின்ற நறுங்கலை ஜோதிடத்தை
நாடியே கற்றிடுவீர் நல்வாழ்வு பெற்றிடுவீர்

ஜோதிடப்பயிற்சி

(தபால் வழி போதனு முறைப் பயிற்சி)

வருங்காலம் சொல்லுங்கலை — வையத்துள் உயர்ந்த கலை. படிப்பாரா? பதவிகள் பெறுவாரா? பாண வகரம் பிடிப்பாரா? பார் மணக்க வாழ்வாரா? என்றறிந்து ஏற்ற வழி சென்று இனிய வெற்றி பெற்றிடவே — இது கலை துணை நிற்கும். வீடு கட்டும் யோகமுண்டா பெற்றோரைப் பேணுவாரா — கரம் பிடித்த மனைவியை காலமெல்லாம் காப்பாரா — என்றெல்லாம் கண்டறிந்து அவருக்குகந்த வழி தேர்ந்தெடுத்து தென்றலொத்த வாழ்வு தர இது கலை உதவி செய்யும். இக்கலையை எவரும் இது வரை பிறருக்குச் சொன்னதில்லை. இதன் பெருமைகளை விண்டதில்லை. கண்டறிந்த கலைகளிலே தலைமை நிலை பூண்ட கலை. அரியதோர் விருந்துக்கு அணிவகுத்து வந்திடுவீர். புதிய பாடங்கள் — பூவிரிக்கும் விளக்கங்கள் எளியமுறை — போதிப்பு. இனிக்கின்ற தமிழ்ப் படைப்பு. — பாடத்துடன் தருகின்ற நாட்குறிப்பும் — ராசி பலனும் — உங்களை காலத்தை அளக்கின்ற கலைஞானம் பெறவைக்கும். மாதமொரு கலை நுணுக்கக் கட்டுரையும் பாடத்துடன் இணைத்து பலா சுளையாகக் தருகின்றோம். கற்று முடித்தார்க்கு — சான்றிதழும், பட்டமும் சாலச் சிறப்பாக தருகின்றோம். அரியதோர் வாய்ப்பு இது.

சேரும் முறை செலுத்தும் கட்டணம் அறிந்திட **50 ந.பை.** தபால்தலை ஒட்டிய சுய விலாசமிட்ட கவரிணைத்து — **20-4-1982** தேதிக்குள் மனுச் செய்து கொள்க. வெளி நாட்டன்பர்கள் — பதிலுக்கான இண்டர் நேசனல் கூப்பன் வாங்கி வைத்து அனுப்பிடுக.

குறிப்பு : கற்று வரும் மாணவர்கள் கவனத்திற்கு — இம்மாத பாடங்கள் தயாராக இருக்கின்றபடியால் — கட்டணம் அனுப்பி — பாடங்களையும், ராசி பலன், இல்லிட வாசமும், இனியதோர் யோகமும் என்ற இணைப்புக் கட்டுரையும் பெற்றிடுங்கள்.

பிரபல ஜோதிடர், ஜோதிடஆசிரியர்

ஸ்ரீமத் ஜெயவீரதேவா

யோகி, ராஜயோகப்பயிற்சியாளர்

பிளாட் நெ. 204, கதவு எண் 5
அண்ணா நகர், மதுரை - 625 020

வேலையில்லாப் பட்டதாரி

— "628" —

அந்தப் பெரிய மனிதர் முன்னால் நின்று கொண்டிருந்தேன்.

"நீதானப்பா அந்த வேலையில்லாப் பட்டதாரி? உட்கார். ஆமா உனக்கு என்ன வயசு?"

"முப்பது வயசு."

"முப்பதா? இதுக்கு முன்னாடி என்ன பண்ணிக்கிட்டு இருந்தே?"

"இருபத்தொன்பது வயசுப் பையனா இருந்தேன்."

"என்ன படிச்சிருக்கே?"

"பி. ஏ."

"ஏன் பி. ஏ. சேர்ந்தே?"

"எனக்கு டாக்டருக்குப் படிக்கணும்னு தான் ஆசை. நான் கேரளாவில அப்ப இருந்தேன். பத்துக்குள்ள மார்க் வாங்கினாத் தான் எம். பி. பி. எஸ். சேர முடியும்னாங்க. நான் அதிக மார்க் வாங்கினதாலே பி.ஏ. சேர்ந்துட்டேன்."

"வேலைக்காக ஏதாவது முயற்சி எடுத்திருக்கிறாயா?"

"ஓ...சமீபத்திலே நானும் என் நண்பர்களும் செக்ரடேரியட் வரை பாத யாத்திரை போனோம். அரசாங்கமே வேலை கொடுன்னு கத்தினோம்."

"பலன் கிடைச்சுதா?"

"இல்லை. பப்ளிசிட்டி கிடைச்சுது."

"வித்தியாசமா ஏதாவது பண்ணுங்களேன்"

"அடுத்த முறை தலை கீழா நடந்து போகலாம்னு பிளான் இருக்கு. நீங்க ஏதாவது வழி சொல்லுங்க சார்."

அவர் கொஞ்ச நேரம் யோசித்தார்.

"நீங்க எல்லோரும் இளைஞர்கள்தானே? ஏன் ஒரு பத்திரிகை, இளைஞர்களுக்காக ஆரம்பிக்கக் கூடாது?"

"ஆரம்பிச்சு என்ன பண்றது?"

"இளைஞர்களுடைய பிரச்னைகளை அலசலாம். சினிமாவில் சேருவது எப்படி? அமெரிக்காவில் இளைஞர்களின் பொழுதுபோக்கு என்ன? டிஸ்கோ பாடல்களில் பாப்புலரா இருக்கிறது எது? அப்படிங்கிற இளைஞர்களின் பிரச்னைகளை அதில் விவாதிக்கலாம்."

"இதெல்லாம் இளைஞர்கள் பிரச்னைகளா?"

"இளைஞர்களுக்காக இதழ் ஏதாவது ஆரம்பிச்சா இதெல்லாம் கண்டிப்பா இருக்கணும்."

"சாதாரணப் பத்திரிகை ஆரம்பிச்சா என்ன? ஏன் குறிப்பா இளைஞர் பத்திரிகையா இருக்கணும்?"

"இளைஞர் பத்திரிகைதான் ஆரம்பிக்கிறதும் நிறுத்தறதும் சுலபம்."

குறித்துக் கொண்டேன்.

"ஏன்... சினிமாவுக்குப் பாட்டு எழுதுங்களேன்?"

"சார்... கவிதையைப் பற்றி எதுவுமே தெரியாது சார்."

"அவசியமில்லை. மேகங்களே, ராகங்களே, பாடுங்களேன், ஓடுங்களேன் — 'அப்படிங்கற இந்த நாலு வார்த்தைகளை வெச்சுக்கிட்டு நிறையச் சினிமா பாட்டு எழுதலாம்."

"நிஜமாவா?"

"ஆமா... எதுக்கும் நேரம் கிடைக்கற போது இப்ப வர்ற சினிமாப் பாட்டுக்களைக் கேட்டுக்கிட்டே இருங்க."

"நிச்சயமாச் செய்யறேன் சார்..."

நான் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சுக்குப் போய்க் கொண்டிருப்பதாகச் சொன்னேன்.

"எப்போ ரிஜிஸ்டர் பண்ணினே?"


"கார்டு என்னுது இல்லே சார். எங்கப்பாவுது. ரினிவலுக்காகப் போறேன்!"



மடிப்பாக்கம் மகாத்மியம்

சென்னையிலிருந்து சுமார் பதினைந்து கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது மடிப்பாக்கம்.

ஒரே ஒரு மளிகைக் கடையுடனும், ஒரே ஒரு காய்கறிக் கடையுடனும் காட்சியளித்த இவ்வூரில் தற்சமயம் ஓரிரண்டு ஆண்டுகளாக அடுத்தடுத்து கடை திறப்பு விழாக்கள் பஜார் போன்ற அமைப்புடன் நிகழ்ந்து வருகின்றன.



மூக்கு உடைக்கப்பட்டு, புழுதி படிந்து, வலது பக்கச் சக்கரங்கள் சரிந்து, சோம்பேறி போல், மணிக்கு ஒரு முறையே ஓடிக்கொண்டிருந்த பஸ் 51-எப்கூட, தற்சமயம் 51-கே, 18-டி, 51-சி ஆகிய பஸ்களுடன் போட்டி போட்டுக் கொண்டு ஓடுகிறதென்றால், கிராம வளர்ச்சியைப் பற்றி நீங்களே யூகித்துக் கொள்ளலாம்.

தற்சமயம் மூவரசம்பட்டு, கண்ணன் நகர், புழுதிவாக்கம், கீழ்க்கட்டளை, வாணுவம்பட்டு, ஆகிய பகுதிகளைத் தன்னுள்ளே கொண்டுள்ள இவ்வூரின் சாலைகளின் சிறப்பு வர்ணிக்கத்தக்கது. 'புழுதிவாக்கம்' அருகில் இருப்பதால்தானோ என்னவோ இச்சாலைகளில் ஊர்தி சென்றால் புயல் போல் புழுதி கிளம்பி அடங்குகிறது. சரிவரத் தார் பூசப்படாத இச்சாலைகள் பார்ப்பதற்குப் பல்லாங்குழி போல் காணப்படுகின்றன! சாலைகளின் (மெயின் ரோட்டின்) குறுக்களவோ ஆறடிதான்!

இருபுறமிருந்தும் ஊர்திகள் எதிரெதிராக வந்து விட்டால் தவிப்புத்தான். நகர்ப்புறங்களில் தகுதியற்றவை என ஒதுக்கப்பட்ட பஸ்கள்தான் இச்சாலைகளில் ஓடுபவை.

இவ்வூருக்கு இட்டுச் செல்லும் மெயின் சாலையில் மாரிக் காலங்களில் வருடத்தில் இரண்டு மாதங்கள் பஸ்கள் செல்லா! வாணுவம்பட்டு அருகில் இருக்கும் 'கல்வர்ட்' ஏரிப்பெருக்கீடால் உடைந்து, சாலையில் அரிப்பு ஏற்பட்டுவிடும். அச்சமயம் இங்குள்ளவர்களின் முக்கிய தொழில் 'மீன் பிடித்தல்!' அடுத்தது விவசாயம். கத்தரி, கொத்தவரை முள்ளங்கி, கீரை பெயர் பெற்றவை.

பஸ் ஓடாத நாட்களில் ஜட்கா வண்டிக்காரர்களின் பாடுகொண்டாட்டம்தான். அலுவலகம் செல்வோரின் பாடோ திண்டாட்டம்! டாக்ஸி? மூச்! சொந்தக் கார் போல் எளிதாகப் பயன்படுவது சைக்கிள்தான். சிறு குழந்தைகள் முதல், பெரியோர் வரை, ஆண், பெண் அனைவரும் சைக்கிள் விடத் தயங்குவதில்லை.

இங்கு அரசாங்க அங்கீகாரம் பெறாத இரண்டு மூன்று ப்ரைமரிப் பள்ளிகளே உள்ளன. ஐந்தாம் வகுப்புக்கு மேல் படிக்க ஹைஸ்கூலோ, காலேஜோ, அருகில் கிடையாது. நகரைத் தேடித்தான் செல்ல வேண்டும்!

இவ்வூருக்கு நுழைவாசல் பரங்கிமலை ரயில்வே கேட். ரயில்வே கேட்டைக் கடக்கும் நிலை, வைகுண்டஏகாதசியன்று சொர்க்கவாசல் கடக்கும் நிலைதான். பொறுத்தார் கேட் கடப்பார்: பொறுதார் கேட் தாண்டுவார்!

நகர்ப்புறத்தில், வரும் வருவாயில், நானூறு ஐநூறு என வாடகை கொடுத்துக் கட்டுப்படியாகுமா? கடனை, உடனை பட்டு மடிப்பாக்கத்தில் காலி மனை வாங்கி, கட்டிடங் கட்ட வேண்டும் என்ற கருத்துடையோரை எச்சரிக்கிறேன்! இன்று இப்பகுதியில் மனையின் விலை பதினையாயிரம் தான்! ஆனால், அலுவலக, பாங்க், இன்ஷூரன்ஸ் லோன்களுக்கு விண்ணப்பம் செய்து அவை சாங்ஷன் ஆகி, சிமெண்ட் கிடைத்து மணல், செங்கல், சுண்ணாம்பு ஆகியவை சேகரிப்பதற்குள் வேலையாட்கள் கூலி இரு மடங்காக உயர, வாங்கிய கடன் பற்றாமல், கட்டிடம் அரை குறையாக நிற்க, தினந்தோறும் அலுவலகம் செல்லத் தேவைப்படும் பஸ், ரயில் சார்ஜ் இவற்றைக் கணக்கிட்டுப் பார்த்தால் வாடகை கொடுத்துக் கொண்டு நகர்ப்புறவாசமே சிக்கனமும் ஆதாயமும் என்று தெரிய வரும்.

மடிப்பாக்கம் பை நைட்! இருளோவெனத் திகழும்! சாலை விளக்குகள் கிடையா!

குடிநீர் வசதி? மூச்! பாறையைக் குடைந்து கிணறு தோண்டுவதால் கோடையில் பெரும்பாலும் வரண்டே யிருக்கும்!

வடிகால் கிடையாது. தெருச் சுத்தமும் செய்யப் படுவதில்லை. குப்பைகள் காற்றில் அடுத்தடுத்த வீடுகளில் இங்குமங்குமாகப் பறந்து கொண்டே இருக்கின்றன!

ஆனால் திறந்தவெளிகள் மிகுதியாக உள்ளதால் நோய்கள் அதிகமாகப் பாதிப்பதில்லை. ஆஸ்பத்திரியோ, பிரசவ விடுதிகளோ கெடுபிடி கேஸ்களுக்கு அருகில் கிடையா! தொலை தூரம் எடுத்துச் செல்ல டாக்ஸி வசதிகள் கிடையா.


இங்குள்ள பஞ்சாயத்துத் தலைவரைப் பெரும் பாலோர் பார்த்தது கூடக் கிடையாது.

மக்கள் பெரு முயற்சி செய்து மூன்று லட்சம் ரூபாய் செலவில் ஐயப்பன் ஆலயம் அமைத்துள்ளனர். இத்திருத்தலம் சபரிமலைக்கு அடுத்தபடியாக உத்தர சபரிமலை எனப் பிரசித்தி பெற்றுள்ளது. பக்த கோடிகளின் வருகை, வாகன வசதியின்மை, உணவு விடுதியின்மை, இரவு தங்குமிடமின்மை காரணமாகக் குறைந்தே காணப்படுகிறது. காலம் இதற்குத் தீர்வு காணும்.

— ஸீதா ராகவன்

இதோ ஒரு கிராமம்:


உங்கள் கேசம் அடர்த்தியின்றி
சக்தியின்றி இருக்கிறதா? உங்கள்
கேசத்தைப் பக்குவப்படுத்தி அழகையும்
ஆரோக்கியத்தையும் அளிக்கிறது...
EGG
Halo
SHAMPOO
செழுமையான புரதப்போஷாக்கு நிறைந்த
ஹேலோ எக் ஷாம்பூ
ஊட்டம் குறைந்த நிலையில் உங்கள் கேசம் அடர்த்தி
யின்றியும், சக்தியின்றியும், ஆரோக்கியமின்றியும்
காணப்படுகிறது.
பட்டுப்போன்ற, பொன் நிறமுள்ள வழவழப்பான
ஹேலோ எக் ஷாம்பூ செழுமையான புரத ஊட்டம்
நிறைந்த உத்தியின் மூலம் உங்கள் கேசத்தை சீராகப்
படியவைத்து அதற்குத் தேவையான எல்லா
ஊட்டங்களையும் அளிக்கிறது. உங்கள் கேசம் அழகாக
ஆரோக்கியமாக, அடர்த்தியாகத் திகழ்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூவின் செழுமையான நுரை வளம்
உங்கள் கேசத்தில் புகுந்து அதை பொலிவுடனும்
தூய்மையான பளபளப்புடனும் திகழச் செய்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூ...
அழகிய அடர்த்தியான ஆரோக்கியமான கேசத்திற்கு
HES. G. 6. TM



சோதனை மேல் சோதனை...

[இது ஒரு வேலையில்லாப் பட்டதாரி எழுதும் கட்டுரை. யாரேனும் வேலை கொடுத்து உதவ விரும்பினால் நேரடியாக அவருக்கே எழுதலாம். -ஆர்.]

பி. எஸ்ஸி. கெமிஸ்ட்ரி மூன்றாவது வருட முடிவில் பப்ளிக் எக்ஸாம். இரண்டு நாட்களுக்கு 'பிராக்டிகல்'. முதல் நாள் செய்ய வேண்டிய சோதனைகளைச் செய்து முடித்து விட்டேன். மீதம் நேரம் இருந்தது. எனவே அடுத்த நாள் செய்யவேண்டியசோதனைக்காக எனக்குக் கொடுக்கப்பட்ட கலவை உப்பை எடுத்துச் சோதனை செய்ய ஆரம்பித்தேன். உப்பின் நிறம் பழுப்பு. பார்த்த உடனேயே 'பெரிக் உப்பு' என்று நினைத்துக்கொண்டு முறையாகச் சோதனைகளைச் செய்து உறுதிப் படுத்திக் கொண்டேன்.

மேலும் அமில உறுப்பு இரண்டையும் அன்றே கண்டு பிடித்து விட்டேன். இன்னும் கண்டு பிடிக்காமல் இருப்பது ஒரே ஒரு கார உறுப்புத்தான். நேரம் இல்லாததாலும், கொடுக்கப்பட்ட உப்பு தீர்ந்து போய்விட்டதாலும் அடுத்த நாள் செய்யலாம் என்று சென்றுவிட்டேன். அடுத்த நாள் மற்ற சோதனைகளை முடித்துவிட்டு மற்றொரு கார உறுப்பைக் கண்டுபிடிக்க வேண்டிச் சிறிது 'உப்பு' வாங்குவதற்காக 'எக்ஸாமினரிடம்' சென்று கேட்டேன்.

அவர் எனது பெயர், நம்பர் இவற்றைப் பார்த்து, பச்சைக் கலரில் ஒரு 'உப்பை'க் கொண்டு வந்து கொடுத்தார். கலரைப் பார்த்தவுடனேயே எனக்கு ஷாக். ஏனெனில் பச்சைக் கலரில் இருப்பது பெரஸ் உப்பு. நான் கண்டு பிடித்திருப்பதோ பெரிக். என்னசெய்வதென்றுதெரியாமல் தவித்தேன். அழுகையாக வந்தது. திரும்பவும் எக்ஸாமினரிடம் சென்று, ''சார், நேற்றுக் கொடுத்த உப்பு இது இல்லை. வேறு கலரில் இருந்தது. எனவே எனக்கு அதே உப்பைக் கொடுங்கள்'' என்றேன்.

அவர் 'இதுதான்; போய்ச் செய்யுங்கள்' என்றார். அப்புறம் என்ன நினைத்தாரோ, ''என்ன கண்டுபிடித்துள்ளீர்கள்?'' என்று கேட்க, நான் சல்பேட், குளோரைடு, பெரிக் என்று கூறினேன். உடனே அவர் ''நீங்கள் கண்டுபிடித்துள்ள வரையில் சரிதான். போய் மற்றொரு கார உறுப்பையும் கண்டு பிடித்து வாருங்கள்'' என்றார்.

மனசில்பயத்துடன்மேலே மறுத்துப் பேசத் தோன்றாமல், நிச்சயமாக நாம் இந்த உப்பு சோதனையில் பூஜ்யம் மார்க்தான் என்று எண்ணி அழுது கொண்டே சோதனைகளைச் செய்து ''அம்மோனியம்'' என்று கண்டு பிடித்து அவரிடம் சொன்னேன்.


என் அழுத முகத்தைப் பார்த்துவிட்டு அவர் ''எல்லா உறுப்புக்களும் சரி'' என்று கூறினார். எனக்கோ இன்னமும் நம்பிக்கை ஏற்படவில்லை. ''எப்படி சார் நேற்று பழுப்பு நிறமாகக் கொடுத்த உப்பும் இன்று பச்சை நிறமாகக் கொடுத்த உப்பும் ஒன்றாக முடியுமா சார்?'' என்று கேட்டேன்.

அதற்கு அவர் ''நாங்கள் முதல் நாளே உங்களுக்கான உப்பை (பெரஸ் சல்பேட், அம்மோனியம் குளோரைடு கலவை) பாட்டிலில் அடைத்து விட்டோம். முதல் நாள் நீங்கள் செய்வதற்குள் காற்றுப் புகுந்து பெரஸ் பெரிக் ஆக ஆக்ஸிடைஸ் ஆகிப் பழுப்பாக மாறிவிட்டது. எனவே அது 'பெரிக்' சோதனைகளுக்குப் பதில் அளித்தது. இரண்டாவது முறை உப்புக் கேட்டபோது, காற்றுப் புகாத உப்பை உள்ளே இருந்து எடுத்துத் தந்ததால் பச்சை நிறமாகவே இருந்தது. எனவே அது 'பெரஸ்' உப்புக்கான சோதனைகளுக்குப் பதில் அளித்தது. அது உங்கள் பிழை அல்ல. நீங்கள் முதலில் கண்டு பிடித்த உறுப்புகளுக்கான சோதனைகளையே எழுதுங்கள் என்று கூற, நான் இந்த 'ஆக்ஸிஜன் ஏற்ற' விஷயம் நம் மர மண்டையில் எப்படி உறைக்காமல் போனது என்று நொந்து கொண்டு பெரிக், அம்மோனியம், சல்பேட், குளோரைடு ஆகியவற்றுக்கான சோதனைகளை எழுதிக் கொடுத்துவிட்டு, வெளியே வந்தேன்.

200க்கு 197 மார்க்குகள் அடைந்து வெற்றி பெற்றபோது மறுபடி கண்ணீர் விட்டேன். — மகிழ்ச்சி காரணமாக.

—எஸ். கஸ்தூரி

பெயர்: எஸ். கஸ்தூரி
வயது - 25
தகுதி: பி.எஸ் ஸி. கெமிஸ்ட்ரி.
முதல் வகுப்பு 72%
விலாசம்: கஸ்தூரி D/o பி. சிவபுண்ணியம்
1-45, தண்டபாணி செட்டித் தெரு,
சித்தர்காடு. மாயூரம்-609003.



டயலாக்

அகஸ்தியன்

"**மே**ஸ்திரி... மணல் லாரி வந்திருக்குது. எங்கே இறக்கச் சொல்றே?"

"ஏண்டா, ஒதியமத்தி ஏடாகூடமாக இருக்கே... மணலா கொண்டாரச் சொன்னேன். நேத்துப் பத்து தபா முட்டிண்டேன். பேபி ஜல்லி தானே சொன்னேன்... இன்னிக்கு ரூஃப்-டாப் போட அல்லாம் தயாரு... சரி... மணலே இறக்கிட்டு. இரண்டு மணி நேரத்திலே நல்ல சைஸா பேபியை ஏத்தியா."

"யாரும்மே...காலேலேயே இன்னுபேச்சு... மசாலாவுக்குத் தண்ணி வேணுமில்லே... டிரம்மை ரொப்பு."

"இன்னு ஆளுய்யா நீ ... இப்பத்தானே செங்கல் ஏத்தச் சொன்னே? வாடிம்மா அருகாணி... தண்ணி வேணுமாம்... இந்த ஆளுக்குப் பகல்லேயும் தண்ணி சாயரட்சயிலேயும் தண்ணி...."

"இன்னு பச்சையம்மா... வாய் ரொம்ப நீளுது."

"பாருய்யா அந்தப் பொண்ணு பச்சைய நம்ப கேசவன் ஏதாவது சீண்டிக்கொண்டே இருக்கான்."

"இதெல்லாம் ஸும்மா தமாஸ். இவன் தான் அதைக் கட்டிக்கப் போறான். தை பொறக்கட்டும்னு இருக்கான்."


"ஏழு அங்குலம் துண்டு போடப்பா... லிண்டலுக்குக் கட்டணும் கம்பி."

"முதலாளி... சிமெண்ட்தான் பத்தாது போல இருக்கு... எப்படியும் ஐம்பது மூட்டைக்கு ஏற்பாடு பண்ணுங்க."

"இதென்ன மேஸ்திரி... ஐநூறு மூட்டை போதும்னு சொன்னே... இப்போ கொசுறு கொசுருக் கேட்டுக்கிட்டே இருந்தா எப்படி?"

"நான் என்ன செய்வேங்க. சிமெண்டு. சிமெண்டாவா இருக்குது. நெறைய சாம்பலு. ஒண்ணுக்கு நாலு போட்டால்தான் மசாலா சரியா இருக்கு... பார்த்துக்கினு தானே இருக்கீங்க... சிமெண்டை நானு துண்ணுடறேன்."

"நீ சிமெண்டைத் தின்னலேப்பா.... சிமெண்ட் என் பணத்தைத் துன்னுது."



பில்டிங்

''கண்ட்ராக்டர் சார்... மெஷர்மென்ட் சரியாக இல்லையே...க் ரில்லுக்கும் சுவருக்கும் நடுவிலே இடைவெளி இருக்கே...''

''சிமெண்ட் பூச்சிலே சரியாயிடும்... இந்த க்ரில்காரங்களுக்கே போதாது. வால் டாக்ஸ் ரோடிலே கோபால்னு ஒருத்தன் செய்வான். 'மில்லி மீட்டர் கூட வித்யாசப் படாது.''

''அவன் கிட்டயே ஆர்டர் கொடுத் திருக்கலாமே.''

''அவன் செத்துப்போயி ஆறு வருஷம் ஆவுது மேஸ்திரி... யாரு அது புது கொல்லத் துக்காரப் பையன்... மெத்தை பத்திரிப்பு சுவரை நீட்டாகக் கட்டியிருக்கான். செல் வார் உடனும்னுகூடத்தெரியாத ஆசாமியை எங்கேர்ந்துப்பா இம்போர்ட் பண்ணி யிருக்கே.''

''ஏண்டா வீராசாமி... என்ன வேலைடா செஞ்சிருக்கே... இடிச்சி செல்வார் வைடா... உங்களை யெல்லாம் என்ன செய்யணும்னு. சென்ட்ரிங் செய்றதுக்கு கம்பா நிக்கவைக்க ணும்... யாருமே எந்நேரம் குழந்தைக்குப் பாலு கொடுத்துக்கிட்டிருப்பே... மளமளனு செங்கல் எடுத்தா.''

''அண்ணாத்தே... நானு கல்லு எழுப்பிட் டேன். பூசிவிட்டுடட்டுமா?''

''லேசா சாந்தைப் போட்டு பூசி 'வருவி' விடுப்பா. ஜல்லி வரல்லையே!''

''ஹலோ, ஐயராமன்... மளமளவென்று ஏறிக்கிட்டு இருக்குதே உங்க கட்டிடம்... வெரி குட்.''

''என்ன வெரி குட்.. வயத்தெரிச்சல்... பணம் கரைஞ்சுக்கிட்டு இருக்கிற வேகத் திலே கட்டடம் வளரலே. எஸ்டிமேட் போட்டப்போ அறுபது இப்போ எழுபது ஆயிட்டுது. ஏகப்பட்ட வேலை பாக்கி இருக்கு. மரம் வாங்கியாகலே. வொயரிங் சாமான் வாங்கணும்.''

''என்ன மேஸ்திரி 'ஸம்ப்' வேலையைப் பாதியிலேயே நிறுத்திட்டீங்க...''

''அரை அவுர் வேலை. முடிச்சுட்டாப் போறது.இந்தாடா கஜபதி.முதல்லே ஸம்பை முடிச்சுடு. ஐயா தபா தபா சொல்லும்படியா வெச்சுக்கறியே!''

12

வடிகால் வழங்கும் பெருந்தன்மைகள்

சுலோசனா தானே ஓர் உலைக்களமாகித் தன்னையே அதில் அமிழ்த்திக் கதக்கதக்கெனக் கொப்பளித்துக் கொதித்துக்கொண்டு நிமிஷம் ஒன்றை யுகமொன்றாகக் கழித்துக்கொண்டிருக்க இவள் நொடிக்கு நொடி எத்தனையோ கோணங்களில் எதிர்பார்த்த வரதராஜுலுவோ அன்று மதியம், மாலை, இரவு மட்டுமல்ல, மறுநாள் காலை, மதியமும் கூட வீட்டுக்கு வரவில்லை. தகவலும் இல்லை. இவளுக்கு சர்வ நிச்சயமாகத் 'தெரிந்து'விட்டது. ஏதோ சூழ்ச்சி போய்க் கொண்டிருக்கிறதென்று. இவள் இரவில், கூலிக்கு அமர்த்தப்பட்ட கொலைகாரர்களின் கட்டாரியைக் கூட எதிர் பார்த்தாள். இல்லாவிட்டால் இவன் வெளியூர்போக நேர்கிற எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தகவலுக்காகத் தவறாது கிணு கிணுக்கின்ற டெலிபோன் மணி எங்கே? காவலுக்காகக் கீழ் முற்றத்தில் படுத்துக் கொள்ள வருகின்ற யாராவதொரு கான்ஸ்டபுள் எங்கே?

அட, இந்தப் பொன்னுத்தாய், 'ஐயா' வரவில்லை என்று தெரிந்தும், காவலுக்கு யாரும் வராதது தெரிந்தும், என்ன ஏதென்று விசாரிக்கவில்லையே. இரவு துணைக்கு நானாவது படுத்துக்கொள்ள வரட்டுமா என்று கேட்கவில்லையே. எப்படியோ தொலை என்பது போலல்லவா வேலை முடிந்ததும் 'நான் வரேம்மா' என்று சொல்லிவிட்டுப் போய் விட்டாள். அதனால்தானே, அதற்கு முன், முடிவாக யாரும் வராவிட்டால் அவளை இரவு இங்கேயே தங்கச் சொல்லலாம் என்று நினைத்துக் கொண்டிருந்த இவள், வீம்பு மேலிட, 'சரி போ' என்று சொன்னாள்.

ஒருவேளை இவளுக்கும் விஷயம் தெரிந்திருக்குமோ? அல்லது இவளும் அந்த மூவரோடு சேர்ந்தவள்தானோ? இருக்கலாம். யார் கண்டது? அந்தப் பொய் வாய் நாகப் பன் கொண்டு வந்து வைத்த ஆள்தானே இவள்.



'பொய் வாய்! ஒரு ஸ்திரீ லோலனுகிய தன் மேலதிகாரிக்கு மாமா சேவகம் செய்யும் அதே நேரத்தில் அவனே ஒரு தருமன் என்று கூசாது பேசியும், தாங்கள் பாதித்துக்கொண்டிருக்கும் ஒரு பெண்ணையே மகாலெக்ஷ்மி யென்று வஞ்சப் புகழ்ச்சி செய்தும் பிழைக்கும் வாய். பிடிபட்டுக் காலில் விழுகிற போது மன்னிப்புக் கேட்பதும், மன்னிப்புக் கிடைத்த பிறகு எப்படி நமது சாமர்த்தியம் என்று பேசுகிறதுமான வரிசையில் வருகிற வாய். இந்த அசிங்கங்களை யெல்லாம் கிழித்து எறிவதற்குத் தனக்கெல்லாம் ஏன் சக்தியில்லை?


இப்படி யொரு வெட்டு சிந்தனைக்குப் பிறகு அவள் மீண்டும் பொன்னுத் தாயையே நினைத்தாள். அவள் காலையில் வரட்டும். படியில் கால் வைக்காதே என்று சொல்கிறேன்.

ஆனல் பாவம், பொன்னுத்தாய் அன்று இவளிருந்த நிலையைக் கண்டு உள்ளே அரண்டு போனது இவளுக்கு எப்படித் தெரியும்? அவளுக்கும், இங்கே இதுவரை நடந்த அசம்பாவிதங்களுக்குச் சற்றும் குறையாத விதத்தில் இன்னும் ஏதோ நடந்திருக்க வேண்டும் என்பது தெரிந்தாலும், ஐயா வராத நிலையில் தான் இங்கே இவளோடு இரவு தங்க வேண்டிய கடமை இருக்கிறது என்பது தெரிந்தாலும், தைரியம் இல்லை. பைத்தியங்களை எப்படி நம்புவது? எந்த நேரத்தில் எப்படித் திரும்புவார்கள் என்பது எப்படித் தெரியும்? இவள் பாட்டுக்கு நடு ராத்திரியில் ஒன்று கிடக்க ஒன்று செய்து விட்டாளானல்? அல்லது செய்துகொண்டாளானல்? அம்மாடி!

இரவு எவ்வளவு பயங்கரமானது! எப்படி ஆட்டிப் படைத்தது? கீழே வாசற் கதவைப் பூட்டி, கூடத்தில் தாழிட்டு, மெத்தைக் கதவைத் தாழிட்டு, தனது அறையைத் தாழிட்டு, வரதராஜுலு சொந்த உபயோகத்துக்காக வைத்திருந்த ரிவால்வரில் குண்டுகளை நிரப்பித் தலையணைக்கடியில் வைத்துக் கொண்டு படுத்தும் பயம் எப்படி நடுக்கியது! ஒரு நேரத்தில் சமையலறையிலோ பக்கத்து அறையிலோ எழுந்த ஏதோ ஒரு சின்னச் சத்தம் எப்படி இவள் உடலைக் குலுக்கியது? போர்வைக்குள் என்னமாய்ச் சுருண்டு கொண்டாள்? வந்தாக வேண்டிய நேரத்தில் தைரியம் தன்னை அப்படிக் கை விட்டது எப்படி? ஒருவேளை யாராவது கதவை உடைக்க முற்பட்டு அதில் வெற்றியும் பெற்று உள்ளே நுழைய இருந்திருந்தால் தான் அப்போது வாரி எழுந்து துப்பாக்கியை நீட்டியிருப்பாளோ?

ஒருவேளை 'இந்த ஆள்' வராததற்கு இது காரணமாக இருக்குமோ? நடந்ததை மூடி மறைத்து, பூசி மெழுகி, தன்னை ஏமாற்றி விடுவதற்கு ஏதாவது காரணம் தேட இவ்வளவு நேரம் தேவைப்படுகிறதோ?

இந்த அனுமானம் சரிதான். வரதராஜுலு சுமார் முப்பது மணி நேரம் வீட்



ஜெயகாந்தன்

டுக்கு வரத் தாமதித்ததற்கு இதுதான் காரணம். கையும்மெய்யுமாகப் பிடிபட்ட பிறகு சேதாரத்தைக் கணிசமான அளவுக்குக் குறைத்துக் கொள்வதற்கு வகையாக என்ன செய்யலாம் என்று சிந்தித்து ஒரு முடிவுக்கு வருவதற்குத்தான் அவனுக்கு அத்தனை மணி நேரம் தேவைப்பட்டிருந்தது.

அவன் மறுநாள் மாலை புறப்பட்டு வந்த போதுகூட முழுமையான ஒரு முடிவோடு வந்தானென்று சொல்ல முடியாது. ஒரு முக்கால் திட்டம்தான் சாத்தியமாக இருந்தது. மீதியை அங்கு போய், அங்குள்ள நிலைமைக்கு ஏற்ப அமைத்துக் கொள்ளலாம் என்றுதான் வந்தான். அதுதான் ஜாக்கிரதையும் பத்திரமானதுமான திட்டம் என்பது அவனது கணக்கு.

அவனது என்ஃபீல்ட் வாசலில் நின்றபோது மணி நான்கு இருபது. அப்போது கலோசனு மாடி ஹாலில் ஜன்னலோரம் இழுத்துப் போட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். மேலே வந்த வரதராஜுலு இவளைக் குறிப்பாகப் பார்க்காமல் ஆனால் ஒரு பொதுப் பார்வையில் இவள் அங்கிருப்பதைத் தெரிந்து கொண்டு ஒன்றும் பேசாமல் சென்று உடை மாற்ற ஆரம்பித்தான். இவளும் ஒன்றும் பேசவில்லை.

இருவருக்கும் ஒரே தீர்மானம். எதிராளி பேசியதும்தான் தான் பேசுவதென்று. இவளுக்கு ரௌத்திரம். அவனுக்குப் பத்திர உணர்வு. இங்கே அவனுக்கு டிபன்ஸ்தான் நல்ல போர் உபாயமாக இருக்கும்.

ஆகையால் இந்த மௌனம் வெகு நேரம் நீடித்தது. அவன் குளித்துவிட்டு வந்து, சலவைக் கைலி, பனியன் அணிந்து, நேற்றையதும், இன்றையதுமான ஹிந்து பேப்பர்களைப் 'படித்து' முடிக்கும்வரை கூட.

இடையில் கலோசனுவுக்கு அந்தப் பரமசிவத்தின் நினைவு வந்தது. என்ன, இந்த மனிதனும் அந்தக் கழிசடையின் வழியைப் பின்பற்ற நினைக்கிறானா? ஒருவேளை, இவனும் சட்டென்று எதிர்பாராமல் தனது காலில் விழுந்து விடுவானோ? அப்படி விழுந்தால் தான் என்ன செய்வது? இல்லை, அப்படி விழுந்தாலும் தான் மசியப் போவதில்லை. தான் அந்தப் பரமசிவத்தின் முட்டாள் மனைவி அல்ல. எனக்கு ஏற்கனவே பரமசிவத்தின் கதை தெரியும். நான் மன்னிக்க இந்த ஆள் போய், அந்தப் பரமசிவத்திடம் 'குருஜி, உனது வழியிலேயே எனது காரியம் சித்தியானது' என்று சொல்லிச் சிரிக்கவிட மாட்டேன்.

இவ்வளவு கணிசமான நேரமாகியும் கலோசனுவில் இடங்கொடாத மௌனம் வரதராஜுலுவை வேறு வழிகளைச் சிந்திக்க வைக்க, அவன் மீண்டும் ஆனால் சாதாரண பேண்ட் சட்டையைப் போட்டுக் கொண்டு புறப்பட்டான்.

அவன் கதவைத் தாண்ட இருந்த நிலையில் கலோசனு மொட்டையாகக் கேட்டாள்:

''திரும்பி வர எத்தினி நாளாகும்.''

இவனும் அதே ரீதியில் ''பத்து நாளு'' என்றான்.

''சாவிய யாருகிட்டக் கொடுத்துட்டுப் போக?''

''ஏன், எங்கே போறே?''

''அது உங்களுக்குச் சம்பந்தமில்லாத விஷயம்.''

''என்ன சம்பந்தமில்ல?''

''நம்ம ரெண்டு பேத்துக்கும் இருந்த பொய்யான சம்பந்தம்கூட நேத்துப் பதினொரு மணியோடப் போயிடுச்க.''

இவள் எப்படியோ விஷயத்துக்கு வந்து விட்டாள். அதுவரையில் சரி. ஆனாலும் தான் வந்துவிட்ட முடிவை வைத்தல்லவா ஆரம்பத்தைத் துவக்குகிறான். தான் இதைத் தகுந்தபடி எப்படி எதிர்கொள்வது?

''கலோசனு, கல்யாணபந்தங்கறது, ஏதோ டென்னிஸ் விளையாட்டுல ஆணும் பெண்ணும் பார்ட்னரா இருந்து விளையாடுற காரியமில்ல; ஏதோ ஒரு கேம்ல ஒருபார்ட்னர் தப்புச் செய்தா அடுத்த கேமுக்கு வேற ஒரு பார்ட்னரைச் சேர்த்துக்கறதுக்கு.''

கலோசனு திரும்பி முதன் முறையாக அவன் முகத்தைப் பார்த்தாள். ஓ, இந்த டென்னிஸ் உதாரணம் ரொம்பப் பிரபலமானதுதானா? அதை யொட்டிய வாதப் பிரதிவாதங்கள் சாதாரணமாகவே போய்க் கொண்டிருக்கின்றனவா? அல்லது இவன், எனக்கும் ரகுவுக்கும் இருந்த உறவு தெரிந்து, அதுவும் ரகு என்னிடம் இந்த டென்னிஸ் உதாரணம் சொன்னதே தெரிந்து, இப்போது நீ மட்டும் ஒழுங்காக்கும் என்று குத்துவதற்காகச் சொல்கிறானோ? ஆல் ரைட். அது எப்படி இருந்தாலும் சரி. இப்போது நான் அதைப் பற்றிக் கவலைப்படப் போவதில்லை. ஐ டோண்ட் கேர். ஐ டோண்ட் கேர்.

''இந்த அபத்தமான உதாரணம் மூலம் உங்களுக்குக் கழுவாய் கெடச்சுடுதாக்கும்!''

வீட்டில் அனைவரின் கேசப் பராமரிப்புதானே? அதற்கு நம்பகமானது, விசேட ஃபேமிலி ஷாம்பூ பாமோலிவ்.



பாமோலிவ். எல்லா வகைக் கேசத்திற்கும் ஏற்ப விசேட முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. அது. வளமையான நவீன ஷாம்பூ. உங்கள் கேசத்தை நன்கு தூய்மை துலங்க வைக்கிறது. குழந்தைகளின் மென்மையான கேசத்திற்கோ மிகவும் ஏற்றது.

அது மட்டுமா? இவ்வகை ஷாம்பூக்களிலே சிக்கனமானது. பாமோலிவ் ஷாம்பூ—குடும்ப பட்ஜெட்டிற்கும் ஏற்றது.

பாமோலிவ் ஷாம்பூ:
ரெகுலர், அல்லது
கூடுதலான
போஷாக்கிற்கு எக்



குடும்பத்தினர் கேசப் பராமரிப்புக்கு நேசமானது - உங்கள் பட்ஜெட்டிற்கும் ஏற்றது

GK6E.PS.7 TM

''பின்னே என்ன கழுவாய்னு நீதான் சொல்லேன்.''

''அவதான் சொன்னுளே, அவ நெனச்சா ஒரு வாரத்துல என்னை டைவர்ஸ் பண்ண வச்சுட்டு, தான் மேரேஜ் பண்ணிக்க முடியும்னு, அதைச் செய்யுங்க.''

''அவ ஒரு பைத்தியக்காரி சொன்னுன்னு....''

''ஓ, நீங்க அங்க இருந்தா நான் பைத்தியக்காரி, இங்க இருந்தா அவ பைத்தியக்காரியாக்கும்?''

வரதராஜுலு புருவம் உயர்த்தி அவளைப் பார்த்தான். பின் மெல்லத் திரும்பி வந்து சோபாவில் உட்கார்ந்து கொண்டான். இவள் எல்லைகளைத் தாண்டத் துணிந்து விட்டாள். இனி இவளிடம் பேசுவது என்பதே — என்ன பேசினலும் சரிதான் — நிலைமையை மோசமாக்கத்தான் உதவும். மௌனம் கலக நாஸ்தி. பேசாமல் இருந்து பார்ப்போமென்று பேசாமல் இருந்தான்.

ஒரு பெரிய இரண்டு நிமிஷம் போனது.

''போகலியா?'' — கலோசனு கேட்டான்.

''இல்ல.''

''அப்ப நான் போறேன்'' — அவன் எழுந்தான்.

''எங்க கலோசனு?''

''அதான் மொதல்லயே சொன்னேனே?''

சரி, 'சரண் ஆகும்' திட்டத்தையும்தான் செய்து பார்ப்போமே என்று வரதராஜுலு இப்போது ரொம்பத் தணிந்து போய்ப் பேசினுன். ''சாரி கலோ, தவறுதான், நான் திருத்திக்கிறேன்.''

கலோசனு சட்டென்று திரும்பி மீண்டும் அவன் முகம் பார்த்தாள். யார் முகம் இது? வரதராஜுலுவுடையதா, பரமசிவத்தினுடையதா?

''சத்தியம் செய்து கொடுப்பீங்களா?''

கேள்வி, கேள்வியாக எழுப்பப்பட்டதல்ல என்பது தெரிந்து வரதராஜுலு பேசாமல் இருந்தான்.


''அப்புறம் அந்தப் பரமசிவத்துக்கிட்ட போயி, சத்தியம் பாட்டுக்கு சத்தியம் இருக்கு கலோசனு அவ பாட்டுக்கு இருக்கா, நான் பாட்டுக்கு ரேவதி வீட்டுக்குப் போய்ட்டு வரேனு சொல்வீங்களா? ரெண்டு பேரும் விழுந்து விழுந்து சிரிப்பீங்களா?''

''பின்னே என்னதான் செய்யணும்னு நீனுரும் சொல்லு.''

''என்னைப் போகவிடுங்க. அவ்வளவுதான். அவளை இங்கேயே கொண்டு வந்து வாழ்க்கை நடத்துங்க. இதுல உங்களுக்கு என்ன கஷ்டம்? கசப்பு?''

வரதராஜுலுவிடம் ஒரு துருப்புச் சீட்டு இருந்தது. அதை ஆகக் கடைசி ஆயுதமாகப் பயன்படுத்தலாம் என்பது அவன் நோக்கம். இப்போது அதற்கு வேளை வந்துவிட்டதா?

சரி, நடப்பது நடக்கட்டும் என்று அவன் அதற்கான முன்னுரையை ஆரம்பித்தான். போய்ப் பீரோவைத் திறந்து கொண்டிருந்தவளிடம் இவன் மெதுவாக ''இது



ஒண்ணும் புதுசு இல்ல கலோசனா. பொதுவாப் பரவலா நடக்குறதுதான். பொதுவா ரொம்ப ஆண்களுக்கு இந்தப் பலவீனம் இருக்கு. இதுக்காக நான் இதை நியாயப்படுத்த வரல. நான் கரெக்ட் பண்ணிக்கிறேன்னுதான் சொல்றேன். நான் இதை விட்டுடுறேன். நீ நம்பாம இருக்கவும் காரணம் இருக்கலாம். ஆனா நீ கொஞ்சம் பெருந்தன்மையா நடந்துக்கலாம்'' என்றான்.

கலோசனா படக்கென்று திரும்பி, ''பெருந்தன்மையா நடந்துக்கறதா? நானா?'' என்றாள்.

''நீங்க காதலிச்சது ஒருத்திய... இன்னொருத்தன் மனைவியை. ஆனா கல்யாணம் செய்துக்கிட்டது என்னைய. அதுல உங்களுக்கு ஒரு பொட்டு மனஉறுத்தல் இல்லே. இது உங்களுக்கு ஒரு சாகசமா இருந்தது. நம்ம கல்யாணத்துக்கு அவளையே வேடிக்கை பாக்கக் கூட்டியாந்திங்க. அவளைப் பெரிய மாது சிரோன்மணியா எல்லாத்துக்கும் அறிமுகம் செஞ்சு வச்சிங்க. வழியனுப்ப ஸ்டேஷன் வரையிலயும் போனீங்க. அவளுக்காக ஆளுக்கு ஒரு பொய் சொல்லி ஊர் மாத்தி வந்தீங்க. இங்க அவளோட ஒரு சட்டப்புறம்பான வாழ்க்கையைச் சட்டபூர்வமான வாழ்க்கை மாதிரியே வாழ்றீங்க? ஆனா நீங்க சொல்றீங்க, நான் கொஞ்சம் பெருந்தன்மையா நடந்துக்கணும்னு. உங்க அகராதியிலே பெருந்தன்மைக்கு என்ன அர்த்தம்னு சொல்ல முடியுமா?

''இதே மாதிரி நானும் ஒருத்தனைக் காதலிச்சு அவனையே சாட்சியா வச்சுக்கிட்டு உங்களுக்குக் கழுத்து நீட்டி அப்புறமும் அவனோட தொடர்பு வச்சுக்கிட்டிருந்தா நீங்க காட்டக் கூடிய பெருந்தன்மை எப்படி இருக்கும்னு எனக்குச் சொல்லுங்க.''

இந்தக் கேள்வி தற்செயலாக வரதராஜுலுவுக்கு ஒரு சின்ன வசதியானது. இது அவனது துருப்புச் சீட்டை எடுத்துப் படிக்க அடி எடுத்துக் கொடுத்த மாதிரியாகியது. அவன் கலோசனாவைக் கூர்ந்தும், வினயமாகவும் பார்த்துக் கொண்டே மெதுவான குரலில் கேட்டான். ''நீ யாரையும் காதலிக்கவே இல்லியாக்கும்?''

கலோசனாவுக்குள் ஒரு உலுக்கல். இப்போது அவன் இவன் பார்த்த மாதிரியே அவனைப் பார்த்தாள்.

''ஓ.கே. கமான் சார்.''

''ரகுங்குற ஆர்ட்டிஸ்டோட நீ சுத்திக்கிட்டிருந்தது எனக்குத் தெரியும். கல்யாணப் பரிசா ஒரு படம் வந்து மறுநாள் தகராறு ஆச்சே அந்தப் படத்தை வரைஞ்ச அதே ரகு. ஆனா இது எனக்குத் தெரியும்னு ஒங்கிட்டச் சொல்லக்கூட இல்ல. நான் பெருந்தன்மையா நடந்துக்கிட்டேன்.''

திடீரென்று கலோசனா அட்டகாசமாகச் சிரித்தாள். ஆஹா, எப்பேர்ப்பட்ட பெருந்தன்மை! அதற்கு எப்படிப்பட்ட ரிவார்ட் வேண்டுமாம்? ஒருத்தி கல்யாணத்துக்கு முன் காதலித்ததைக் கண்டு கொள்ளாமல் விடுவதும், ஒருத்தன் தன் கள்ளக் காதலியுடன் ஓர் இணையான 'இல்லறமே' நடத்துவதை ஒப்புக்கொள்வதும் சமமான பெருந்தன்மைதானாம். அது சரி காதலனோடு 'சுற்றிக் கொண்டிருந்ததைப் பெருந்தன்மை செய்து விட்ட இவர் எல்லாம் தெரிந்தால் என்ன செய்வார்?''

அவள் சட்டென்று சிரிப்பு அடங்க, உக்கிரமான பார்வையோடு, ''நான் சுத்திக்கிட்டு இருந்தது மட்டும்தான் தெரியுமா எல்லாமே தெரியுமா?'' என்று கேட்டாள்.

''என்ன எல்லாம்?''

"I shared my bed with him!"

''கழுதத்தனமாப் பேசாதே.''

கலோசனா மீண்டும் சிரித்தாள். பயத்தைப் பாரேன். உண்மையாக இருந்துவிடக் கூடாதே என்ற பதைப்பில் மனசு என்னமாய் எவ்விக் குதித்து சர்ட்டிபிகேட் தருகிறது? நம்பமாட்டேன் என்கிறது. ஏன் நம்ப மறுக்கிறது என்பது எவ்வளவு சுவாரஸ்யமான விஷயம்! நம்பினால் என்னாகும்! ஐயோ, நம்பினால், கெட்டுப் போனவள் கலோசனா இல்லையே. வரதராஜுலுவின் மனைவியாச்சே! நாளைக்கு வைத்து வாழவும் முடியாது. வெளியே அனுப்பவும் முடியாதே! வெளியே அனுப்பினால் இன்னார் மனைவி என்றல்லவா ஊர் வாய் வெடிக்கும். முக்காடு போட்டுக் கொள்ள வேண்டியிருப்பது அவள் மட்டும்தானா தானும் அல்லவா? சுற்றம் சூழலும், நண்பர்கள் அதிகாரிகள் குழாமும் தன்னை எவ்வளவு பரிதாபமாக, அசிங்கமாகப் பார்க்கும்? இதற்கு, தானே 'இருக்க முடியாதே' என்று அடித்துவிட்டால்? சபாஷ்! மனுஷ மூளை என்ன, சாதாரண மூளையா?

இப்படி கலோசனா இரண்டு தடவை சிரிக்கவே வரதராஜுலுவுக்கு அரட்டியாகி விட்டது. முழுதாகவே பைத்தியம் பிடித்து விட்டதா? அவன் பார்வையில் கொஞ்சம் பயம் ஏறியது.

சிரித்து முடிந்த கலோசனா இப்போது மீண்டும் அதனைப் பழையபடியே பார்த்தாள். இப்போது கண்கள் பேசின:

'அது சரிங்க மிஸ்டர் வரதராஜுலு! நீங்க எல்லாம் தெரிந்தே என்னை மன்னிப்பதாக வைத்துக் கொண்டாலும் கூட உங்களுக்கும் எனக்கும் பெருந்தன்மையில் வித்தியாசம் இருக்க நியாயம் இருக்கிறது தெரியுமா? உங்கள் உலகம் பரந்தது. உங்கள் உணர்வுகளைக் கொட்டிட வடிகால்களைக் கங்கை காவிரியாகக் கொண்டது உங்கள் உலகம். மீண்டும் சொல்கிறேன். நீங்கள் உங்கள் கள்ளக் காதலியை உங்கள் கல்யாணத்துக்கே கூட்டி வர முடியும். அப்புறமும் அவளோடு வாழ்க்கை நடத்த முடியும். உணர்வுகளை வடிக்க வசதியிருந்து வடித்தும் விட்டவன் பெருந்தன்மையாக இருப்பதிலே ஆச்சரியம் என்ன இருக்கிறது. ஆனால் என்னையும் என் உலகத்தையும் பாருங்கள். எனது உலகம் எனது வீடென்னும் கூண்டு. இந்தக் கூண்டுக்குள்ளே, என்னை ஏமாற்றிய காதலன் பெயரைக் கூட உச்சரித்து விடக் கூடாதே என்று நடுங்கிக் கொண்டிருக்க விதிக்கப்பட்ட என்னிடம் பெருந்தன்மை வேறு எதிர்பார்க்கப்பட வேண்டுமா?

(தொடரும்)

திரைஞானி : சினிமா

ஏழைகளுக்கு வக்காலத்து வாங்க நினைத்து எதிலேயோ போய் முடிகிறது கதை. சுருக்கமாகச் சொல்லப் போனால் இரு கிராமங்களுக்கு இடையே எழும் பகை உணர்வு எப்படியெல்லாம் விசுவரூபம் எடுக்கிறது என்பதைக் காட்டியிருக்கிறார்கள்.

பாம்பும் கீரியுமான அவர்கள் சம்பந்திகளானதும் 'சப்'பென்று போய்விடுகிறது. விவசாயிகளின் பிரச்னை அதற்கு முன்பே 'அம்போ'.

பாம்பு: ஜெய்சங்கர்.

கீரி: ரஜினிகாந்த்.

கதையை எப்படிக் கொண்டு போகலாம் என்பதை விட ரஜினிகாந்திடம் எப்படி வேலை வாங்கலாம் என்கிற ஆதங்கம் நிரம்பி வழிவது படத்தில் தெரிகிறது. கண் மூடித் திறப்பதற்குள் 'கும் கும்' சண்டைதான். ரஜினி சாராயத்தைக் குடித்துவிட்டு ''நான் தான்டா இப்போ தேவதாஸ்'' எனப் பாடுவதில் கொஞ்சம் 'கிக்' இருக்கிறது.

ஜெய்சங்கர் வெற்றுப் பேச்சு வில்லனாய் வந்து அவ்வப்போது 'புர்' காட்டுவதோடு சரி.

ஸ்ரீதேவியையும் ஸ்ரீப்ரியாவையும் கதைக்குப் பயன்படுத்திக் கொண்ட அளவு நடிப்புக்குப் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

புற்றில் இருந்து ஈசல் கிளம்புவதைப் பார்க்காதவர்கள் இந்தப் படத்தில் திமுதிமுவென்று நட்சத்திரங்கள் கிளம்புவதைப் பார்க்கலாம். (பட்டியலில் 35 நடிகர் நடிகைகளின் பெயர்கள் உள்ளன). அவர்களுள் 'அரை நிஜார்' தேங்காய் நினைவில் நிற்கிறார்.

இளையராஜாவின் இசையில் உள்ள நயம் ரீரிக்கார்டிங்கில் இல்லையே.

டைரக்டர் சுகநாதனுக்கும் ஸ்டண்ட் மாஸ்டர் தர்மலிங்கத்துக்கும் படத்தில் பலத்த மோதல். வெற்றி மாஸ்டருக்குத் தான்.

ஃபுஸ்ஸ் ராஜா!



காமிராவைச் சுற்றி





பைத்தியங்களுக்கு நடுவே

வெ. ஆ. மூர்த்தி

''தீராத விளையாட்டுப் பிள்ளை'' படத்தில் நடித்துக் கொண்டிருந்த வெண்ணிற ஆடை மூர்த்தியிடம் பேசிக் கொண்டிருந்தேன்.

''சமீபத்தில் நான் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கும் சென்ட்ரல் ஜெயிலுக்கும் போய்விட்டு வந்தேன்'' என்றார்.

நான் அவரை ஒரு மாதிரியாகப் பார்த்தேன்.

''தப்பா நினைக்காதீங்க சார். 'நிழல் தேடும் நெஞ்சங்கள்' படத்துக்காக அங்கு ஷூட்டிங்எடுத்தாங்க. அதுக்குப் போயிருந்தேன்'' என்றவர் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் தம் அனுபவங்களைச் சொன்னார்.

''ஒரு இளைஞர்என்னிடம் சர்வ சாதாரணமாகவும் தெளிவாகவும் பேசினார். படித்தவர். அவரைப் பார்த்தால் பைத்தியம் என்றே சொல்ல முடியாது.

'இவரை ஏன் அடைத்து வைத்திருக்கிறார்கள்? நன்றாகத்தானே பேசிப் பழகுகிறார்' என்று அதிகாரியைக் கேட்டேன்.

''சாயந்திரம் வாங்க பதில் சொல்றேன்''என்றார். மாலைவரை படப் பிடிப்பு இருந்ததால் மாலை மறுபடியும் அந்த அதிகாரியைச் சந்தித்தேன். அவர் என்னை அழைத்துக் கொண்டு வார்டுக்குப் போனார்.

''இப்போ பாருங்க அவரை'' என்றார்.

காலையில் என்னிடம் தெளிவாகப் பேசிய அந்த நபர் தன் பனியனுக்குள் கையைச் சுருட்டிக்கொண்டு தலையைத் தொங்கப் போட்டவாறே உட்கார்ந்திருந்த கோலம்.....

அங்கிருந்து புறப்படும் போது ஞாபகமாக ''போறேன்''னு சொல்லிட்டு வந்தேன்.''

குருவும் சிஷ்யனும்

வாஹினி ஸ்டுடியோஎடிட்டிங் அறையில் குருவும் சிஷ்யனும் தனித் தனியாக மூவியோலாவில் படம் பார்த்து 'எடிட்' செய்து கொண்டிருந்தார்கள். குரு: பாரதிராஜா. சிஷ்யன்: பாக்கியராஜ்.

சற்று ஓய்வாக வெளியே வந்த பாக்யராஜிடம் ''என் கால்ஷீட்டுக்களை எல்லாம் வீணடித்து விட்டார்'' என்று கலக்ஷ்னா பத்திரிகைகளில் அங்கலாய்த்துக் கொண்டிருந்ததைப் பற்றிக் கேட்டேன்.

'' அந்தப் பொண்ணு ஊரிலே இல்லாத சமயம் அவங்க ஆன்ட்டி அப்படிச் சொல்லி இருக்காங்க. கலக்ஷ்னா என்னை நேரில் பார்த்து அதுக்காக வருத்தப்பட்டார்'' என்றார்.

பேசிக் கொண்டிருந்த போது பாரதி ராஜா அங்கு வந்தார்.

'திதா ரா' பரிசளிப்பு விழா ஏற்பாடுகளை வெகுவாகப் பாராட்டினார் அவர்.

''நான் இந்த மாதிரி விழாவைப் பார்த்ததில்லை. ரயிலில் ஏறி உட்கார்ந்ததும் ஒரு பை தருகிறார்கள். அதில் ஊசி, நூல், தலைவலி மாத்திரை, தைலம், படிக்க பேப்பர் எல்லாம் இருக்கின்றன.

ஓட்டல் அறையில் போய் தங்கினால் அந்த அறையில் 26 வகையான குறிப்புகள் அடங்கிய அட்டை ஒன்று வைக்கப்பட்டுள்ளது. அதைப் பார்த்து நமது தேவைகளைச் சொன்னால் உடனே அதை நிறைவேற்ற ஒருவரை நிறுத்தியிருக்கிறார்கள். வெளியே போக வேண்டுமானால் தனியாக ஒரு கார் வெரி கிராண்ட் ஃபங்க்ஷன்'' என்றார்.





சினிமா சினிமா



சோ சொன்ன தேர்தல் ஜோக்.

சோ: பட்டு, என் ஆசை இமைநு வரும் தேர்தல் மாதிரி.
சச்சு: ஐய்யய்யோ! அப்படின்னு உங்களுக்கு 5 வருஷத்துக்கு ஒருதடவை தான் ஆசை வருமா?
சோ: அசடே! இடைத் தேர்தல் எவ்வளவு இருக்கு?
'வடை மாலை' படத்தில்

அவரது 'காதல் ஓவியம்' படத்தில் நடித்த புது முகம் கண்ணனைப் பற்றிப் பேச்சு வந்தது.

''கண்ணனைப் பற்றி எனக்கே அதிகம் தெரியாது. படப் பிடிப்புக்கு வந்தால் நடிக்க வைப்பதோடு சரி! ஏகப்பட்ட பேர் என்னிடம் வந்து கண்ணனை நடிக்க வைப்பதற்குக்கேட்கிறார்கள் கண்ணன் எப்படி நடிக்கிறார்? அவருடைய உருவம் அவர்களது படக் கதாபாத்திரத்துக்குப் பொருந்துமா? இதையெல்லாம் தெரிந்துகொள்ளாமல் வந்து கேட்கிறார்கள். என் படத்தில் அவர் பிரமாதமாக நடித்திருக்கிறார். நிச்சயமாக அவருக்கு நல்ல எதிர்காலம் உண்டு'' என்றார்.

''படத்தில் ஏதாவது புதுமை உண்டா?''

''தஞ்சாவூர்க் கோவிலை இதுவரை யாரும் படம் எடுத்ததில்லை. ராதா நடனமாடும் காட்சியை அங்கு படமாக்கி யிருக்கிறோம்''

பாரதி ராஜா சொல்லி முடித்துவிட்டு எடிட்டிங் அறைக்குப் புறப்பட்டார். அவர் போன பிறகு பாக்கியராஜ் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தபடியே ''பாரதி ராஜா முன்னடி சிகரெட் குடிக்கக் கூடாது என இத்தனை நேரம் சும்மா இருந்தேன்'' என்றார். பாக்கியராஜின் குரு பக்தி எனக்கு வியப்பு அளித்தது.

ராதா.....ராதா.....

● ''ராதா எந்த விழாவுக்கு வந்தாலும் தனது நீண்ட முடியைத் தளர்த்தி முழங்கால்வரை தொங்கப்போட்டபடியே வருகிறார். அவரது கூந்தலைப் பார்த்தால் எனக்கே பொறாமையாக இருக்கிறது'' என்கிறார் ஒரு நான்கெழுத்து நடிகை.

('கண்ணே ராதா' படத்துக்காக பாப் வெட்டிக் கொண்டு விட்டாரோ எனச் சந்தேகப்பட வைக்கிறது இந்தப் படம்.)

● ''நான் நடிகையான பிறகு என் சொந்த ஊருக்கே போகவில்லை. ஏப்ரல் 14ம் தேதி நாங்கள் கட்டிய புது வீட்டுக்குக் கிரகப் பிரவேசம் நடக்கிறது. அப்பொழுது தான் திருவனந்தபுரம் போகவிருக்கிறேன்'' என்கிறார் ராதா.





சினிமா

சினிமா





சாருஹாசன்

● 'புதிய சங்கமம்' படத்தின் மூலம் டைரக்டர் அந்தஸ்துப் பெற்றுள்ள சாருஹாசன் தமது முதல் ஷெட்யூலை மரக்காணம் கிராமத்தில் முடித்துக்கொண்டு திரும்பி யிருந்தார்.

''டைரக்டராக மாறிய அனுபவம் எப்படி?'' என்று கேட்டேன்.

''நடிகனாக இருந்த போது இயலாமையை உணர்ந்தேன். டைரக்டரான பிறகு அறியாமையை உணர்கிறேன்'' என்றார், தன்னடக்கத்தோடு.

''வசனகர்த்தா ஏ.எல். நாராயணனை இதில் நடிக்க வைத்திருக்கிறேன். சைதாப்பேட்டைகுடிகாரன்வேடம். பிரமாதமாக நடித்துள்ளார்'' என்றார் சாரு.

''சினிமா உலகத்தில் வசனகர்த்தாக்கள் நடிகராகும் சீசன் ஆரம்பம் ஆகிறது. முதலில் கலைமணி. இப்போழுது இவர்.'' என்றார் அருகில் இருந்த சுகாசினி.

''அப்பா டைரக்ட் செய்திருக்கிறார். நீங்கள் அதில் நடித்திருக்கிறீர்கள். எப்படி டைரக்ட் செய்கிறார்?'' என்றேன் சுகாசினியைப் பார்த்து.

''எனக்கு அப்பா டைரக்ட் செய்கிறார் என்கிற உணர்வே இல்லே. வீட்டில் எனக்கு அதைச் செய், இதைச் செய் என்று சொல்வது போலவே இருந்தது.

''நான் கிராமத்துக்குப் போய்ப் படப் பிடிப்பில் கலந்து கொள்வது இது தான் முதல் தடவை. நான் மட்டும் ஒரு சின்ன வீட்டில் தங்கினேன். நடிகர் சந்திரசேகர், பிரபு மற்றவர்கள் எல்லாம் ஓலைக் கொட்டகையில் தங்கினர். நான்கு புறமும் மறைவு கூட இல்லாத சிறிய பந்தல் மாதிரி இருக்கும். சந்திரசேகர் மணலில் படுத்துக் கொண்டு, வானத்தைப் பார்த்தவாறே ''ஃபைவ் ஸ்டார் ஓட்டலில் தங்கியிருக்கிறோம். மேலே பாருங்கள். ஐந்து நட்சத்திரங்கள் தெரிகின்றன'' என ஜோக் அடித்தார்!

பிரபு தான் பிரபல நடிகரின் மகன் என்கிற எண்ணமே இல்லாமல் கலகலப்புடன் பேசிப் பழகினார். ஒரு நாள் முன்பே அவருக்கு ஷூட்டிங் முடிந்து விட்டது. என்றாலும் 'நான் உங்கள் அனைவருடன்தான் போவேன்' என்று கூறி-விட்டு மறுநாள் எங்களுடன் வந்தார்.''

சுகாசினி சொல்லி முடித்தார்.

கனமான நடிகர்

● பத்திரிகை நிருபராகப் பணியாற்றிக்கொண்டு படத்திலும் நடிக்கிறார் 'பயில்வான்' ரங்கநாதன்.

பளு தூக்கும் போட்டியில் 1300 பவுண்டுவரை இவர் தூக்கி யிருந்தாலும் 'பயில்வான்' பட்டம் வந்தது அதனால் அல்ல.

எம். ஜி. ஆர். இவரைப் பார்த்து 'பயில்வான்' என ஒரு முறை கூப்பிட அதுவே தமக்குப் பெயராகி விட்டது என்கிறார் இவர்.

இவரது எடை 98 கிலோ.

பாவம் சக்கரவர்த்தி

● 'இனிய வாழ்த்துக்கள்' படத்தில் நடிக்க வந்திருந்தார் சக்கரவர்த்தி.

''நிறைய படங்களில் நடித்திருக்கிறேன். ஆனால் அவை வெளி வருவதற்குத்தான் தாமதமாகின்றன.'' என்று கூறிவிட்டுத் தாம் நடித்த படங்களின் பெயர்களை வரிசையாகச் சொல்ல ஆரம்பித்தார்.

'கடவுளை நம்புங்கள்' படத்தில் ஆரம்பித்து 'தூக்கு மேடை' முடியப் பத்து படங்களின் பெயர்களைச் சொல்லி முடித்தார்.

மாலை சூட்டி மகளுக்கு
மண வாழ்த்தொலிக்க ஓலை தீட்ட வாரீர்
உங்கள் தவம் பலிக்க...





வாழ்நாள் கனவுகள் பலிக்க...
வாச மல்லிகை வீசிட,
வாழைகட்டி உங்கள்
வாசலில் கொட்டுமேளம் வாசிக்க...

ஆசைச் செல்விக்கு இல்லற வாசல்
திறக்க...

வருகுதே நாளும் கோளும், வருகுதே
வரன் - -
கல்விமானும், கைநிறைவாய் நல்லுருவாய்
காண்பவனும், நற்குடி மகனும்,
பெற்ற தாய்தந்தைக்கு
இணையாய்ப் பெண் மீது
பேரன்பு பொழிபவனும்...

எப்படி எங்கு தேடுவீர் அப்படி ஒருவனை ?
ஏடு விரித்து அழைக்கின்றோம்
தேடிக்கொள்வீர் - - தேர்ந்த வரன் :
குலமும் கோத்திரமும்
உயர் குடும்ப நிலையும்,
படிப்பும் பணமும் பண்பும் ஏற்றமுறப்
பொருந்துமாறு - -

எடுத்த எடுப்பில் கிட்டும் - -
பல்லாயிரம் குடும்பங்கள் ஆதரித்த
பாதையிலே, உங்கள் செல்விக்கு -
மனம்போல் மாங்கல்யம் ...

உளம்போல் தேர்ந்தெடுப்பீர்.
விளம்பர மேடை இதோ


THE TIMES OF INDIA
THE MATRIMONIAL COLUMNS
BOMBAY • DELHI • AHMEDABAD

டைம்ஸ் ஆஃப் இந்தியா திருமணப்பத்திகள்
'காலங்கள்' எல்லாம் சுபம் சுபம் சுபம் !

SIMOES/BC/MAT/ S/81


நினைவெல்லாம் நித்யா
12
கதை: அபர்ணா நாயுடு
சித்திரம்: ஜெ...
என்னை மீட் பண்ண வந்தாருன்னே.. வாசலிலேயே நின்னுட்டாரே!
ரமேஷ் கொஞ்சம் ஷை டைப்.
ஸோ வாட்? நான் சரிப் படுத்திடறேன்.
உள்ளே வாங்க. ஃபீல் ஃப்ரீ... இது உங்க இடம் மாதிரி.
ஜீப் நேரே போயிடுச்சு. நான் தான் அவசியமாப் பயந்திருக்கேன். இங்கே நான் சகஜமா நடந்துக்கணும்.. சந்தேகம் வரதுக்கு இடம் தரக் கூடாது...
முகத்தைப் பார்த்தாலே ஏதோ டென்ஷன்லே இருக்கிற மாதிரித் தெரியுது. அதைச் சரிப் படுத் திட்டுத் தான் மத்தது எல்லாம்.
நோ நோ. அதெல்லாம் ஒண்ணும் இல்லே.
வாங்க... ரோஸியோட மஸாஜ் ரொம்ப ஃபேமஸ். பத்து நிமிஷத்திலேயே உடம்பு – மனசு எல்லாமே ஜிலு ஜிலுன்னு ஆயிடும்...
இவ போக்கிலே போயி தான் நம்ம காரியந் தத்தி வரணும்..
என்ன பேசவே மாட்டேங்கறீங்க? நான் ரொம்ப அக்ரஸிவா இருக்கிற மாதிரி தோணுதா?
அப்படி யெல்லாம் இல்லே.


உங்களை நேரிடையாப் பழக்கம் இல்லையே தவிர, நித்யா நிறையச் சொல்லியிருக்கா. அதனாலே உங்களை ரொம்பத் தெரிஞ்ச மாதிரி ஒரு ஃபீலிங்.
உன்னைப் பத்தியும் நித்யா சொல்லி யிருக்கா. ரொம்ப நாளாவே இங்கே வரணும்னு எண்ணம்.
ரைட். கம்ப்ளீட்டா ஸ்டிரிப் பண்ணிடுங்க. அதுக்குள்ளே இந்த அறைக் கதவைச் சாத்திட்றேன்...
வரவேற்பறையில்—
ஏதோ ஒரு வேகத்திலே இப்படி வந்துட்டேன்! நேரம் ஆகும் போல இருக்கே! வீட்டுக்குப் போன் செஞ்சு சொல்லிடலாமா?
மலாத் அறையில்—
ஹிப்பிக்கு சாமர்த்தியம் போதல்லே. உன்னை வெளியிலே நடமாட விட்டுட்டான். ரமேஷ்! வலையிலே வந்து மாட்டி யிருக்கே... இனிமே நீ எங்கேயும் நடமாட முடியாது..
அடுத்த கணம்—
தொடரும்


ஆண்டாண்டு கால உத்திரவாதம் உடையது! அணிவதற்கு தங்கத்தின் தரம் உடையது!
22 காரட்
ரூபா மேக்னட் கோல்டு கவரிங்
நகைகள் ஒன்றே!
கதம்ப மாளிகை
36. பாண்டி பஜார், தி. நகர் - சென்னை - 600017
கேட்லாக் வேண்டுவோர் 75 பைசா ஸ்டாம்புடன்
விலாசத்தை தெளிவாக எழுதவும்
பரதநாட்டியம் செட் கிடைக்கும்



மகிழ்ச்சி அரங்கேறும் நேரம்



✖ முத்துக்காய ரோகணம், சாந்தி

மார்ச் 11. சந்தோஷ மொட்டுக்கள் பூவாய் மலர்ந்தன. ''கான்ஃப்ளுயன்ஸ்'' என்ற விழாவைக் கோவை அரசினர் தொழில் நுட்பக் கல்லூரியில் துவக்கி வைத்தார் பாரதியார் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் சுப்பையன்.

தினம் அமுத்திப் போடுகின்ற படிப்பின் கனத்திலிருந்து விடுபட்டு மூன்று நாள் சந்தோஷத்துக்காக வந்த தமிழ்நாட்டின் பல்வேறு கல்லூரி மாணவ மாணவிகள். மஞ்சள் மஞ்சளாய்ப் பூத்துத் தரையெல்லாம் பாய் விரித்திருந்த 'பெல்டோஃபோரம்' பூக்கள். அடர்த்தியான பசுமையுடன் வரிசையான மரங்கள். இனிமை. எங்கும் இனிமை.

கோவை ஜி. ஸி. டி. இசைக் குழுவில் பாடிய முத்துக்காயரோகணத்தையும், சாந்தியையும் முக்கியமாய் குறிப்பிட வேண்டும். முத்துவின் ஆழமான குரலில் இசைக்கப்பட்ட 'கவிதை அரங்கேறும் நேரம்' அவரின் மாஸ்டர்பீஸ். சாந்தி சங்கராபரணம் பாடலைப் பாடியபோது அரங்கத்தில் எங்கோ விழுந்த குண்டூசியின் சப்தம் கேட்டது. 'ஜூனியர் ஜானகி' என மாணவர்கள் குறிப்பிட்டது இந்த வருஷத்தின் மகத்தான உண்மை.

ஸி. ஐ. டி. மாணவர்களின் நாடகம் சமூகப் பிரச்னையைக் கோபமாய் அலசியது. அரசியல்வாதிகள் வசனங்களால் தர்மத்துக்குச் சாத்தப்பட்டார்கள். இளைஞர்களின் இன்றைய நிலை அழகாய், ஆழமாய்ச் சொல்லப்பட்டது. எனினும் இந்நாடகத்துக்குப் பரிசு கிடைக்காமல் வேறு ஒரு அபத்தமான நாடகம் பரிசைத் தட்டிக் கொண்டுபோனது நடுவர்களின் மிக மோசமான தவறு எனலாம்.

கிண்டி என்ஜினீயரிங் கல்லூரி மாணவர்கள் கோவையில் உள்ள 'ஜேம்ஸ்பாண்டு' ரங்கனையும் மற்றும் இருவரையும் (குளிரு இறதே என்று ஹெலிகாப்டர் ஃபேனை அணைக்கும் புத்திசாலிகள்) பம்பாய் வழியாய் (பானிபூரி, பேல்பூரி, பத்மினி கோலாப்பூரி பார்த்து) பக்கிங்காம் அரண்மனைக்கு அழைத்துப்போய் சார்லஸ் — டயானா (டயானா ஷேவ் பண்ணாமல் வந்து தொலைத்தார்) திருமணத்தைக் காட்டினார்கள்.

மதுரை மாணவர்களின் 'நவீன டாக்டர்', நோயாளிக்கு ஆபரேஷன் செய்யும்போது பெருங்குடல், சிறு குடல் சகலத்தையும் இழுத்துப் போட்டு... ''குருகு ஜிம்மி ஜிம்மி ஓடிவா''... இதற்குப் பிறகும் டாக்டர் ஸ்டெத்தை மாட்டிச் சத்தம் தேடுகிறார்!

பெயிண்டிங்குக்குக் கொடுக்கப்பட்ட தலைப்பு 'மூடுபனி'. பி.எஸ்.ஜி. டெக் ஸ்ரீனிவாசனின் பெயிண்டிங் அதிகாலைப்பனியை அப்படியே உள்ளடக்கி அழகான கவிதையே வடித்திருந்தது.

கோவை அரசினர் கலைக்கல்லூரி—மாணவர் பாம்பு நடனம் ஆடியபோது அவர் காட்டிய





வேகம், ஆவேசம், முக அமைப்புக்கள், நாக்கு வெளிவரக் கண்கள் பிரதிபலித்த ரௌத்ரம் 'பிரமாதம்.'

வாய்ப்பேச்சின்றிச் சைகையாலேயே மற்றவர்க்குப் புரிய வைக்க வேண்டும். கொடுக்கப்பட்ட தலைப்பு 'இப்படியும் ஒரு பெண்'. புரியவைக்க எடுத்துக்கொண்ட நேரம் நான்கே நொடிகள். வெல்டன் பி.எஸ்.ஜி. டெக். ஷெல்லி.

டக்கென்று ஒருவர் மயக்கம் போட்டு விழுந்தார். இன்னொருவர் சுற்றிப் பார்த்து அவரருகில் அமர்ந்து வெறும் கைகளால் விசிறி விசிறி அவரை எழுப்பிய பின், ''மயக்கத்தைத் தெளிய வைப்பது 'கைதான்' ஃபேன்'' என்று விளம்பரம் சொன்னார்.

இனிமேல் எந்தக் கல்லூரி என்றாலும் நன்றாய் நடந்துகொள்ளத் தெரிந்த, அநாவசியமாய் அலட்டாத, போட்ட மாலையை அலட்சியமாய் வீசி எறியாத, பேசத் தெரிந்த உருப்படியான ஆசாமிகளை அழைத்துவிழாவின் இறுதி அம்சத்தைச் செய்யுங்கள். இல்லையெனில் நடந்த விழாவில் ஒரு கரும்புள்ளி விழுந்தது போல் ஆகிவிடும். கிடைத்த சந்தோஷம் அந்தக் கடைசி நேரத்தில் நழுவிப்போய்விடும்.

விழாவின் கடைசி நாளன்று கலந்து கொண்டவர் நடிகர் தியாகராஜன்.

-மார்ஷல், உதயகுமார், ஜீவா

புகைப்படம்: ஜி.வி.டி. போட்டோஸ்

வரி விளம்பரங்கள்

இப்பகுதியில் சுவையான செய்திகள், சிரிப்பம்சங்கள் அடங்கியுள்ளன. இப்பகுதியில் விளம்பரம் செய்யாவிட்டாலும் வரிக்கு வரி படித்துப் பயனடையுங்கள்.

ஆட்கள் தேவை

● மத்திய, மாநில அரசாங்கங்கள் அவ்வப்போது நியமிக்கும் விசாரணைக் கமிஷன்களுக்கு அரசாங்கத்தை அனுசரித்துப் போகக் கூடிய ஓய்வு பெற்ற நீதிபதிகள் தேவை. தனி அலுவலகம், தனி வீடு, வேலையாட்கள், வாகன வசதிகள் உண்டு. WEC 48

● தமிழ் நாட்டில்ஜனதா கட்சியை வலுப்படுத்த தேசியக் கண்ணோட்டமுள்ள வாலிபர்கள் — வயோதிகர்கள் தேவை. கூட்டங்களுக்கு ஆட்களைச் சேகரித்து வருகிற ஆற்றல் இருப்பது அவசியம். தமிழ்நாடு ஜனதா கட்சி, சென்னை WEC 49

வேலை தேவை

● மகாராஷ்ட்ரா முதலமைச்சராகவும் மத்திய ராணுவ அமைச்சராகவும் இருந்து பல வருஷங்கள் அனுபவம் பெற்ற ஒய். பி. சவானுக்கு அவரது தகுதிக்கேற்ப வேலை தேவை. SV-20.

காணவில்லை

● தமிழ்நாடு அமைச்சரவையில் அமைச்சராக இருந்த செல்வி பி. டி. சரஸ்வதி, திரு சௌந்தரபாண்டியன் மற்றும் மத்திய அமைச்சராக இருந்த திரு பாலா பழனூர் முதலானோர் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக காணவில்லை. அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்ன செய்கிறார்கள் என்று கண்டு பிடித்துத் தருபவர்களுக்குத் தக்க சன்மானம் அளிக்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: பெட்டி எண் 28 சென்னை-205

A. S. 28

அறிவிப்பு

● மதுவிலக்கைத் தளர்த்தி அதன் மூலம் அரசாங்கத்துக்கு நூறு கோடிக்கு மேல் வருமானம் வந்தாலும் அண்ணாவின் பெயரால் மதுவின் கொடுமைகளை விளக்கி ஆட்சியை விட்டு இறங்குவதற்குமுன் மதுவிலக்கை அமல் செய்தே தீருவேன்.-எம். ஜி. ராமச்சந்திரன், தமிழ்நாடு முதலமைச்சர், சென்னை-2.

AT-6..

● மோட்டார் பைக், சைக்கிள், மூன்று சக்கர குழந்தை சைக்கிள் தயாரிப்பவர்களுக்கு வேண்டுகோள். உங்களிடம் சைக்கிள் வாங்க வருபவர்கள் எதற்காக, ஏன் வாங்குகிறார்கள் என்பதைக் கண்டுபிடித்து அவர்களுக்கு அவசியம் தேவைதானா என்பதை ஆராய்ந்து விற்பனை செய்ய வேண்டும். அப்போதுதான் மோட்டார் பைக், சைக்கிள், ட்ரை சைக்கிள் மூலம் நடக்கிற செயின் திருட்டுக்களும் இதர திருட்டுக்களும் குறையும். சென்னை போலீஸ் கமிஷ்னர். AT-8.

பிறந்த நாள்

● தேசத் தந்தை மகாத்மா காந்தியின் பிறந்த நாள் வருகிற அக்டோபர் 2 அன்று வருகிறது. மகாத்மாவின் பிறந்த நாளை உதாசீனப்படுத்தலாம்; அல்லது மறந்து

விட்டோம் என்றும் கூறலாம். அதனால் இப்போதிருந்தே —மக்கள் மனத்தில் இருக்க வேண்டும் என்பதற்காக விளம்பரம் செய்கிறேன்.—ஒரு தேசபக்தத் தியாகி WD-444.

ஜோசியம் கைரேகை

● தமிழக ஆட்சி எப்போது கலைக்கப்படும் அல்லது கவிழும் என்பதையும் அடுத்து யார் யார் மந்திரிகளாக, எம். எல். ஏ.க்களாக வருவார்கள் என்பதையும் தெரிந்துகொள்ள பிரபல நாடி ஜோசியர் ஜோதிஷ பூஷணம் நாஞ்சில் கி. மனோகரனை நேரிலோ, தபால் மூலமாகவோ தொடர்பு கொண்டு பயனடைக. AH-226.

● கைரேகையில் விற்பன்னர். ஒரு நடிகைக்குக் கல்யாணம் நடக்காது என்று சொன்னார். அப்படியே பலித்து விட்டது. உங்களது கல்யாணம், வேலை வாய்ப்பு, சொத்து சுகம் பற்றித் துல்லியமாகத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் மூகாம்பிகை அம்மன் அருள் பெற்ற எம். ஜி. ஆர். ராமாவரம், சென்னை என்ற விலாசத்துக்குத் தொடர்பு கொள்ளவும். AH-227.

வீடு—மனை

சென்னை, மதுரை, திருச்சி போன்ற நகரங்களில் உள்ள முக்கியமான சாலைகளில் உள்ள பிளாட்பாரங்களில் கடைகள் கட்டிக்கொள்ளலாம். புறம்போக்கு நிலங்களில் குடிசை போட்டுக் கொள்ளலாம். குறைந்தபட்ச நாள் வாடகை. உடனே முந்துங்கள். தலைவர், அனைத்துலக அன்றாடு நடைபாதை ஆக்கிரமிப்பாளர் சங்கம், சென்னை-600014. H. P. 8

முகவரி மாற்றம்

● இதனால் சகலமானவர்களுக்கும், தெரிவிப்பது என்னவென்றால் இதுவரை நான் குடியிருந்த கட்சியான கா. கா. தே. கா.வி லிருந்து தேசியஹூரர் சௌகரியங்களை முன்னிட்டு இந்திரா காங்கிரஸுக்குக் குடியேறி விட்டேன். இனிமேல் என்னுடைய முகவரி தீர்த்தராமன் எம். எல். ஏ., இந்திரா காங்கிரஸ், தமிழ்நாடு.

கல்வி

● நீங்கள் எம். பி. பி. எஸ். டாக்டராக வேண்டுமா? பி. யூ. சி. பரீட்சையில் மதிப்பெண்கள் 0, 0, 0, 2 என்று எடுத்திருந்தாலும் பரவாயில்லை. எப்படியெல்லாமோ இருந்து உங்களை டாக்டர் படிப்பில் சேர்க்க கேரளாவில் உள்ள பிரமுகர்கள் தயாராக இருக்கின்றனர். பெட்டி எண் 42, கைரளி.



● இந்த இதழில் ஆன்றோர் வாக்குகளை வழங்கியிருப்பவர்கள் ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள், இக்பால், மாலியேர், பிராங்கோய்ஸ் ராபில்லோயிஸ், விக்டர்ஹியூகோ.

எந்தெந்த வாக்கை யார் அருளியிருக்கிறார்கள் என்று கண்டு பிடியுங்கள், பார்க்கலாம். 62ம் பக்கம் புரட்டினால் சரியான விடை கிடைக்கும்.

1. ஆசையே வாழ்க்கைக்கு ஜீவ ஊற்றாகும். இது மானிடர்களின் செயலாற்றலாக வெளிப்படுகிறது. யாசிப்பது அகத்தைப் பலஹீனமாக்குகிறது. அன்பு ஆத்மாவைப் பல முள்ளதாக்குகிறது. அதன் மூலம் உலக சக்திகள் மீது அகம் அதிகாரம் செலுத்த முடியும்.
2. நீ ஒரு முட்டாளைச் சந்திக்கத் தயங்கினாயானால் முதலில் நீ முகம் பார்க்கும் கண்ணாடியை உடைத்தெறி!
3. எல்லா வித்தைகளுக்கும் மேலான வித்தை பிரம்ம வித்தை. இதை வெறும் அறிவினால் மாத்திரம் அடைய முடியாது. அனுபவத்தில்தான் வரும். இந்த ஆத்ம வித்தையை அனுபவத்தில் உணர வேண்டுமானால் மனத்தில் மனோவிருத்தி திடமாக இருக்க வேண்டும். இதர வித்தைகளினால் மனம் பக்குவப்பட்டு, நல்ல ஞானம் வந்தால்தான் ஆத்ம வித்தையே வரும்.
4. ராணுவப் படையெடுப்பைத் தடுத்து நிறுத்தலாம். சிந்தனைப் படையெடுப்பை யாரால் தடுக்க முடியும்?
5. ஒருவன் தான் வாழ்வதற்காக உண்ண வேண்டும். ஆனால் உண்பதற்காகவே வாழக் கூடாது!

"ஆமாம். அவுட்டோர் ஷூட்டிங்கிற்காகக் காஷ்மீர்போயிருந்தபோது நான் அந்த ரமேஷ்குமாருடன்தான் இருந்தேன். அவனேடுதான் சுற்றினேன்! அதற்கு இப்போது என்ன செய்ய வேண்டும் என்கிறீர்கள்?"—

நளினி படபடப்புடன் பேசினுள்.

கடைசியில் அவள் இவ்வளவு சீக்கிரம், இவ்வளவு வெளிப்படையாகப் பேசுவாள் என்று எதிர்பார்க்கவில்லை.

அவளிடம் அந்தப் பத்திரிகையில் வெளிவந்திருந்த அந்தக் 'கிசுகிசு' செய்தியைக் காட்டும்போது அவனுக்குள் இருந்த சந்தேகத்தின் தீவிரமும் கோபமும் ஒவ்வொரு பதிலாகக் கூறி அவள் மறுத்தபோது எல்லாம் அவன் மனத்தில் மேலும் மேலும் தீவிரமாக வளர்ந்து வந்ததேயன்றிக் குறையவில்லை!

அவள் அதை மறுத்தாள்.

'ஷியர் நான்சென்ஸ்' என்றுள்.

இவ்வளவுக்கும் அவர்கள் இருவரும் ஒரு வரையொருவர் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டிருந்தார்கள்.

அவள் நடிகையாவதற்கு முன்பு, சாதாரண ஒரு குடும்பப் பெண்ணுக அந்தக் காலனியில் வசிக்க வந்த நாட்களிலேயே அவனுக்கும் அவளுக்கும்இடையே துளிர்த்த காதல் அது!

அப்போது எல்லாம் தானும் ஒரு பிரபல நடிகையாக மாறுவோம் என்று கனவுகூடக் கண்டதில்லை அவள்!

அவளுடையகல்லூரியின் ஆண்டு விழாவுக்குத் தலைமை தாங்கவும், கல்லூரிக் கட்டிட நிதிக்குக் கணிசமானதொரு தொகை வசூலித்துத் தருவதற்காகவும் வந்திருந்த பிரபல டைரக்டர் விஸ்வநாத்தின் பார்வை—அந்த நடன நிகழ்ச்சியில் அவளைப் பார்த்தவுடனேயே அவளைத் தன் அடுத்த படத்தின் கதாநாயகியாகக் கண்டு பிடித்துவிட்டது!

அடுத்த நாளே தன் வீடு தேடி அந்த டைரக்டரின் கம்பெனிக் கார் வந்து நின்ற போது கூட நளினியால் எதையும் நம்பவே முடியவில்லை.

அவள் நடிகையாகி விட்டாள்.

முதல் படமே வெள்ளி விழாவை மீறி ஓடி வசூலைக் கொட்டிக் கொடுத்து விட்டது.

பிறகு கேட்பானேன்!

நளினி வெறும் நடிகையிலிருந்து பிரபல நடிகை, குணசித்திர நடிகை, பிஸி நடிகை, ஏக காலத்தில் மும்மொழிப் படங்களிலும் வெற்றி வாகை சூடிய அதிர்ஷ்டகரமான நடிகை என்று அடுக்கடுக்காக வளர்ந்து கொண்டே சென்றுள்.

தியாகு மிகவும் நல்லவன்.

சர்வகலாசாலையில் முதல் மாணவன்.

படிப்பிலும், விளையாட்டிலும் ஒரே சமயத்தில் வெற்றிக் கொடி நாட்டும் அழகன்!

அமைதியானவன்.

நளினியைக் கேட்டால் இன்னும் எவ்வளவோ அடுக்கிக் கொண்டே போவாள்.

அவனும் நளினியை மனப்பூர்வமாக நேசித்தான்.

அவனுடைய படிப்புக்கும் அவன் முன்னேற்றங்களுக்கும், மற்றும் ஒரு நடிகையாக நளினி தன்னை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் ஆகிய இரண்டாண்டுகள் இடைவெளி அவர்களைப் பொறுத்தவரையில் ஒரு பெரிய விஷயமாகவே இருக்கவில்லை.

அவனுக்குச் சென்னையிலேயே - பிரபலமான கம்பெனி ஒன்றில் நல்ல உத்தியோகம்



கிடைத்து மேற்கொண்டு பயிற்சி பெற அவன் வெளிநாடும் சென்று வந்தான்.

அவள் தன் கல்யாணப் பிரச்னையைப் பற்றிப் பேச ஆரம்பித்ததுமே அவள் அம்மாவும், அண்ணனும் நெருப்பைத் தொட்டு விட்டாற் போலப் பதறிப் போனார்கள்.

''இப்போதுதான் நீ நெம்பர் ஒன்'னாக ஆகியிருக்கிறாய். அதுவும் மூணு மொழியிலும். இந்த நேரம் பார்த்து நல்லா ரேட்டை உயர்த்தி மடமடவென்று சம்பாதிப்பதை விட்டு விட்டுக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன் என்கிறாயே உனக்குக் கொஞ்சமாவது மூளை இருக்கா?'' என்று அவள் அண்ணன் ஆத்திரமாகக் கத்தினான்.

''பேசாமல் அண்ணன் சொல்றதைக் கேளும்மா நளினி. நாங்க உனக்கு நல்லதைத் தான் சொல்வோம். கல்யாணம்னு ஆயிட்டாலே ஒரு நடிகையின் கிளாமர் போயிடும்னு சொல்லுவாங்க. அதுவும் நாம் அந்தஸ்துக்கும் வசதிக்கும் எவ்வளவோ பெரிய பெரிய சீமான்கள் நான் நீன்னு போட்டி போட்டுக்கிட்டு வருவான்கள். போயும் போயும் மாசம் நாலாயிரம் ரூபாய் பிச்சைக் காசு சம்பளம் வாங்குகிறவனா உனக்கு மாப்பிள்ளையாக வர்றது... நல்லா யோசிச்சுப் பாரும்மா...'' என்று அவள் அம்மா அவளுடைய முகவாயைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினாள்.

நளினி மசியவே இல்லை.

''கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன். அதுவும் அந்தத் தியாகுவைத் தான் மணக்கப் போகிறேன்'' என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டாள்.

அவள் அண்ணன் என்னவெல்லாமோ சீறி விழுந்து பார்த்தான். பயமுறுத்தினான். வாயில் வராத வார்த்தைகளால் அவளைத் திட்டித் தீர்த்தான்.

நளினி கொஞ்சம்கூட மாறவில்லை.

பிடிவாதமாகவே அவள் கல்யாணம் நடந்தது.

கல்யாணத்துக்கு வந்திருந்த டைரக்டர் விஸ்வநாத் ஒரு தந்தையின் பரிவுடன் அவளுக்குத் தேவையான உதவிகள் அனைத்தையும்செய்ததோடுஉடனடியாகஅவர்கள் தனிக் குடித்தனம் செய்ய ஒரு வாடகை வீட்டையும் சகல வசதிகளையும் ஏற்பாடு செய்திருந்தார்.

அவள் அம்மாவும் அண்ணனும் அவ்வளவு நாளும் அவள் சம்பாதித்ததை எல்லாம் தந்திரமாகப் பறித்துக் கொண்டு விட்டனர்.

நளினி சோர்ந்து போய்விடவில்லை.



மணல் பாவம்

—அரவிந்தன்—

தியாகுவும் அவள் தலையைக் கோதி விட்டு அன்புடன் அவள் நெற்றியில் முத்தமிட்டு ''போனால் போகட்டும். இந்தப் போல மூன்று மடங்கு பணத்தை இனி மேலும் கூட உன்னால் சம்பாதித்துக் காண்பிக்க முடியும்'' என்று இதமாகத் தைரியம் சொன்னான்.

நளினி நிஜமாகவே இயந்திரமாகத்தான் உழைத்தாள்.

நளினி மீண்டும் நிமிர்ந்து விட்டாள்.

தியாகுவும்கூட வேலையை விட்டு நின்று விட்டான். அவன் சொந்தமாக ஒரு இன்டஸ்ட்ரி தொடங்கி நடத்தப் போவதாகச் சொன்னபோது நளினிக்கு மிகவும் பெருமையாகவும், பூரிப்பாகவும், சந்தோஷமாகவும் இருந்தது.

இவ்வளவும் நடந்த பிறகு.

இத்தனை இடர்களையும் கடந்து வந்த பிறகு—

''சமீபத்தில் வெளியான ''அந்த மழை'' வெற்றிப் படத்தின் ஜோடிகள் ''சிறகுகள்'' படத்தின் அவுட்டோர் படப் பிடிப்புக்காகக் காஷ்மீர் போயிருந்ததாம். நளினமான நாயகிக்கும் குமார நாயகருக்கும் நெருக்கம் 'ஓகோ' வென்றிருந்ததாம். அந்தி மழை ஜோடி ஆனந்தராகம் பாடினார்களாம்''

என்று அந்தப் பத்திரிகையில் வெளிவந்திருக்கும் 'காஸிப்'பை நம்பிக்கொண்டு தன் எதிரில் நிற்கும் தியாகுவைப் பார்க்கும் போது நிஜமாகவே நளினிக்கு அடிவயிற்றிலிருந்து கோபம் பற்றிக் கொண்டுதான் வந்தது.



அந்த அவுட்டோர் போகு முன் அவள் அவனையும் கூடக் கூப்பிட்டாள். ''இருவரும் சேர்ந்து ஒரு முறை காஷ்மீருக்குப் போய் வந்தது போலவும் இருக்கும் ஷூட்டிங்கும் நடந்தது போல இருக்கும் வாருங்கள்'' என்று மிகவும் வற்புறுத்திக் கூப்பிட்டாள்.

தியாகுதான் ஒரு முக்கியமான பிஸினஸ் ஒப்பந்தம் கையெழுத்தாக இருப்பதைக் காரணம் காட்டி அவளுடன் வர மறுத்து விட்டான்.

வாசல் கதவு லேசாகத் தட்டப்பட்டது.

நளினியும் அவனும் வெளியே பார்த்தார்கள்.

ஒருக்களித்தாற்போலத் திறந்திருந்த கதவுக்கு உள்ளே எட்டிப் பார்த்த செகரட்டரி அன்றைக்கு அவள் போக வேண்டிய ஷூட்டிங் கால்ஷீட்களை வரிசையாக ஒப்பு வித்தான்.

''எனக்கு ஷூட்டிங்கிற்கு நேரமாச்சு!''

''எங்கே வேணுமானாலும் போ. போவதற்கு முன் ஒன்றைச் சொல்லிவிட்டுப் போ:

''இந்த மானம் கெட்ட பிழைப்பு தேவை தானா?''

''மானம் கெட்ட பிழைப்பு என்று நீங்களே முடிவு கட்டி விட்டீர்கள் அல்லவா? அதற்கு மேல் நான் சொல்ல என்ன இருக்கிறது? ஆனால் இதுதான் எனக்குப் பிழைப்பு. இதைத் தவிர எனக்கு வேறு எதுவும் தெரியாது. மானத்தோடு பிழைக்க வேறு வழி இருந்தால் பார்த்து வையுங்கள். நான் ஷூட்டிங் போய்விட்டு வருகிறேன்.''

நளினி அமைதியாகப் பேசினாள்.

இதில் எது, எந்த வார்த்தை அவனை ரோஷப்படுத்தியதோ?—

''எதிர்த்து எதிர்த்துப் பேசுகிறாயா? இடியட்'' என்றபடி கோபத்துடன் பாய்ந்தவன் அவள் கன்னத்தில் பளீரென்று மின்னல் வெட்டுப் போல் தன் கையை வீசினான்.

தன்னுடைய உள்ளத்தின் காதலெல்லாம் அந்த ஒரு கணத்தில் வற்றிப் போகத் திடீரென்று ரோஷப்பட்டுப் போன நளினியும் கோபத்துடன் கத்தினாள்:

''கெட் அவுட். ஐ ஸே...!''

தியாகு ஒரு கணம் கோபம் வடிய நின்று கொண்டிருந்து விட்டு 'மடமட'வென்று வெளியே இறங்கிப் போய்விட்டான்.

அருகில் இருந்த சோஃபாவில் பொத்தென்று விழுந்து நிதானமாகக் குலுங்கிக் குலுங்கி அழுதாள் நளினி.

நளினி சட்டென்று ஒரு தீர்மானத்துக்கு வந்தவளாகப் பரபரப்புடன் முகத்தைத் துடைத்துக் கொண்டு ஷூட்டிங்குக்குக் கிளம்பினாள்.

''ஒரு க்ளைமாக்ஸ் சீன் அம்மா. நீங்க இதிலே ட்யூவல் ரோல். நீங்களே தாயும் மகளுமா நடிக்கிறீங்க. புருஷனை விட்டுப் பிறந்த வீட்டுக்கே வந்திடறா மக. தாயார்க்காரி மகளுக்குப் புத்தி சொல்றா.

''தாய் கேரக்டர் டயலாக்கைப் படிக்கிறேன். கேக்கிறீங்களாம்மா?''

இலேசாகத் தொண்டையைக் கனைத்துக் கொண்டு படிக்கத் துவங்கினார் வசன கர்த்தா.

''இந்த மண்ணும் இந்த நாடுமே பெண்களுக்கு உரியதுடீ. இங்கே எல்லாமே பெண்தான். பெண்தான் பொறுமையா இருக்கணும். பெண்தான் கற்போட இருக்கணும். பொண்ணுக்குத்தான் எல்லாப் பொறுப்பும் இருக்கணும் என்று திரும்பத் திரும்பச் சொல்லி அதையே உறுதி செய்த தன் மூலம் பெண்ணை அடிமைப்படுத்திட்டாங்க என்றே கட்டிப் போட்டுட்டாங்கன்னே என்னால நினைக்க முடியலே. இதையே வேறு விதமா யோசிச்சுப் பாரேன். பொறுமையா இருக்கிறது, கற்போட இருக்கிறது. பொறுப்பா இருக்கிறது எல்லாமே பலசாலின்னு மார்தட்டிக்கிற ஆண்களாலே முடியாத விஷயங்கள். அது அவர்களுடைய வீக்னஸ் அதை மறைக்க நம்மகிட்டே இந்த விஷயங்களை யெல்லாம் தள்ளிவிட்டு இதை நாம காப்பாத்த வேண்டிய குணங்களாக ஆக்கிட்டாங்க — நம்மாலே மட்டுமே இதைக் காப்பாத்த முடிஞ்சும் வந்திருக்கு இவ்வளவு காலமும்.

''பெண்டாட்டியே வேணும்னு சொல்லிட்டு ஓடின புருஷங்களை இதிகாச புராண நாளிலிருந்து இந்த உலகம் பார்த்துக்கிட்டே இருக்கிறது!

''ஆனால் புருஷன் வேணும்னுட்டு ஓடற பெண்களை இந்த 'பெண் உரிமை'க் காலத்திலேதான் பார்க்க முடியுது.

''அம்மா அந்த இடத்திலே டயலாக்கை 'கட்' பண்ணிடறேம். கொஞ்ச நேரம் சைலண்ட் இம்ப்ரஷன்ஸ் மட்டும்.

''உங்களுடைய கடைசி டயலாக்:

''குறையே இல்லாத மனுஷங்க இந்த உலகத்திலேயே இல்லே. ஒருத்தர் மேலே கோபமோ வெறுப்போ ஏற்படும்போது அவங்கிட்ட நாம வெறுக்கிற அந்தக் கெட்ட குணமே நிறைஞ்சு இருக்கிறமாதிரி தோணும். அவங்க கிட்ட இருக்கிற பல நல்ல குணங்கள் எல்லாமே மறைஞ்சு போயிடும். அப்போது நிதானமா யோசிச்சுப் பார்த்தா; இதையெல்லாம் நான் முன்னே சொன்ன மாதிரி ஆண்களோட பலவீனங்கள்னு ஒப்புக்கொண்டு பார்த்தால் உன் புருஷன் கிட்டே இருக்கிற பல நல்ல குணங்கள் உனக்குத் தெரியும். அந்த பலத்தை நினைச்சு இந்தப் பலவீனத்தைச் சகித்துக் கொள்ளவும் உனக்குத் தைரியம் வரும்.''

அந்த வசனகர்த்தா தொடர்ந்து படித்துக் கொண்டிருந்தார். இந்த வசனம் தனக்காகவே எழுதப்பட்டது போலத் தோன்றியது அவளுக்கு! உண்மை தானே?

ஆண்களின் இந்த உரிமை வேட்கை என்ற பலவீனத்தைப் புரிந்து கொண்டு அவரிடம் நிதானமாக விளக்கம் சொல்லியிருக்க வேண்டுமோ?

அவுட்டோர் ஷூட்டிங் சமயம் குடித்துவிட்டுத் தன்னையே சுற்றிச் சுற்றிவந்த அந்த வில்லன் நடிகரிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவே கதாநாயகன் ரமேஷ் குமாருடன் சேர்ந்து இருந்ததாகவும், ஷூட்டிங் துவங்கி இரண்டாம் நாளே ரமேஷ் குமாரின் மனைவியும் காஷ்மீர் வந்து அவர்களுடன் சேர்ந்து கொண்டு விட்டாள் என்பதையும் பொறுமையாகவும், நிதானமாகவும் சொல்லி, இருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் என்று அவள் மனம் திரும்பத் திரும்ப எண்ணியது.

ஆண்கள் அவசரக்காரர்கள்தான், ஆத்திரக்காரர்கள்தான்; உரிமை உணர்வுநிறைய உள்ளவர்கள்தான்.

இவை எல்லாவற்றையும் கொண்ட ஆண் என்ற யானையை அடக்குகிற அங்குசம் பெண்களின் ஆற்றலில் அல்லவா இருக்கிறது?

நளினி மீண்டும் கண்களை மூடித் தனக்குள் திட்டம் போட்டுக் கொண்டிருந்தாள்.

ஷூட்டிங் முடிந்து முதல் காரியமாக உடனே வீட்டுக்குத் திரும்பி, தியாகுவின் கழுத்தில் ஒரு குழந்தையாகத் தொங்கி, அவன் கோபத்தைச் சமாதானப்படுத்தி — அவனை ஒரு மனைவியாக உதட்டில் முத்தமிட்டு... அவள் வாழ்க்கையைப் புரிந்து கொண்டு விட்டாள்.

ஆம். வாழ்க்கை என்பது ஒரு மணல் பாலத்தில் நடக்கிற மாதிரிதான். வேகமாக நடந்து பாலத்தை உடைத்து விடக் கூடாது. அதற்கு மிகவும் ஜாக்கிரதை தேவை அல்லவா?

அந்தச் சனிக்கிழமை மாரப்பன் சீக்கிரமே தோட்ட வேலைக்கு வந்து விட்டான்.

''கொஞ்ச நாள் ஓய்வாக இருக்கச் சொன்னேனே — அவசரம் ஏன்?'' அத்தை ஜகதா உரிமையுடன் அவனைக் கடிந்து கொண்டாள்.

''முந்தாநாளே டாக்டர் தையலைப் பிரிச்சுட்டார். இனி கவலையில்லேன்னுட்டார். சும்மா வீட்டிலே குந்திக்கிட்டிருந்தா எனக்கும் என் பெண்ஜாதிக்கும் இரண்டு குழந்தைகளுக்கும் யார் சோறு போடுவாங்க?''— சிரித்தபடி மண்வெட்டியுடன் அவன் தோட்டத்துக்குள் புகுந்தான்.

விடியு முன்னரே கிணற்று மோட்டாரை இயங்கச் செய்திருந்தான் சந்தியா. பொழுது புலர்வதற்குள் நீர் கால்வாய்களில் ஓடிக் கொண்டிருந்தது.

திங்கட் கிழமை பள்ளியில் போதிக்க வேண்டிய பாடங்களைத் தயாரிக்க மேஜை மீது புத்தகங்களுடன் குனியலுக்குப் பின் அவசரமாக முடியை வாரிக் கட்டிக் கொண்டு குங்குமப் பொட்டு வைத்துக் கொண்டு உட்கார்ந்தவள் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்தாள்.

மாரப்பனைக் கண்டதும் சட்டென்று எழுந்து சாமான் அறையிலிருந்த கூடைகளுடன் அவன் பின்னால் சென்றாள்.

''என்னம்மா செடியெல்லாம் எப்படியோ ஏங்கினாப்பல இருக்கு... காய்களைக் கூட ரொம்பக் காணலியே...?''வியப்புடன் கேட்டான் மாரப்பன்.


''பம்பு செட் ரிப்பேராகி ஒரு வாரத்துக்கு மேலே தோட்டம் தண்ணி இல்லாம காய்ஞ்சு கிடந்தது. வெய்யில் வேறே பொசுக்குது. செடிகள் ரொம்ப வாடிப்போச்சு.''

''ஒரு நாள் வராட்டா இந்தத் தோட்டம் எப்படிப் போச்சு பார்த்தீங்களா? அத்தையம்மா கோவிச்சுப்பாங்களேன்னு போன வாரம் வரலே. இல்லாட்டி முதல் வேலையா

சாதாரண மனிதன்

'லக்ஷ்மி'





பூதலூருக்கு ஓடி ஆட்களை இட்டாந்து பம்பு செட்டைச் சரி செய்திருப்பேன்... நானே குடம் குடமாத் தண்ணியைக் கிணத்திலிருந்து இழுத்து எல்லாச் செடிகளுக்கும் ஊத்தி இருப்பேனே... யார் கிட்டேயாவது ஒரு வார்த்தை சொல்லி அனுப்பியிருக்கக் கூடாதா, அம்மா?''

''உன் வீடு தொலை தூரத்தில் இருக்கு. நான் யாரை அனுப்பிச் கூட்டிவரச் சொல்வேன்? — போதாதற்கு நீ தலையிலே காயம் பட்டுக்கிட்டு வைத்தியம் செஞ்சுக்கிட்டிருந்தே. மண்ணுல கை வைச்ச அந்தக் கையால காயத்தைத் தொட்டு ஏதாச்சும் கோளாறு ஆயிட்டா....''

''நான்தான் தினமும் நம்ம டாக்டர் ஐயா கிளினிக்குக்கு காயத்தைக் காட்டிட்டுப் போக வந்துக்கிட்டிருந்தேனே! அந்தச் சமயம் கூட அத்தையம்மா என்னைக் கூப்பிட்டுப் பூதலூருக்கு அனுப்பி யிருக்கலாம்.'' ஆதங்

கத்துடன் சொல்லிக் கொண்டு கால்வாய்களைத் தடுத்த மண்ணை அகற்ற ஆழமாக வெட்டி நீரை வேகமாக ஓடவிட்டான்.

''டாக்டர் மேலும் பீஸ் ஏதாச்சும் வாங்கிறாரா?'' – கேட்க ஆவல் அவளுக்கு. ஆனாலும் திடீரென்று ஏற்பட்டதொரு கோபத்தில் அவள் மௌனமாகக் கிணற்று மேடை அருகே கூடைகளைக் கொண்டுபோய் வைத்தாள்.

அவள் கேட்ட கேள்விக்குத் தானே பதில் அளிப்பதுபோல் அவன் காய்களைப் பறித்துக் கூடைகளில் போட்டவாறு பேசிக்கொண்டே நடந்தான்.

''டாக்டர் ஐயா ரொம்பத் தங்கமானவர் அம்மா. அத்தையம்மா அன்னிக்குக் கொடுத்த பணத்துக்கு மேலே என்கிட்டே யிருந்து ஒரு பைசாக்கூட எடுத்துக்கலே...'' சொல்லிவிட்டுத் துரிதமாக அவன் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

வழக்கத்துக்குக் குறைவாகத்தான் அன்றைக்குக் காய்களும் எலுமிச்சம் பழங்களும் கிடைத்தன. கூடைகளை உள்ளே கொண்டு வந்து வைத்துவிட்டுக் கொஞ்சம் புல்லைப் பின்பக்கமிருந்து வெட்டி எடுத்து உதறிக் கட்டாகக் கட்டிக் கொண்டு வந்து வேப்ப மரத்தடியில் போட்டான். ஆனாலும் அவன் வாய் சும்மா இருக்கவே யில்லை.

''எனக்கு மட்டுமில்லையம்மா. ஏழை எளியவங்க கிட்ட டாக்டர் ஒரு தடவைக்காக வாங்கின பிறகு அடுத்த தடவை வைத்தியம் செய்ய மறுபடி பீஸ் கேட்கிறதில்லே. சிலபேர் முதல் தடவை சிகிச்சைக்குக் கூட எதுவும் தரதில்லே. முந்தாநேத்து என் கண்ணாலே பார்த்தேன். ஒரு ஏழைத் தாய்... வாந்தியும் பேதியுமாகத் துரும்பாகி விட்ட தன் குழந்தையைத் தூக்கிட்டு வந்தா. ஊசி போட்டு மாத்திரை யெல்லாம் கொடுத்தார். பணம் ஏதாச்சும் தரணுமின்னு அந்தம்மா தன் சுருக்குப் பையை அவிழ்த்த போது ''வேண்டாம்...அந்தப் பணத்துக்குக் குழந்தைக்கு நான் சொல்ற உணவுப் பொருளை வாங்கி ஊட்டம்மா. விரைவில் குணமாகிவிடும்'' அப்படின்னு தடுத்துட்டார். குழந்தைக்குச் சாப்பிட என்னென்ன தரணும்னு விளக்கிக்கிட்டிருந்தார். அந்தம்மா வெளியிலே போகச்சே டாக்டரை ரொம்ப வாழ்த்திட்டுப் போனாங்க....''

சந்தியா கோபத்தில் கொதித்துப்போனாள்.

''மாரப்பா! உனக்கு மரம் செடி கொடி பயிர்களை எப்படி வளர்க்கிறதுங்கிறதுதான் தெரியும். டாக்டருக்குத் தன் புகழை எப்படி வளர்த்துக்கிறதுன்னு நல்லாவே தெரிஞ்சிருக்கு....ஏழைப் பங்காளன்னு ஊர் மக்களிடம் முதலில் நல்ல பேர் வாங்க இப்படி நடிக்கிறாரோ என்னவோ? பீஸை வாங்காமல் தொழில் நடத்தினா எப்படிப் பிழைப்பார் நீயே யோசிச்சுப் பார்...''

''அதாம்மா எனக்கு ரொம்பக் கவலையா இருக்கு.''

''கவலைப்படாதே மாரப்பா! கைநிறைய வரதட்சிணைப் பணமும் காரும் பங்களாவும் கொடுத்து அவருக்குப் பெண் கொடுக்கப் பெரிய பணக்காரங்க காத்திருக்காங்க... அந்தத் தெம்பிலேதான் அவர் உன்னையும் எங்களையும் போலவங்க கிட்ட பணம் வாங்காம ரொம்ப நல்லதனமா நடந்துக்கறார்...'' படபடவென்று ஆத்திரத்துடன் பேசினாள் சந்தியா.

அகத்திக்கீரைக்கட்டுக்களை அவிழ்த்து மாட்டுக்கும் கன்றுக்கும் பங்கிட்டபடி மாரப்பன் தனக்குள்ளே சிரித்துக்கொண்டான்.

''என்ன மாரப்பா... நான் பேசறது உனக்கு வேடிக்கையா இருக்கா?''

''இல்லேம்மா. உங்க அத்தான் திருச்சியிலிருந்து வந்திருந்தாரே.. அப்போ டாக்டருக்கும் அவருக்கும் நடந்த பேச்சு வார்த்தைகளை நினைச்சுக்கிட்டேன்... சிரிப்பு வரது...''

சந்தியாவால் ஆவலைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ''என்ன, ரெண்டு பேரும் ரொம்ப நேரம் பேசினாங்களா?''

''காலைவேளையிலே முதலாக நான் போய்த் தினமும்என்காயத்தைக் காட்டிட்டுப் போய்க் கிட்டிருந்தேனா?... அன்னிக்குக் காலையிலே நான் போய்த் திண்ணைப் பெஞ்சிலே உட்கார்ந்துக்கு முந்தி உங்க அத்தான் காரிலிருந்து இறங்கி உள்ளாரப் போயிட்டார். டாக்டருடைய கிளினிக் ஒரு சின்ன அறை. வாசல் பக்கமா இருந்த ஜன்னலுக்குத் திரை போட்டிருந்தாலும் உள்ளே பேசினது நல்லாக் கேட்டது. அவங்க ரெண்டு பேரும் முதல்ல இங்கிலீஷ்லே பேசினாங்க. ஒண்ணும் புரியலே. பிறகு தமிழிலே பேச ஆரம்பிச்ச

- பிரபலமானவர்கள்தான் சாதனை புரிந்திருக்க வேண்டுமா என்ன?
- நீங்களும் கூட ஒரு சாதனை வெளி யில் தெரிய வராமல் செய்திருக்கலாம்.
- அது பற்றி ஒரு தபால் கார்டில் தான் எழுதி அனுப்ப வேண்டும், சுருக்கமாக.
- பிரசுரமானால் பரிசு உண்டு.
- ''சாதனை! சாதனை!'' என்று தலைப்புத் தரவும். திருப்பி அனுப்புதல், கடிதப் போக்குவரத்துக் கிடையாது.
- முடிவு தேதி: ஏப்ரல் 15.



போதுதான் நான் உத்துக் கேட்டேன். உங்க அத்தானுக்குத் தெரிஞ்ச இடத்திலேயிருந்து டாக்டருக்குப் பெண் பேச வந்திருக்கிறாரு. பேச்சு வார்த்தைகள் நடந்தன.''

சந்தியா கீழ் உதட்டைக் கடித்துக்-கொண்டு மௌனமாக நின்றாள்.

''பம்பாய்க்குப் போன் செய்து கேட்டீங்களா? உங்க சகோதரி சரின்னு சொல்லிட்டாங்க இல்லையா'ன்னு உங்க அத்தான் கேட்டார்.

''பம்பாய்க்கு நான் போன் பண்ணலை. இது என் சொந்தச் சங்கதி. இதைப் பத்தி முடிவு செய்ய வேண்டியவன் நான்தான். அவங்களை ஏன் உபத்திரவப்படுத்தணும்னு நான் சும்மா இருந்துட்டேன்'' அப்படின்னு டாக்டர் பதில் சொன்னார்.

''நல்ல முடிவு சொல்லுவீங்கன்னுதான் நான் விடியற்காலையிலேயே புறப்பட்டு வந்திருக்கேன்.....'' — உங்க அத்தான் பலமாகச் சிரிச்சார்.

'''நீங்க சொல்றதெல்லாம் சரி... ஆனா பணத்துக்காகவோ பங்களாவுக்காகவோ நான் என்னை யாருக்கும் வித்துக்கிறதில்லைனு முடிவு செய்திருக்கேன்.' — டாக்டரின் குரலில் கொஞ்சம் காரம் தெரிஞ்சிச்சு.

''அப்போ நல்லதாப் போச்சு. நீங்க பணம் — காசு எதுவும் எதிர்பார்க்கலை. பெண்ணைக் கட்டிக் கொடுத்தாப் போதும்னுட்டார்னு நான் என் சிநேகிதனுக்குச் சொல்லிடவா?'' — உங்க அத்தான் சந்தோஷமாகக் கேட்டார்.

''கல்யாணம் பண்ணிக்கோன்னு என்னை நீங்க வற்புறுத்தறது ரொம்பத் தப்புங்க.'' டாக்டர் கொஞ்சம் உரத்த குரலில் சொன்னார்.

''வேறே எங்கேயாச்சும் நிச்சயமாகிவிட்டதா?... அதனாலே அப்படிச் சொல்றீங்களா?'' — உங்க அத்தான் விடலை. கேட்டார். டாக்டருக்கு இப்போ கொஞ்சம் கோபம் வந்திருச்சு. வாசல்லே போறவனுக்குக்கூடக் கேக்கறாப்பலே உரக்கப் பேசிட்டார். ''இதோ பாருங்கய்யா! எனக்கு இப்போ என் தொழிலை நல்லா வளர்த்துக்கணும். நல்ல டாக்டர்னு பேர் எடுக்கணும் என்கிறதுதான் முக்கியமாக இருக்கு. கல்யாணத்தைப் பத்தி எனக்குச் சிந்திக்கக்கூட பொழுதில்லை. அப்படி எண்ணம் வரும் போது உங்ககிட்ட ஆலோசனை கேட்பேன்.''

''உங்களுக்குக் கோபம் வந்திருச்சு...'' உத்தரீயத்தை உதறிப் போட்டுக் கொண்டு படு வேகமாகக் காரில் ஏற வந்தார். வாசல் படி இடறி அப்படியே விழ இருந்தார். எனக்குச் சிரிப்புத் தாங்கலை. ஆனாலும் அடக்கிக்கிட்டு 'ஐயா...'ன்னு கத்திக்கிட்டு ஓடி அவரைத் தாங்கிப் பிடிச்சுக்கிட்டேன்.''

''காலையிலே தலை முழுகிவிட்டு சுத்த பத்தமாக் கிளம்பிக் கோயிலுக்குக் கிளம்பினவனைக் குளிக்காதவன் நீ தொட்டுட்டியேன்'னு கத்திட்டுப் பாய்ஞ்சு காரில் ஏறிப் பறந்துட்டார். அவர் தடுக்கி விழப்போனதை இப்ப நினைச்சாலும் எனக்குச் சிரிப்புத்தான் வருது. உங்கத்தானுக்கு ஆனாலும் ரொம்ப அவசரம். — பேச்சு — நடை எல்லாத்திலும்.



தந்தை: ''ஏண்டா பக்கத்து வீட்டுப் பையன் கணக்குல எவ்வளவு மார்க் வாங்கியிருக்கான் நீயும் இருக்கியே மண்டு''

பையன்: ''அவுங்க அப்பா அவனுக்குச் சரியாய்ச்சொல்லிக் கொடுக்கிறாரு'' -சி. ராஜராஜன்

ஒரு வேகம். அன்னிக்கு அந்தக் கார் தெருவிலே புழுதியைக் கிளப்பிக்கிட்டு எப்படி வேகமாப் பறந்துச்சு தெரியுமா அம்மா!'' சிரித்தான் அவன்.

சந்தியாவுக்கு இப்போது புரிந்தது— அன்று அவள் தயாராக வைத்திருந்த கீரைத் தண்டுகளை எடுத்துப் போக அத்தான் குமரேசன் அந்தக் கோபத்தில்தான் அவர்கள் வீட்டுக்கு மறுபடி வரவில்லை.

அவரது முயற்சி தோல்வி அடைந்து விட்டதைக் குறித்து அவருக்கு அடக்க மாட்டாத கோபம். அப்படியே திருச்சிக்குத் திரும்பி விட்டார் போலும்!

ஆமாம்! அவனுக்கு மட்டுமென்ன?... கோபம் கொள்வதில் அவள் எந்த வகையில் அத்தான் குமரேசனுக்குக் குறைந்தவள்?

பூதலூர் பம்பு செட் ரிப்பேர் கடையருகே கிரிதரனைச் சந்தித்தபோது அவனிடம் அவள் கோபமாகப் பட்டும் படாமலும் பேசவில்லையா? சட்டென்று விடைபெற்றுக் கொண்டு திரும்பிப் பார்க்காது நடக்கவில்லையா?

''அம்மா... வேலையெல்லாம் முடிச்சுட்டேன்.... நான் வரேன்....'' சொல்லிக் கொண்டு மாரப்பன் கிளம்பி விட்டான்.

வேடிக்கையாக — ஆனால் துளியும் மரியாதை குறையாது அவனிடம் நேச உறவுடன் பேச நெருங்கிய அவரிடம் நான் அப்படிப் பட்டென்று பதில் சொல்லிவிட்டு நகர்ந்தது ரொம்பத் தப்பு. ஆபத்துக்கு ஓடிவந்து உதவி அளித்ததற்காவது கொஞ்சம் நன்றி உணர்வோடு பேசியிருக்க வேண்டும்.... எண்ணியபடியே அவள் புல் கட்டை அவிழ்த்து நன்றாக உதறிவிட்டுச் செல்லக்குட்டிக்கும் அதன் கன்றுக்கும் விநியோகித்தாள். தோட்டத்தின் கடைசியாக இருந்த கீரைப் பாத்திகளைப் பார்வையிட்டபடி அவள் மெல்ல நடந்து கொண்டிருந்தாள்.

ஸாம்சனின் உற்சாகக் குரைப்பு அவளைத் திரும்பிப் பார்க்கச் செய்தது. பாத்தியோரமிருந்த குறுகிய பாதையில் டாக்டர் கிரிதரன் அவளை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

''அன்னிக்கு நீங்க சொன்னதிலிருந்து இந்தத் தோட்டத்தை மறுபடி பார்க்கணும்னு ஓர் ஆவல். தண்ணீர் இல்லாமல் செடிகளெல்லாம் வாடிப்போச்சுதேன்னு' கவலையாக இருந்தது. இன்னிக்கு என் கிளினிக்கைச் சீக்கிரம் மூடிட்டு பூதலூருக்குக் கிளம்பிட்டு இருக்கேன்.— போகும் வழியிலே பார்க்கலாம்னு வந்தேன். நீங்க தோட்டத்தில்தான் இருக்கிறீங்கன்னு அத்தையம்மா சொன்னாங்க...'' கூறியபடி மென்மையாகப் புன்னகைத்தான். தோட்டத்தைச் சுற்றிப் பார்வையை ஓடவிட்டான்.

''நல்ல வேளை... என் கண்கள் அத்தனை பொல்லாதவைகளாக இல்லே. தோட்டம் ஓரேயடியாகக் காய்ஞ்சு போயிருக்கும்னு கவலைப்பட்டுக் கொண்டுதான் வந்தேன். அன்னிக்கு ரொம்ப சூடுதான்....'' — சிரித்தான் அவன்.

''இன்னும் மழைகாலம் ஆரம்பமாகலே— வெய்யில் கொஞ்சம் கடுமையாகவே காய்கிறது....'' என்றாள் அவள்.

''வெய்யிலைச் சொல்லலே — உங்கள் வார்த்தைகளைச் சொன்னேன். அன்னிக்கு உங்களுக்குப் பள்ளிக்கூடத்தில் யார் மேலேயோ கோபம். என்கிட்டப் பேசினப்போ வார்த்தைகள் சூடாகத் தெறித்ததைக் கவனிச்சேன்....''

முகம் சிவந்து போனாள் அவள். அவளைக் கிரிதரன் எப்படிப் பரிகசிக்கிறான்?....

''வாங்க உள்ளே போகலாம். அத்தையும் நானும் இன்னும் காப்பி பலகாரம் சாப்பிடலே. நீங்களும் எங்களோடு கொஞ்சம் சாப்பிட்டுட்டுக் கிளம்பலாம்.'' — உபசரித்தபடி முன்னால் நடந்தாள். ஸாம்சன் அவர்கள் நடுவே உற்சாகமாகக் குரைத்துக் குதித்தபடி ஓடிக் கொண்டிருந்தது.

''ஆமாம்... உங்களுக்குச் சகோதரர்கள் யாரும் கிடையாதாமே... உங்க அப்பாவுக்கு நீங்க மூன்று பெண்களாம்.''

''யார் சொன்னது இந்த விவரமெல்லாம்?'' — சிரித்தபடி கேட்டாள் சந்தியா.

''உங்க அத்தான் குமரேசன் அவர்கள்தான் சொன்னார்.''

''உண்மைதான். எங்கப்பாவுக்கு நாங்கள் மூன்று பெண்கள். மூத்த அக்கா விடியற்காலையில் பிறந்தாங்களாம். அதனால் அவர்களுக்கு உஷான்னு அப்பா பேர் வச்சார். விடியற்காலை வேளை போல அவங்க குளுமையான குணமுடையவங்க. இரண்டாவது அக்கா ஒரு கோடை நாளின் போது பட்டப் பகலில் கடும் வெய்யிலில் பிறந்தாங்க. அவங்களுக்குச் சூர்யான்னு அப்பா பேர் வச்சாங்க... பேரைப் போலவே அப்பப்பா.'' அவள் முடிக்கவில்லை.

''நீங்க ஒரு சாயங்கால வேளையின்போது பிறந்திருக்கணும். அதனாலே உங்கப்பா உங்களுக்குச் சந்தியான்னு பேர் வச்சார் இல்லையா...?''

''ரொம்பச் சரியாச் சொல்லிட்டீங்களே!''

''நாளின் பெரும்பாகத்தைக் கடும் உழைப்பில் கழிக்கும் எனக்குச் சந்தியா வேளை ரொம்பப் பிடிச்ச நேரம். சென்னையில் கடற்கரை மணல் மீது இருட்டும் மட்டும் உட்கார்ந்திருப்பேன். இங்கே காவேரிக் கரை ஓரம் இருட்டும் மட்டும் ஜில்லுன்னு சுகமா வீசும் காத்தை அனுபவிச்சுக்கிட்டு நடப்பேன் — சந்தியா வேளை மிகவும் அழகான நேரம். ஆனால் அதே சமயம் மழைக் காலத்தில் கும்முனு இருட்டிக் கொண்டு இடியும் மின்னலுமாக — மழை கொட்டும் போது அப்பப்பா... அந்த சந்தியா பெண்ணுக்கு எத்தனை கோபம்னு ஒரு கவிதையே எழுதிடலாம்.'' — உரக்கச் சிரித்தான்.

''எனக்கு முன்கோபம் அதிகம். பொறுமை கொஞ்சம் குறைவுதான். சீக்கிரம் புரிஞ்சுக்கிட்டீங்களே...'' அவளும் சிரித்தாள்.

''எனக்குப் பொறுமை அதிகம். சட்டுனு கோபம் வராது....''

''ரொம்ப எதிர்மாறான குணம். இல்லையா?'' — அவள் கேட்டபோது அவளைத் தன் கண்களால் ஊன்றிப் பார்த்தான்.

''எதிர்மாறான குணங்கள்தான் ஆழ்ந்த நட்புக்கு அஸ்திவாரம்னு நினைக்கிறேன்.''

அவன் சொல்லி முடிப்பதற்குள் குப்பென்று சிவந்துவிட்ட தன் முகத்தை அவள் மறுபக்கம் திருப்பிக் கொண்டாள்.

(தொடரும்)

ஒரு பிரார்த்தனை

பரீட்சைகள் நெருங்குகின்றன. சீக்கிரமே முடிந்து விடும். பின்னர் விடுமுறை. எதிர்பார்ப்பிலேயே ஓர் ஆனந்தம். இன்று கூண்டுக் கிளி. நாளை சுதந்திரப் பறவை. மறுபடி கல்லூரி — பள்ளி திறக்கும்வரை. புத்தகங்களைக் கையிலும் பாடங்களைத் தலையிலும் இரு மாதங்களுக்குச் சுமக்க வேண்டாம். இறைவா, பரீட்சைகள் ஒத்திப்போடப்படாமல் எம்மைக் காப்பாற்று!

மேலட்டை வண்ணப்படம்: ஊரலிங்கம்





என் நாடக வாழ்க்கை ஒரு நாடகமல்ல!

சமீபத்தில் திரையிடப்பட்டுள்ள 'வடைமாலை' திரைப்படம், தமிழ்த் திரைப்பட உலகையே ஒரு கலக்குக் கலக்கப் போகிறது என்று சொல்ல வரவில்லை; அதில் நடித்த நடிகர்கள் விருது பெறப் போகிறார்கள் என்று ஜோஸ்யம் சொல்லவில்லை. ஆனால் அதில் நடித்த பூர்ணம் விசுவநாதன் பூர்ணமாகக் கனிந்திருக்கிறார். அவருக்குப் பாராட்டுச் சொல்லத்தான் இந்தப் பேட்டி. ஆனால் பேட்டியில் அவர் அதை ஒத்துக்கொள்ளவில்லை. ஏன்?

நான் முதன் முதலாக நாடக மேடை ஏறிய நாளிலிருந்து இன்றுவரையில் ஒவ்வொரு பாத்திரத்தையும் சின்சியராகச் செய்கிறேன். ஆனால் சில பாத்திரங்கள் எனக்கு, என்னுடைய கொள்கைகளுக்கு ஒத்துப் போகும்போது அதில் கொஞ்சம் நான் கலந்து விடுகிறேன். அதனால் உங்களுக்கு நான் மற்ற எல்லாவற்றையும்விட அதில் சிறப்பாக நடித்தது போலத் தோன்றலாம். அப்படிப் பட்ட பாத்திரங்களுள் ஒன்றுதான் இந்த வடைமாலை வியாசராயர் பாத்திரம்''

என்கிறார் பூர்ணம் விசுவநாதன். தென்காசி வழக்கறிஞரின் மகனான இவருக்கு நாடக உலகில் எப்படி ஆசை ஏற்பட்டது?

''எங்கள் குடும்பமே கொஞ்சம் நாட்டுப் பற்று, கவிதைப் பித்து என்றெல்லாம் அலையும். அப்பா பாரதியாரை உருகி உருகிப் படிப்பார். ராஜாஜி சொன்னது வேதவாக்கு. முப்பதுகளில் ராஜாஜி இந்தி படிக்கச் சொன்னார். இந்தியோட முக்கியத்துவத்தை எல்லோருக்கும் தெரியப்படுத்தணும் என்றார். எங்கள் குடும்பத்தில் இருப்பவர்களும், நண்பர்களும் சேர்ந்து இதற்காக நாடகம் போடத் தீர்மானித்தோம். எனக்கும் ஒரு பங்கு கிடைத்தது. அப்படி ஆரம்பிச்சது தான் இப்போ இந்த நிலைமைக்கு வந்திருக்கிறேன்.''

பூர்ணம் டில்லியில் பல ஆண்டுகள் அரசாங்க வேலையில் இருந்தவர். வானொலி நிலையத்திலும் பின்னர் பி.ஐ.பி.யிலும் வேலை செய்து சமீபத்தில் ஓய்வு பெற்றார். ஆனால் எந்த நிலையிலும் நாடகத்தை விட்டதில்லை. அமைச்சர்களோ மேல் அதிகாரிகளோ பூர்ணத்திடம் உத்தியோகம் தொடர்பாகப் பேசும் போது கூடவே, 'உங்கள் நாடகமெல்லாம் எப்படி இருக்கிறது' என்று கேட்கும் அளவுக்கு நாடகத்தோடு ஒன்றிப் போயிருந்தார்.

''உங்கள் சர்வீஸில் கூட நாடகத்தை விடவில்லை என்கிறீர்கள். திரைப்படத்திலும் நல்ல பாத்திரம் கிடைத்தால் வெளுத்து வாங்குகிறீர்கள். இவ்வளவு திறமை இருக்கும் நீங்கள் முழுமையாகக் கலைத் துறையையே தேர்ந்தெடுத்திருந்தால் இன்றைக்கு இன்னும் புகழோடு, பொருளோடு இருக்கலாமே... இப்படி ஓர் எண்ணம் — நாம் 'மிஸ்' பண்ணிவிட்டோம் என்ற வருத்தம் உங்களுக்கு எப்போதாவது ஏற்பட்டிருக்கிறதா?''

பூர்ணம் இதை முழுமையாக மறுத்தார்.

''என்னுடைய அதிர்ஷ்டமோ என்னமோ என்னுடைய வேலையும் என் டேஸ்ட்டுக்குத் தகுந்த மாதிரி இருந்தது. ஆல் இன்டியா ரேடியோ, பிஐபி இவற்றில் நாடகங்கள் எழுதுவது, ஸ்கிரிப்ட் தயாரிப்பது, புரோகிராம் பண்ணுவது என்று இருந்ததால் இவையெல்லாம் எனக்கு நல்ல பயிற்சி கொடுத்தன. மற்றொன்று; நாடகம் என்று வந்துவிட்டால் பொருளுக்கு ஆசைப்படக் கூடாது. நாடகத்துக்கு ஏதாவது ஒன்று தேவை என்றால் அதை வீட்டிலிருந்து எடுத்துக்கொண்டு போகக் கூடத் தயங்குவது இல்லை. இதிலே பணம் பண்ண என்ன இருக்கிறது? முழுக்க முழுக்க ஆர்வம் மட்டும் தான்....''

''திரைப்படத் துறையைப் பொறுத்த வரை நீங்கள் சொல்லும் பணச் சிரமம் இராதே!''

''இருக்கலாம். ஆனால் நான் தேர்ந்தெடுத்துக் கொண்டது நாடக வாழ்க்கை தான். பாதை பிரிந்து சினிமா என்னும் ஒத்தையடிப் பாதையிலும் போகிறேன். ஆனால் என் குறிக்கோள் சினிமாவல்ல!''

''வடை மாலையைப் பொறுத்தவரையில் உங்களுடைய அனுபவம் எப்படி இருந்தது?''

''அது வாலியினுடைய அருமையான கதை. விகடனில் வெளியான அந்தச் சிறு கதையின் முடிவைப் படத்தில் மாற்றி விட்டார்கள். அந்த முடிவே இருந்திருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும் என்பது என் கருத்து வாலியிடம் கேட்டால் கொஞ்சம் காம்ப்ரமைஸ் செய்து கொண்டுதான் போக வேண்டும் என்கிறார்.''

''ஆஞ்சநேயர் பெருமை சொல்லும் அந்தப் படத்தில் மறக்க முடியாத சம்பவங்களும் நடந்திருக்குமே...''

''குறிப்பாக அந்தக் கிராம மக்கள் ஒத்துழைத்ததைத்தான் சொல்ல வேண்டும். படத்தின் கடைசியில் அந்தக் கிராம மக்களின் எண்ணிக்கை அளவுக்கு வடைமாலை சாத்த வேண்டும். அதைச் சொன்னவுடன் இரவெல்லாம் கண் விழித்திருந்து செய்து மறுநாள் பிரம்மாண்டமான வடை மாலையைத் தயாரித்து விட்டார்கள்...''

''வாலியினுடைய வசனங்களில் உங்களுக்குப் பிடித்தமானது எது?''

''அவர் ஒரு சிறந்த எழுத்தாளர். இதிலே ஒரு ஆவேசத்தோடு எழுதியிருக்கிறார். அதனால்தான் பல இடங்களில் அப்படியே பட்டுத் தெறிக்கிறது. குறிப்பாக ஜாதி மத ஒற்றுமைக்காக அவர் சொல்லும் 'வடை மாலை' விளக்கம் அற்புதம். ஊரில் எத்தனை பேர் இருக்கிறார்களோ அத்தனை வடைகளை அவரவர் கொண்டுவர வேண்டும். அனைத்தையும் ஒரு நூலில் கோத்து வடைமாலையாக்கி நைவேத்தியம் செய்வார்கள். பிறகு எல்லோருக்கும் ஒவ்வொரு வடை கிடைக்கும். எந்த ஜாதிக்காரனுடைய வடை எவனுக்கும் போகலாம் என்று அந்தக் கோவில் அர்ச்சகர் சொல்வதாக எழுதியிருந்தார்.''

''இந்தப் படம் என்றில்லை. பொதுவாகவே இப்போதெல்லாம் நாடகம், சினிமா எல்லாவற்றிலும் குறிப்பிட்ட ஒரு சமூகத்தையே குறைகூற எடுத்துக்கொள்கிறார்களே. இதிலும் அப்படித்தான் செய்திருக்கிறார்கள். ஏன் மற்ற சமூகங்களில் தவறே நடக்காதா?''

''இந்தப் படத்தைப் பொறுத்த வரை இதில் சொல்லியுள்ள சமூகத்தைக் குறை மட்டும் கூறவில்லை. வியாச ராயர்தான் எவளோ ஊர்பேர் தெரியாத அனாதையை மருமகளாக்கிக் கொள்ளும் சீர்திருத்தவாதியாகவும் விளங்குகிறார். எனவே இரண்டு பக்கமும் காட்டப்பட்டுள்ளது. வேறு சில திரைப்படங்களில் நீங்கள் சொன்ன நிலை இருக்கலாம், ஆனால் நாடகவுலகில் இந்த நிலைமை இல்லவே இல்லை. அந்த பாஷையைப் பயன்படுத்திக் கொள்கிறார்களே தவிர அவர்களை இழிவுபடுத்துவதாக இல்லை. மொழியைக் கூடப் பயன்படுத்துவதன் காரணம் அந்த நாடகத்தை எழுதுபவர் அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம்.''

''நாடக உலகம் சீரழிந்து விட்டது. வெறும் பொழுதுபோக்கு, கேளிக்கைக்காக மட்டுமே நாடகங்கள் நடக்கின்றனவே?''

''நீங்கள் சொன்னது போல் ஒரு காலத்தில் இருந்தது உண்மை. சமீப காலமாக நாடக உலகம் மாறிப்போய்விட்டது. கோமலின் தண்ணீர், தண்ணீர், மெரினாவின் குடும்பப் பிரச்னைகளைப் பேசும் நாடகங்கள், நாங்க போடும் 'நரேந்திரனின் கொலை வழக்கு' எல்லாம் ஒரு குறிக்கோளைக் கொண்டுள்ளவை. சோ பேசாத சமுதாயப் பிரச்னைகளா? விசு, மௌலி எல்லாம் வெறுமனே சிரிக்கமட்டுமா எழுதுகிறார்கள்? சிரித்து விட்டுப்போன ஆடியன்ஸ் இல்லை இப்போது. நாம் எவ்வளவு சாட்டையடி கொடுத்தாலும் வாங்கிக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். இப்போது இவர்கள் கேட்க ஆரம்பித்து விட்டார்கள். இனி சிந்தித்து; மாறும் காலம் வெகு தூரத்தில் இல்லை என்று நினைக்கிறேன்....''

''நாடகங்களைச் சமுதாயப் பிரக்ஞையோடு நடத்துகிறேன் என்கிறீர்களே! ஆனால் ஆடியன்ஸ் சிடி ஆடியன்ஸ்தானே! உண்மையில் சமுதாயத்தைத் திருத்த வேண்டுமானால் அதைக் கிராமத்தில் அல்லவா செய்ய வேண்டும்? ஆனால் அங்கே நீங்கள் எட்டிக்கூடப் பார்ப்பதில்லையே?''

''நான் இதை முழுமையாக ஒத்துக் கொள்கிறேன். எங்களால் கிராமத்துக்குப் போக முடியவில்லைதான். எங்களுடைய செட்டிங்ஸை எங்கே போடுவது? அரங்கு எங்கே இருக்கிறது? நீங்கள் இப்போது சொல்லும் இந்தப் பேச்சு நாடகவுலகமே சிந்திக்க வேண்டியதுதான். அரசாங்கம் கொஞ்சம் ஒத்துழைத்தால் இது முடியும் என்று நினைக்கிறேன். ஒவ்வொரு கிராமத்திலும் நாடக அரங்கைக் கட்டித் தந்து, ஓரளவு எங்களுக்கும் பொருளுதவி செய்ய வேண்டும். லாப நோக்கமில்லாமல் நாங்களும் நாடகம் நடத்தத் தயார்தான்!''

''ஒவ்வொரு கிராமத்திலும் நாடக அரங்கமா? சினிமாவை விட உங்களால் என்ன பெரிதாகச் சாதித்துவிட முடியும்?''

''கண்டிப்பாக முடியும். சினிமா பவர்ஃபுல் மீடியாவாக இருக்கலாம். ஆனால் ஒரு பிம்பமாக உருவத்தைப் பார்ப்பதை விட ரத்தமும் சதையுமாக ஒரு மனிதன் அரங்கேறிப் பேசினால் அதனுடைய சக்தி அதிகம் என்பது என்னுடைய அசைக்க முடியாத கருத்து.''

பேட்டி : மஞ்சுளா ரமேஷ்
படம் : சுபா சுந்தரம்

ஆன்றோர்வாக்கு விடை :

1. இக்பால்
2. —பிராங்கோய்ஸ் ராபில்லோயிஸ்
3. ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்
4. விக்டர் ஹியூகோ
5. மாலியேர்

ஹைய்யா! ஹைய்யா!





அவன் : "மகனுக்குக் கமலஹாசன்னு பெயர் வைக்கிறதா ரஜினிகாந்த்னு பெயர் வைக்கிறதான்னு எனக்கும் என் மனைவிக்கும் பலத்த வாக்குவாதம்!"

இவன் : "அப்புறம் என்ன ஆச்சு?"

அவன்: "இரண்டு பேருக்கும் திருப்தியா ரஜினிஹாசன்னு பெயர் சூட்டிட்டோம்!"

—உ. ராஜாஜி




"மண்டைக் காடில் நடந்த நிகழ்ச்சியை நேரில் பார்த்துக் கட்டுரை எழுதிட்டு வரச்சொன்னால் மண்டையில் கட்டுடன் வந்து நிற்கிறே?"

பொக்கிஷம்








ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி நினைவை அவர் பிறந்த
தினமான இன்று இங்கும் கொண்டாடுகின்
றோம். நினைவில் தமிழர் அனைவரும் கவிதை
அனுபவிப்போம்.

பாரதிதாசன்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அப்போது தி. நகர் ராமன் தெருவில் வசித்துக் கொண்டிருந்தார். செப்டம்பர் 11ம் தேதி பாரதி இறந்த தினத்தை 'பாரதி விழா' எனக் கொண்டாடி வந்தனர். பாரதியின் பிறந்த தினமான டிசம்பர் 11ம் தேதியையும் 'பாரதி விழா' வாகக் கொண்டாட வேண்டும் என்பது என் ஆசை. 1962 செப்டம்பர் இரண்டாம் தேதி பாரதிதாசனை நானும், பாரதி இளைஞர் சங்கத்தின் செயலாளர் மணியும் சந்தித்து, பாரதியார் பிறந்த தினத்தையும் கொண்டாட வேண்டிய அவசியம் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். பாரதி மீது அன்பும் மரியாதையும் கொண்ட பாரதிதாசன் எங்களது கருத்தைஆமோதித்து 'ஒரு பேப்பரில் இதை எழுதித் தருகிறேன். பத்திரமாய் வைத்துக் கொள்' என்று கூறி எனக்கு ஒரு கடிதம் போல எழுத ஆரம்பித்தார். நான் உடனே 'இதை என்னிடம் சொல்வது போல் நீங்கள் எழுதித் தரவேண்டாம். தமிழ்ப் பேசும் உலகுக்கே ஒரு செய்தியாய் எழுதிக் கொடுத்து விடுங்கள். நான் என் ஆயுள் முழுதும் பாதுகாக்கிறேன்' என்று சொன்னேன். அவரும் அப்படியே எழுதித் தந்தார்.

இதுவரை பத்திரிகைகளுக்கு வெளியிடும்பொருட்டுத் தராத இதை 'பொக்கிஷம்' பகுதிக்குத் தருவதற்குக் காரணம் – இன்று பாரதிதாசனின் சீடர்கள்– பகுத்தறிவுவாதிகள் என்று சொல்லிக் கொள்பவர்கள் சிலர் உலக மகாகவி பாரதிக்கு இழுக்கு ஏற்படுத்தும் வண்ணம் பேசியும், எழுதியும் வருவது என் மனத்துக்கு மிக்க வருத்தத்தை ஏற்படுத்துவதுதான். இந்தச் சமயத்தில் பாரதியாரைப் பற்றி பாரதிதாசன் எழுதித் தந்ததை வெளியிட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்பது என் அபிப்பிராயம்'' என்கிறார் பாரதி இளைஞர் சங்கத் தலைவர் ராமமூர்த்தி.

பேட்டி: சந்திரமௌலி

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press Race Course Road Guindy. Madras-600 032. (Phone: 431543)
Assistant Editor: P.S. Mani Layout Artist: Nambi Editor: K. Rajendran


பிரதான நடிகர் பூர்ணம் விசுவநாதனும்
பூர்ணம்
பேட்டிக்
கட்டுரை.
இந்த இதழில்


பெண்கள் தங்கள் மனோபாவங்களை
அழகை அழகான வழிகளில்
வெளிப்படுத்துகிறார்கள்
விமல்
அவற்றில் ஒன்று.
இந்தப் புடவைகள் :
100% பாலியெஸ்டர் ட்ரான்ஸ்பர் பிரிண்டு புடவைகள்
VIMAL
A RELIANCE PRODUCT